உ

கவிசக்கரவர்த்தி

ஒட்டக்கூத்தர்

பாடியருளிய

மூவருலா

151

க. விக்கிரமசோழனுலா

உ. குலோத்துங்கசோழனுலா

௩. இராசராசசோழனுலா

பதிப்பாசிரியர்
சென்னை அடையாற்றுக் கல்லூரித் தமிழாசிரியர்
பண்டித அ. கோபாலையர்.

"செந்தமிழ் மந்திரம்" புத்தகசாலை
மயிலாப்பூர், சென்னை.

குரோதனஹூ பங்குனிமீ
பதிவுசெய்யப்பெற்றது.

PRINTED AT
THE B. N. PRESS,
MOUNT ROAD, MADRAS.

முகவுரை.

"உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்."

கோவை யுலா வந்தாதிக்கு ஒட்டக்கூத்தன் என ஆன்றோர் புகழும் பெரும் புலவராம் ஒட்டக்கூத்தர், சோழவரசர்களாகிய விக்கிரமன், குலோத்துங்கன், இராசராசன் என்னும் மூவரைத் தனித்தனி தலைவராகக் கொண்டு பாடிய உலாக்கள் மூன்றும் 'மூவருலா' என வழங்கப்பெறுவன. இம்மூவரும் கலிங்கத்துப்பரணி கொண்ட அபயனாகிய முதற் குலோத்துங்கன் வழித்தோன்றல்களாவர். கூத்தர் இம் மூவராட்சிக்காலத்துமிருந்தவ ராதலின், இவ்வுலாக்களை அவ்வப்போது பாடி அவ்வவர் முன்னிலையிலேயே அரங்கேற்றினர்.

இவ்வுலாக்கள், சேரமான்பெருமா ணாயனார் சிவபிரான் மீது பாடிய 'ஆதியுலா' ஒழிந்த ஏனை யுலாக்களுக் கெல்லாம் காலத்தாலும் சொற்சுவை பொருட்சுவைகளாலும் முற்பட்டனவாகியும், சோழவரசர் பலரி னருஞ்செயல்கள், அவர் குடிப்பெருமை முதலியவற்றை அறிதற்குக் கருவியாகியும் விளங்குகின்றன. 'உலா' என்பது தமிழ்ப் பிரபந்த வகைகளிலொன்றாம். இதனிலக்கணம்,

"பேதை முதலா வெழுவகை மகளிர்கண்
டோங்கிய வகைநிலைக் குரியா னொருவனைக்
காதல்செய் தலின்வருங் கலிவெண் பாட்டே. (சூ. உகரு)

"முதனிலை பின்னெழு நிலையுலா வெண்கலி. (சூ. உகசு)

"குடிநெறி மரபு கொளல்கொடை விடியல்
நன்னீ ராடல் நல்லணி யணிதல்
தொன்னக ரெதிர்கொளல் நன்னெடு வீதியில்
மதகளி றூர்தல் முதனிலை யாகும். (சூ. உகசு)

"ஏழு நிலையு மியம்புங் காலைப்
பேதை பெதும்பை மங்கை மடந்தை
அரிவை தெரிவை பேரிளம் பெண்ணெனப்
பாற்படு மகளிர் பருவத் தாதல்
நோக்கி யுரைப்பது நுண்ணியோர் கடனே." (சூ. உகஅ)

எனவரும் பன்னிரு பாட்டியற் சூத்திரங்களாற் பெறப்படும். இம் மூன்றுலாக்களும் மேற்கூறிய விலக்கணங்கள் நிரம்பப் பெற்றனவாய்ச் சொற்பொருட் பொலிவாற் சிறந்திருத்தலும், அவற்றுள்ளும் இராசராசனுலா மிகச்சிறந்து நிற்றலும் இவற்றை நுணுகிப் படிப்பார்க்குப் புலனாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இவ்வுலாக்களுள், முன்னதாகிய விக்கிரம சோழனுலா, முதலில் 1914-ம் வருஷம் மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப் பிரசுரமாக வெளிவந்தது. ஏனைய விரண்டுக்கும் சுத்தப் பிரதி கிடையாமையாற்போலும் அவை யிதுகாறும் வெளிவந்தில. சென்ற 1923-ல் நான் கலிங்கத்துப் பரணியைப் பதிப்பித்து வெளியிட்டபோது, அதனையடுத்து அதனோடு இயைபுடைய இவ்வுலாக்கள் மூன்றனையும் ஒருங்கு சேர்த்து வெளியிட வேண்டுமென்று நண்பர் சிலர் தூண்டியதனால் அந் நோக்கத்துடன் முயன்றும் சுத்தப் பிரதி கிடைத்த லருமையாயிற்று. கிடைத்த பிரதிகள் பலவற்றிலும் பல பாகங்கள் சிதைந்தும், ஒருலாவிலிருந்து மற்றொன்றிற் கலந்தும், பிறழ்ந்துங் கிடந்தன. அதனால் ஊக்கங்குன்றி அப்பிரதிகளைக் கொண்டு ஒருவாறு சிறிது சிறிதாகப் பரிசோதித்து வருகையில், சென்னை அரசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலைக்குப் புதிதாக வந்த இராசராசனுலாப் பிரதியொன்று கிடைத்தது. அது அவ்வுலாவிலுள்ள பிறழ்ச்சிகளை ஒழுங்குபடச்

செய்து பல சிறந்த பாடங்களையுந் தந்தது. அதன் பின் ஊக்கங் கொண்டு பரிசோதித்துச் சிக்கறுத்துக் குலோத்துங்கசோழனுலாவையும் ஒருவாறு ஒழுங்குபடுத்தி வைத்தேனாயினும், குலோத்துங்க னுலாப் பலவிடங்களிற் சிதைந்தும், இராசராசனுலாவின் பிற்பகுதியில் இரண்டோரிடங்கள் ஐயத்திற் கிடமாகியும் இருந்தமையால், பிறழ்ச்சியின்றிப் பூர்த்தியான பிரதியொன்றேனுங் கிடைத்தபின்னரே பதிப்பிக்கவேண்டுமென்றிதுகாறுந் தாழ்த்தேன்; கிடைத்திலது. அதன்மேல், எவ்வாறாயினும், உள்ளவரையிலாவது சிதைந் தொழியாமல் வெளியிடலாமோ வென் றெண்ணியிருந்தபோது, செந்தமிழ் உ௩-ஆம் தொகுதி ௰, ௰க-ஆம் பகுதிகளில் ஸ்ரீமான். S. வையாபுரிப் பிள்ளை B. A., B. L. அவர்கள் வெளியிட்ட இராசராசனுலாவும், ௸ தொகுதி ௰உ-ஆம் பகுதியில் அவர்கள் அவ்வுலாவைப் பற்றி யெழுதிய ஒரு குறிப்பும் என்னெண்ணத்தை யுறுதிப்படுத்தின. ஆகவே ஒருவாறு துணிந்து பதிப்பிக்கத் தொடங்கினேன்.

அவ்வாறு பதிப்பிக்குங்கால், சொல், சீர் முதலியன குறைந்து அவை நிச்சயிக்கக் கூடாதனவாயிருந்த விடங்களில் ....இவ்வடையாள மிட்டு இடம் விட்டும், நிச்சயம் இவ்வாறிருக்கலாமெனத் தோற்றிய விடங்களில் () இவ்வடையாளத்தினுள் எழுத்துக்களைச் சேர்த்தும், மிகையாகத் தோற்றிய விடங்களில் அவற்றை [] இவ்விருதலைப் பகரங்கட் குட்படுத்தியும் பதிப்பித்துள்ளேன். குலோத்துங்கனுலாவிலும் இராசராசனுலாவிலும் சிதைவும் ஐயப்பாடு முடையவாய்த் தெளிவுபடாத விடங்கள் பிரதிகளிலுள்ளவாறே பதிப்பிக்கப்பெற்றுள்ளன.

இடையே உலாத்தலைவர் பெயர்கள் வருமிடத்து அவை தடித்த (Antique) எழுத்திற் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

பிரதிபேதங்கள் அவ்வப் பக்கங்களிற் கீழே காட்டப்பட்டிருக்கின்றன.

கலிங்கத்துப் பாணியிலும் இவ்வுலாக்களிலுங் கண்ட சோழராச பாரம்பரியம் ஒன்றுக்கொன்று முறையில் வேறுபாடுடையனவா யிருத்தலின், அவற்றை விளக்கும் பொருட்டு வமிசாவளிகள் நான்கு, புத்தகத்தினீற்றிற் சேர்த்திருக்கிறேன்.

இப்பதிப்புக் குதவியாயிருந்த பிரதிகள்:—

மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப் பிரசுரமாகிய விக்கிரமசோழனுலா அச்சுப்பிரதி ... க

சென்னை, இராசதானிக் கல்லூரி உதவிச் சரித்திரபோதகாசிரியர் மகா-ா-ா-ஸ்ரீ A. V. வேங்கடராம ஐயரவர்களுதவிய காகிதக் கையெழுத்துப் பிரதி ... உ

(இவற்றுளொன்று, காலஞ்சென்ற ஸ்ரீமான் தி. செல்வக்கேசவராய முதலியாரவர்களுடையது; பூர்த்தியானது. மற்றொன்று அபூர்த்தியானது.)

சென்னை, ஹைக்கோர்ட்டு வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ T. G. ஆராவமுதையங்காரவர்களுதவிய காகிதக் கையெழுத்துப் பிரதி (பூர்த்தியானது) ... க

சென்னை, மேரிராணியார் கல்லூரித் தமிழாசிரியர் ஸ்ரீமான் கா. நமச்சிவாயமுதலியாரவர்களுதவிய காகிதக் கையெழுத்துப் பிரதி (விக்கிரமனுலாவும், குலோத்துங்கனுலாவும் அபூர்த்தியாகவுள்ளது) ... க

சென்னை, அரசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலைப் பிரதி உ

(இவற்றுளொன்று காகிதப் பிரதி; முன்னையது போன்றது. மற்றொன்று ஏட்டுப்பிரதி; இராசராசனுலா மட்டும் அபூர்த்தியாகவுள்ளது. இதுவே பிறழ்ச்சிகளை ஒழுங்கு படுத்தியது.

தஞ்சைச் சரசுவதிமாலி லுள்ள ஏட்டுப்பிரதி ... க

(இதில் விக்கிரமசோழனுலா மட்டும் ஈற்றில் 16 அடிகள் குறைவாக வுள்ளது.)

செந்தமிழில் ஸ்ரீமான் S. வையாபுரிப்பிள்ளை யவர்கள் வெளியிடுவித்தது ... ... க

மேற் காட்டியபடி தம்மிடமிருந்த பிரதிகளை அன்போடுப கரித்த நண்பர்களுக்கும், சென்னை அரசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலைப் பிரதியைப் பார்த்துப் பிரதி செய்துகொள்ளவும் ஒப்பிட்டுக்கொள்ளவும் வேண்டிய சௌகரியங்களை அன்போடுஞ் செய்வித்த அப்புத்தகசாலைத் தலைவர் (Curator) பிரம்ம ஸ்ரீ. S. குப்புஸாமி சாஸ்திரிகள் M. A., I. E. S. அவர்களுக்கும், அவ்வாறே தஞ்சைச் சரசுவதிமாலிலுள்ள பிரதியைப் பரிசோதித்துக்கொள்ள வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்த ஷை புத்தகசாலைக் கௌரவ காரியதரிசி மகா-ா-ா-ஸ்ரீ T. ஸாம்பமூர்த்தி ராவ் B. A., B. L. அவர்களுக்கும், சமயத்தில் இராசராசனுலாவை வெளிப்படுத்தி என்னை யூக்கிய ஸ்ரீமான் S. வையாபுரிப்பிள்ளை யவர்களுக்கும் என்றும் நன்றி பாராட்டுங் கடப்பாடுடையேன்.

இன்னும் பிறழ்ச்சியில்லாத சுத்தப்பிரதி கிடைப்பின் நன்கு பரிசோதித்து ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் இவற்றை வெளியிட வெண்ணியிருக்கிறேன். பிரதிகளை வைத்திருப்போர் தயைகூர்ந்து அனுப்பி யுதவுவார்களாயின் அவர்கள்பால் மிகவும் நன்றியறிதலுள்ளவனாக விருப்பேன்.

விரைவில் யானெண்ணியாங்கு ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் இவ்வுலாக்கள் வெளிவர இறைவன் திருவருளைச் சிந்திக்கின்றேன்.

'செந்தமிழ் மந்திரம்'
மயிலாப்பூர்,
25—3—1926.

இங்ஙனம்:
அ. கோபாலையன்.

நூலாசிரியரைப் பற்றிய குறிப்புக்கள்.

கலைமக ளருள் பெற்று வரகவியாகிய இவர், இவ்வுலாக் களின்தலைவர் மூவர்காலத்தும் அவர்களிடம் ஸம்ஸ்தான வித்துவானாகவும் ஆசிரியராகவு மிருந்து மேம்பட்டு, 'கவுடப் புலவன்' 'கவிச்சக்கரவர்த்தி' என்னுஞ் சிறப்புப் பெயர்களும் பெற்று விளங்கியவர். *செங்குந்தர் மரபினர். சைவ மதத்தினர். இவ ரியற்பெயர் கூத்தர் என்பது. முதலில் தம் மரபுக் கேற்பக் கூத்த முதலியாரென வழங்கப்பெற்ற இவருக்கு ஒட்டக்கூத்தரெனப் பெயர் வந்ததன் காரணம், இவர் புலவர் பலரோடு ஒட்டி வாதுசெய்தமை யெனவும், செங்குந்தரது அற்ற தலைகள் மீண்டும் ஒட்டப் பாடினமை யெனவும், பலமுறை இரு வேறு பாக்கள் தம்முள் ஒட்டப் பாடினமை யெனவும் பலவாறு கூறுப. இவர் தம்மால் வெல்லப்பெற்ற புலவர்களைச் சிறையிடுவித்து, நவராத்திரிக் காலத்தில் இருவரிருவராகத் தலையோடுதலை சேர்த்து முடிந்து காளி

---

* செங்குந்தராவார் சிவபெருமானதமிசபூதர்களாகிய வீரபாகு தேவர் முதலிய நவவீரர்கள் மரபிற் றோன்றியவர். இவர் வரலாற்றினைக் கூத்தர் பாடிய ஈட்டியெழுபது என்னும் நூலிற் காணலாம். இந்நூலைப் பாடுங்காற் கூத்தர் செங்குந்தரது அற்ற தலைகளாலாகிய தோ ராசனத்தின்மேலிருந்து பாடி முடித்துப் பின்னர்க் கலைமகளருளால் அவ்வற்ற தலைகள் தத்த முடலோடு ஒட்டவும் அவ்வுடல்களுயிர்பெற் றெழவும் பாடினர் என்று அந்நூலால் தெரியவருகின்றது.

சன்னிதியில் வெட்டிப் பலியிடுவிப்பது வழக்கமென்று கர்ண பரம்பரைச் செய்தியொன்று வழங்குகின்றது. " இரண்டொன் ருய் மயிரைமுடிந் திறங்கப் போட்டு, வெட்டுதற்கோ கவி யொட்டக் கூத்த னில்லை விளையாட்டுக் கவிப்பாட்டு விரைந்து பாடித், தெட்டுதற்குத் தமிழறியாத் துரைக ளுண்டு " என் பதும் இதனை வலியுறுத்தும். தமிழ்நாவலர்சரிதையிலும் இவர் கவிஞரைத் தலையறுத்தாரென்பது காணப்படுகின்றது. இவர் தமிழ் மூவேந்தருட் சோழரை உயர்த்தியும் மற்றை யிருவரை யும் இழித்தும் பாடிவந்தாரெனத் தெரிகின்றது. கவிச் சக்கர வர்த்தி கம்பர் இவர் காலத்தவராவர். புகழேந்தியும் இவர் காலத் தவரெனவும் அவரோடு இவர் வாதுசெய்து அவர் பாடிய நள வெண்பாவைப் பலவிடங்களிற் குற்றங் கூறினரெனவும் ஒரு சாரார் கூறுவர்.

இவர் பாடிய வேறு நூல்கள் :—இராமாயண உத்தரகாண் டம், ஈட்டியெழுபது, தக்கயாகப்பரணி, குலோத்துங்க சோ ழன் பிள்ளைத் தமிழ், *அரும்பகைத் தொள்ளாயிரம், புதுவைக் காங்கயன்மேற் பாடிய நாலாயிரக் கோவை முதலியனவாம். இவர் சரித்திர சம்பந்தமான மற்றுஞ் சில விஷயங்கள், செந் தமிழ் உ, ௩-ஆம் தொகுதிகளில் ஸேதுஸம்ஸ்தான மகாவித்து வான் ஸ்ரீ. ரா. இராகவையங்காரவர்களெழுதியுள்ள ஆராய்ச்சி களிற் காணலாம்.

---

* இஃது அரும்பைத் தொள்ளாயிரம் எனவும் வழங்கப்பெறும்.

உலாத்தலைவர்களைப் பற்றிய சில குறிப்புக்கள்.

விக்கிரமசோழன்: இவன் உபய குலோத்தமனாகிய முதற் குலோத்துங்கனுக்கு மகன். கருணாகரத் தொண்டைமானுடன் கலிங்கப்போருக்குச் சென்று வெற்றி கொண்டவன். இதனை, "போர்த் தொழிலா, லேனைக் கலிங்கங்க ளேழினையும் போய்க் கொண்ட, தானைத் தியாக சமுத்திரமே" (விக்கிரம சோழனுலா: ௬௬௦-௬௨) "கலிங்கப், பெரும்பரணி கொண்ட பெருமான்" (குலோத்துங்கசோழனுலா: ௫௫-௫௬) "பலவுந், தரணி யொருகவிகை தங்கக் கலிங்கப், பரணி புனைந்த பரிதி .....விக்கிரம சோழன்" (இராசராச சோழனுலா: ௫௨-௫௬) எனவரும் கூத்தர் வாக்காலும் பிறவற்றாலும் அறியலாம். இவனுக்கு அகளங்கன் என்றும் பெயருண்டு.

குலோத்துங்க சோழன்: இவன், மேற் கூறிய விக்கிரமனுக்கு மகன்; இரண்டாங் குலோத்துங்க னெனப்படுவான். இவன் சைவத்திற் பெரும் பற்றும் வைணவத்தில் வெறுப்புங் கொண்டவன். சிதம்பரத்திலும், காஞ்சீ புரத்திலும் அரிய பெரிய திருப்பணிகள் பலவற்றைச் செய்வித்தவன். இவற்றை, குலோத்துங்கசோழனுலா எ௫-கக௬ அடிகளாலும், இராசராசசோழனுலா ௫எ-௬௬ அடிகளாலும்,

> "முன்றிற் கிடந்த கருங்கடல்போய்
> முன்னைக் கடல்புகப் பின்னைத்தில்லை
> மன்றுக் கிடங்கண்ட கொண்டல்பெற்ற
> மரகத மேருவை வாழ்த்தினவே."

"கூட மெடுத்த குளத்தொடு கோபுர
மாட மெடுத்த பிரான்மகன் வாழியே."

"கோயின்முன் னேழ்நிலை கொண்டதொர் கோபுர
வாயில் வகுத்த பிரான்மகன் வாழியே."

"எண்டரு திக்கினிற் றில்லையி னேர்பெறு
மண்டபம் வைத்த பிரான்மகன் வாழியே."

என இராசராசனைச் சிறப்பிக்கும் தக்கயாகப்பரணித் தாழிசைகளாலும் அறியலாம். இக் குலோத்துங்கன் மீது இவ் வுலாவை யன்றிப் பிள்ளைத்தமி ழொன்றுங் கூத்தர் பாடியுள் ளாரென்று சங்கரசோழ னுலாவினுல் தெரிய வருகின்றது. சேக்கிழாரைக் கொண்டு பெரியபுராணம் பாடுவித்தவனும், கம் பரைப் பிற்காலத்தில் ஆதரித்தவனும் இவனே. இவன் சென்னி குலோத்துங்கன் எனவும், அநபாயன் எனவும் வழங்கப் பெறு வன்.

இராசராசசோழன்: இவன் மேற்கூறிய குலோத்துங்க னுக்கு மகன்; இரண்டாம் இராசராச னெனப்படுவான். கூத் தர் இவன் மீது பாடிய உலாவை யரங்கேற்றுகையில் இவன், உலாவின் கண்ணிதோறும் ஆயிரம்பொன் சொரிந்தானென்று சங்கரசோழனுலாக் கூறுகின்றது. (கண்ணி – இரண்டடி கொண்டது.)

இம்மூவரும் கி. பி. 1118 முதல் 80 வருடத்திற் கதிகம் ஆட்சிபுரிந்தனர். இவர்களுக்கு இராசதானியாயிருந்தது கங்கை கொண்ட சோழபுரம். இவர்கள் செய்த பல தருமங்களையும், இவர் பெருமைகள் பலவற்றையும் அரசாங்கத்தார் வெளியிட் டுள்ள தென்னிந்திய சிலாசாசனங்களிலும், ஸ்ரீமான். து. கோபிநாதராயரவர்க ளெழுதிய சோழவமிச சரித்திரத்திலும் பரக்கக் காணலாம்.

பிழை திருத்தம்.

பக்கம்.	அடி.	பிழை.	திருத்தம்.
க	கஉ	புவிரந்த	புவிபுரந்த
அ	உ0உ	ரொப்பரர்	ரொப்பார்
கசு	ருகூகூ	யாண்கொள்வ	யான்கொள்வ
ருக	கஎ	கோபுரங்கணேரேநெருங்கு	கோபுரமும் விண்மேனெருங்கு
ருரு	வெண்பா.	மீள்வதரிதின்	மீள்வதறியேன்

PRINTED AT THE B. N. PRESS, MOUNT ROAD, MADRAS.

விக்கிரமசோழனுலா.

சீர்தந்த தாமரையாள் கேள்வன் றிருவுருவக்
கார்தந்த வுந்திக் கமலத்துப்—பார்தந்த
வாதிக் கடவுட் டிசைமுகனு மாங்கவன்றன்
காதற் குலமைந்தன் காசிபனு—மேதக்க
மையறு காட்சி மரீசியு மண்டிலஞ்
செய்ய தனியாழித் தேரோனு—மையல்கூர்
சிந்தனை யாவிற்கு முற்றத் திருத்தேரின்
மைந்தனை யூர்ந்த [1]மனுவேனும்—பைந்தடத்
தாடு துறையி லடுபுலியும் புல்வாயுங்
கூடநீ ரூட்டிய கொற்றவனு—நீடிய
மாக விமானந் தனியூர்ந்த மன்னவனும்
போக புவிர்ந்த [2]பூபதியும்—யாகத்துக்
கூற வரிய மனுக்கொணர்ந்து கூற்றுக்குத்
தேற வழக்குரைத்த செம்பியனு—மாறழிந்
தோடி மறலி யொளிப்ப முதுமக்கட்
சாடி வகுத்த தராபதியுங்—கூடார்தந்
தூங்கு மெயிலெறிந்த சோழனு மேல்கடலில்
வீங்குநீர் [3]கீழ்கடலில் விட்டோனு—மாங்குப்
பிலமதனிற் புக்குத்தன் பேரொளியா னாகர்
குலமகளைக் கைப்பிடித்த கோவு—முலகறியக்

(பிரதி பேதம்.)—1. மறவோனும். 2. பூபதியு—மாகத்துக். 3. கீழ்கட்டற்கு.

காக்குஞ் சிறுபுறவுக் காகக் களிகூர்ந்து
தூக்குந் துலைபுக்க தூயோனு—மேக்குயரக்
கொள்ளுங் குடகக் குவடு டறுத்திழியத்
தள்ளுந் திரைப்பொன்னி தந்தோனுந்—தெள்ளருவிச்
சென்னிப் புலியே றிருத்திக் கிரிதிரித்துப்
பொன்னிக் கரைகண்ட பூபதியு—மின்னருளின்
மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப்
பாதத் தளைவிட்ட [1]பார்த்திவனு—மீதெலா
மெண்கொண்ட தொண்ணூற்றின் மேலு மிருமூன்று
புண்கொண்ட வென்றிப் புரவலனுங்—[2]கண்கொண்ட
கோதிலாத் தேறல் குனிகுந் திருமன்றங்
காதலாற் [3]பொன்வேய்ந்த காவலனுந்—தூதற்காப்
பண்டு பகலொன்றி லீரொன் பது[4]சுரமுங்
கொண்டு மலைநாடு கொண்டோனுந்—[5]தண்டினாற்
கங்கா நதியுங் கடாரமுங் [6]கைக்கொண்டு
கங்கா புரிபுரந்த கற்பகமும்—வங்கத்தை
முற்று முரணடக்கி மும்மடிபோய்க் [7]கல்யாணஞ்
செற்ற [8]தனியாண்மைச் சேவகனும்—பற்றலரை
வெப்பத் தடுகளத்து வேழங்க ளாயிரமுங்
கொப்பத் தொருகளிற்றாற் கொண்டோனு—மப்பழநூல்
பாடரவத் தென்னரங்க மேயாற்குப் பன்மணியா
லாடரவப் பாய லமைத்தோனுங்—கூடலார்
சங்கமத்துக் கொள்ளுந் தனிப்பரணிக் கெண்ணிறந்த
துங்கமத யானை துணித்தோனு—மங்கவன்பின்
காவல் புரிந்தவனி காத்தோனு மென்றிவர்கள்
பூவலய முற்றும் புரந்ததற்பின்—மேவலர்தஞ்

(பி - ம்.)—1. பார்த்திபனு—மீதெல்லா. 2. கண்கொண்டு. 3. பொன்மேய்ந்த. 4. சிரமுங். 5. தண்டேவிக். 6. கைவாச், சிங்காதனத்திருந்த செம்பியனும். 7. கல்யாணி. 8. தனியானைச்.

சேலைத் துரந்து [1]சிலையைத் தடிந்திருகாற்
சாலைக் களமறுத்த தண்டினன்—மேலைக்

கடல்கொண்டு கொங்கணமுங் கன்னடமுங் கைக்கொண்
[2]டடல்கொண்ட மாராட் டரசை—யடலை

பிறக்கி வடவரையே யெல்லையாத் தொல்லை
மறக்கலியுஞ் சுங்கமு மாற்றி—யறத்திகிரி

[3]வாரிப் புவனம் வலமாகத் தந்தளிக்கு
மாரிற் பொலிதோ ளபயற்குப்—பார்விளங்கத்

[4]தோன்றிய விக்கிரம சோழன் றொடைத்தும்பை
மூன்று முரசு முகின்முழங்க—நோன்றலைய

மும்மைப் புவனம் புரக்க [5] முடிகவித்துச்
செம்மைத் தனிக்கோ றிசை[6]யளப்ப—வெம்மை

விடவுட் படுத்து விழுக்கவிகை யெட்டுக்
கடவுட் களிறுங் கவிப்பச்—சுடர்சே

ரிணைத்தார் மகுட மிறக்கி யரசர்
துணைத்தா ளபிடேகஞ் சூடப்—பணைத்தேறு

நீராழி யேழு நில்வாழி யேழுந்தன்
போராழி யொன்றாற் பொதுநீக்கிச்—சீராரு

மேய திகிரி விரிமே கலையல்குற்
றாய நிலமடந்தை தோள்களினுஞ்—சாயலி

னேது முலகங்க ளேழுந் தனித்துடைய
கோதில் குலமங்கை கொங்கையினும்—போதி

னிறைகின்ற செல்வி நெடுங்கண் களினு
முறைகின்ற நாளி லொருநா—ளறைகழற்காற்

றென்னர் திறையளந்த முத்திற் சிலபூண்டு
தென்னர் மலையாரச் சேறணிந்து—தென்னர்

(பி - ம்.)—1. சிலையைக் கடிந். 2. அடல்கொண் டமாரா டரச-ருடலை. 3. வாரித்திகிரி வலமாக வந்தளிக்கும். 4. தோன்றிய கோன் விக்கிரம. 5. முடிசூடிச். 6. அளப்பத்—தம்முள், விடவுட் படுத்த.

வரவிட்ட தென்ற லடிவருட வாட்கண்
பொரவிட்ட பேராயம் போற்ற—விரவிட்ட
நித்திலப் பந்தர்க்கீழ் நீணிலாப் பாயன்மேற்
றொத்தலர் மாலைத் துணைத்தோளு—மைத்தடங்
கண்ணு முலையும் பெரிய களியன்ன
மெண்ணு முலகங்க ளேழுடைய—பெண்ணணங்கு
பெய்த மலரோதிப் பெண்சக்ர வர்த்தியுட
னெய்திய பள்ளி யினிதெழுந்து—பொய்யாத
[1]பொன்னிப் புதுமஞ் சனமாடிப் பூசுரர்கைக்
கன்னித் தளிரறுகின் காப்பணிந்து—முன்னை
மறைக்கொழுந்தை வெள்ளி மலைக்கொழுந்தை மௌலிப்
பிறைக்கொழுந்தை வைத்த பிரானைக்—கறைக்களத்துச்
செக்கர்ப் பணிவிசும்பைத் தெய்வத் தனிச்சுடரை
முக்கட் கனியை முடிவணங்கி—மிக்குயர்ந்த
[2]தானத் துறைமுடித்துச் சாத்தும் [3]தகைமையன
மானக் கலன்கள் வரவருளித்—தேன்மொய்த்துச்
சூழு மலர்முகத்துச் சொன்மா மகளுடனே
தாழு மகரக் குழைதயங்க—வாழுந்
தடமுலைப் பார்மடந்தை தன்னுடனே தோளிற்
சுடர்மணிக் கேயூரஞ் சூழப்—படருந்
தணிப்பில் பெருங்கீர்த்தித் தைய லுடனே
மணிக்கடகங் கையில் வயங்கப்—பிணிப்பின்
முயங்குந் திருவுடனே முந்நீர் கொடுத்த
வயங்கு மணிமார்பின் மல்க—வுயங்கா
வருங்கொற்ற மார்க்கு மணங்கி னுடனே
மருங்கிற் றிருவுடைவாள் [4]வாய்ப்பத்—திருந்திய

(பி - ம்.)—1. பொன்னித் திருமஞ்; பொன்னித் துறைமஞ். 2. தானத்தொழின். 3. தகைமையின். 4. வாய்ப்பப்—பொருந்திய, வண்ணற்படிவத்.

வண்ணாற் படிமத் தரும்பே ரணியணிந்து
வண்ணத் தளவில் வனப்பமைத்துக்—கண்ணுதலோன்

காமன் [1]சிலைவாங்க வாங்கிய [2]கட்டழகு
தாம முடிவணங்கத் தந்தனைய—காமருபூங்

கோலத் தொடுபெயர்ந்து கோயிற் புறநின்று
[3]காலத் ததிருங் கடாக்களிறு—ஞாலத்துத்

தானே முழங்குவ தன்றித் தனக்கெதிர்
வானே முழங்கினுமவ் வான்றடவி—வானுக்

கணியு மருப்பு மடற்கையு மின்மைத்
தணியும் யமராச தண்டந்—[4]தணியாப்

பரிய பெருங்கோ டிணைத்துப் [5]பணைத்தற்
குரிய தொருதானே யாகிக்—கரிய

[6]மலைக்கோ டடைய மடித்திடியக் குத்துங்
கொலைக்கோட்டு வெங்கால கோப—மலைத்தோட

வூறு மதந்தனதே யாக வுலகத்து
வேறு [7]மதம்பொறா வேகத்தாற்—கூறொன்றத்

தாங்கிப் பொறையாற்றுத் தத்தம் பிடர்நின்றும்
வாங்கிப் பொதுநீக்கி மண்முழுது—மோங்கிய

கொற்றப் புயமிரண்டாற் கோமா னகளங்கன்
முற்றப் பரித்ததற்பின் முன்புதா—முற்ற

வருத்த மறமறந்து மாதிரத்து வேழம்
பருத்த கடாந்திறந்து பாயப்—பெருக்கத்

துவற்று மதுரச் சுவடுபிடித் தோடி
யவற்றி னபரங்கண் டாறி—யிவற்றை

யளித்தன னெங்கோமா [8]னுதலா லின்று
களித்தன வென்றுவக்குங் காற்று—நெளித்திழிய

(பி - ம்.)—1. சிலை வணங்க; சிலை வணக்க. 2. கட்டழகைத், தாம முடிவணக்கத். 3. காலத்திருக்குங். 4. துணியாற். 5. பணைத் தற், கரிய. 6. மலைக்கோடணைத்து. 7. மதம்பெறா. 8. ஆதலானன்று.

வேற்றுப் புலத்தை மிதித்துக் கொதித்தமரி
லேற்றுப் பொருமன்ன ரின்னுயிரைக்—கூற்றுக்
கருத்து [1]மயிரா வதநின் றதனை
யிருத்தும் பிடிபடியா வேறித்—திருத்தக்க
கொற்றக் கவிகை நிழற்றக் குளிர்ந்திரட்டைக்
கற்றைக் கவரிகளின் காலசைப்ப—வொற்றை
வலம்புரி யூத [2]வளைக்குல மார்ப்பச்
சிலம்பு முரசஞ் சிலம்பப்—[3]புலம்பெயர்ந்து
வாட்படை கொட்ப மறமன் னவர்நெருங்கக்
கோட்புலிக் கொற்றக் கொடியோங்கச்—சேட்புலத்துத்
தென்னரு மாளுவருஞ் [4]சிங்களருங் கொங்கணத்து
மன்னருந் தோற்க [5]மலைநாடர்—முன்னங்
குலையப் பொருதொருநாட் கொண்ட பரணி
மலையத் தருந்தொண்டை மானும்—[6]பலர்முடிமே
லார்க்குங் கழற்கா [7]லனகன் றனதவையுட்
பார்க்கு மதிமந்திர பாலகரிற்—போர்க்குத்
[8]தொடுக்குங் கமழ்தும்பை தூசினொடுஞ் சூடிக்
கொடுக்கும் புகழ்முனையர் கோனு—முடுக்கரையுங்
கங்கரையு மாராட் டரையுங் கலிங்கரையுங்
கொங்கரையு மேனைக் குடகரையுந்—தங்கோன்
முனியும் பொழுது முரிபுருவத் தோடு
குனியுஞ் சிலைச்சோழ கோனுஞ்—சனபதிதன்
றேளுங் கவசமுஞ் சுற்றமுங் கொற்றப்போர்
வாளும் [9]வலியு மதியமைச்சு—நாளுமா
மஞ்சைக் கிழித்து வளரும் [10]பெரும்புரிசைக்
கஞ்சத் திருமறையோன் கண்ணனும்—வெஞ் [11]சமத்துப்

(பி - ம்.)—1. அயிராபதம். 2. வளைக்குலங்க ளார்ப்பச். 3. புலம் பயில்; புலம்பெயர். 4. சிங்களருந் தோற்றுத்தை. 5. மலைநாடு. 6. பல முடிமேல். 7. அபயன். 8. தொடுத்துப் புனைதும்பை தூசினொடுஞ் சூடக், கொடுத்த புகழ். 9. புலியும். 10. பொழிற் புரிசைக். 11. சமரிற்.

புல்லாத மன்னர் [1]புலாலுடம்பு பேய்வாங்க
வொல்லாத கூற்ற முயிர்வாங்கப்—[2]புல்லார்வந்
தாங்கு [3]மடமகளிர் தத்தங் குழைவாங்க
வாங்கும் வரிசிலைக்கை வாணனும்—வேங்கையினுங்
கூடார் விழிஞத்துங் கொல்லத்துங் கொங்கத்து
மோடா விரட்டத்து மொட்டத்து—[4]நாடா
தடியெடுத்து வெவ்வே றரசிரிய வீரக்
கொடியெடுத்த காலிங்கர் கோனுங்—கடியரணச்
செம்பொற் பதணச் செறியிஞ்சிச் செஞ்சியர்கோன்
கம்பக் களியானைக் காடவனும்—வெம்பிக் (கசுO)
கலக்கிய வஞ்சக் [5]கலியாளர் போரில்
விலக்கிய வேணாடர் வேந்துந்—தலைத்தருமம்
வாரிக் குமரிமுதன் மந்தா கினியளவும்
பாரித் தவனனந்த பாலனும்—பேரமரின்
முட்டிப் [6]பொருதார் வடமண்ணை மும்மதிலு
மட்டித்த மால்யானை வத்தவனு—மட்டையெழக்
காதிக் கருநாடர் கட்டரணங் கட்டழித்த
சேதித் திருநாடர் [7]சேவகனும்—பூதலத்து
முட்டிய தெவ்வர் சடைகட்ட மொய்கழல்
கட்டிய [8]காரானை காவலனு—மொட்டிய (களO)
மான வரச ரிரிய வடகலிங்கத்
தானை துணித்த [9]வதிகனு—மீனவர்தங்
கோட்டாறுங் கொல்லமுங் கொண்ட [10]கொடை நுளம்பன்
வாட்டார் மதயானை வல்லவனு—[11]மோட்டரணக்
கொங்கைக் குலைத்துக் [12]குடகக் குவடொடித்த
செங்கைக் களிற்றுத் திகத்தனு—மங்கத்து

(பி - ம்.)—1. புலாலுடம்பைப் போய்வாங்க. 2. புல்லார்தந். 3. மடமாதர். 4. நாடா, வடியெடுத்த. 5. கலியதனைப் பாரில். 6. பொருத வடமன்னர். 7. செல்வனும். 8. காரானை. 9. தவதிகனும்; தமதிகனும். 10. குடை நுளம்பன். 11. கோட்டரணக். 12. குடகைக் குவடிடித்த.

வல்லவனுங் கோசலனு மாகதனு மாளுவனும்
வில்லவனுங் கோளனு மீனவனும்—பல்லவனு
மென்னும் பெரும்போ ரிகல்வேந்தர் மண்டலிகர்
முன்னு மிருமருங்கு மொய்த்தீண்ட—பன்மணிச்
சோதி வயிர மடர்க்குஞ் சுடர்க்குழையார்
வீதி குறுகுதலு மேலொருநாண்—மாதவத்தோன்
சார்ந்த பொழுதனங்கன் றன்னை யறிவித்த
பூந்துவரை யந்தப் புரம்போன்று—மேந்திப்
பரக்குங் கலையல்குற் பாவையரே யானை
புரக்குந் திருநாடு போன்றும்—[1]வரக்கருதா
வேனை முனிக்குறும்பு கொல்ல விகன்மாரன்
சேனை திரண்ட திரள்போன்றுங்—கானலங்
கண்டன் மணற்குன்றத் தன்னக் கணம்போன்றுங்
கொண்டலின் மின்னுக் குழாம்போன்று—மண்டு
திரைதொறுந் தோன்றுந் திருக்குழாம் போன்றும்
[2]வரைதொறுஞ் சேர்மயில்கள் போன்றும்—விரைவினரா
யிந்து நுதல்வெயர்ப்ப வெங்கணுங் கண்பரப்பிச்
சிந்தை பரப்பித் தெருவெங்கும்—வந்தீண்டி
யுத்தி சுடர வொளிமணிச் [3]சூட்டெறிப்பப்
பத்தி வயிரம் பரந்தெறிப்ப—முத்தி
னிணங்கு மமுத கலசங்க ளேந்தி
வணங்கு தலையினராய் வந்து—கணங்கொண்டு
பார்க்குங் கொடுநோக்கு நஞ்சுறைப்பக் கிஞ்சுக[4]வாய்
கூர்க்கு மெயிறுவெறுங் கோளிழைப்ப—வேர்க்க
வரைகொ ணெடுமாடக் கீழ்நிலையின் மல்கி
யுரக வரமகளி ரொப்பார்—விரல்கவரும்
வீணையும் யாழுங் குழலும் விசிமுழவும்
[5]பாணி பெயர்ப்பப் பதம்பெயர்த்துச்—சேனையர்

(பி - ம்.)—1. வரற்கரிதாம். 2. வரைதொறுந் தோன்றுமயில் போன்றும்—விரவினராய். 3. சூட்டெரியப். 4. வாய்க், கூர்க்கும். 5, பாணி பெயரப் பதம்பெயர்த்து—நீணிலா.

மஞ்சிவர் வெண்பளிக்கு மாடத் திடைநிலையின்
விஞ்சையர் மாத ரெனமிடைவா—[1]ரஞ்சனவேற்

கண்ணிற் சிறிது மிமையாத காட்சியு
மண்ணிற் பொருந்தா மலரடியுந்—[2]தண்மலர்

வாடா நறுஞ்செவ்வி மாலையுங் கொண்டழகு
வீடா நிலாமுற்ற மேனிலையிற்—கூடி

யுருவி னொளியி னுணர்வி னுரையிற்
பொருவி லரமகளிர் போல்வா—ரருகணைந்து

சீரள வில்லாத் திருத்தோ ளயன்படைத்த
பாரள வல்ல பணைப்பென்பார்—பாருமின்

செய்ய வொருதிருவே யாளுஞ் சிறுமைத்தோ
வைய முடையபிரான் மார்பென்பார்—கையிரண்டே

யானபோ தந்த முருகவே ளல்லனிவன்
வேனில்வேள் கண்டீ ரெனமெலிவார்—[3]யானெண்ணு

மெண்ணுக் கிசைய வருமே யிவனென்பார்
கண்ணிற் கருணைக் கடலென்பார்—மண்ணளிக்கு

மாதி மனுகுலமிவ் வண்ணலான் மேம்படுகை
பாதியே யன்று லெனப்பகர்வார்—தாதெடுத்த

கொங்கை பசப்பார்தங் கோல்வளை காப்பார்போற்
செங்கை குவிப்பார் சிலர்செறிய—

(பேதை.)

அங்கொருத்தி

வந்து பிறந்து வளரு மிளந்திங்கட்
கொந்து முகிழாக் கொழுங்கொழுந்து—பைந்தழைத்

தோகை தொடாமஞ்ஞை சூடுண்டு தோற்றவன்மேல்
வாகை புனைய வளர்கரும்பு—கோகிலத்தின்

(பி - ம்.)—1. அஞ்சனக். 2. தண்ணென்ற. 3. மானனையார்.

பிள்ளை யிளவன்னப் பேடை பிறந்தணிய
கிள்ளை பவளங் கிளைத்தகிளை—கள்ளந் (உங0)

தெரியாப் பெருங்கட் சிறுதேற ருயர்
பிரியாப் பருவத்துப் பேதை—பணிவோடு

பாவையு [1]மானு மயிலும் பசுங்கிளியும்
பூவையு மன்னமும் பின்போதக்—காவலன்

பொன்னிப் புகார்முத்தி னம்மனையுந் தென்னுகை
நன்னித் திலத்தி னகைக்கழங்குஞ்—சென்னிதன்

கொற்கைக் குளிர்[2]முத்த வல்சியுஞ் சோறடுகை
கற்கைக்கு வேண்டுவன கைப்பற்றிப்—[3]பொற்கொடியார்

வீதி புகுந்து விளையாடு மெல்லைக்க
ணுதி யுகம்வந் தடிக்கொள்ள—மேதினியி (உசo)

லூன்று [4]கலிகடிந்த வுத்துங்க துங்கன்றன்
மூன்று முரசு முழங்குதலும்—வான்றுணையாய்த்

தாயர் வரவந்து தாயர் தொழத்தொழுது
தாயர் மொழிந்தனவே தான்மொழிந்தாள்—சேயோன்

[5]படியின் மதியும் பகலவனுந் தோற்கு
முடியி லொருகாலு மூளா—வடிவின்

மகிழ்ந்த மலராண் மலர்க்கண்ணு நெஞ்சு
நெகிழ்ந்த திருநோக்கி னேரா—முகிழ்ந்து

சிரிக்குந் திருப்பவளச் சேயொளியூ டாடா
விரிக்குந் திருநிலவில் வீழா—பரிக்கு (உருo)

முலகம் பரவுந் திருப்புருவத் தோடா
திலக முகாம்புயத்திற் சேரா—பலவுந்

திசையை நெருக்குந் திருத்தோளிற் செல்லா
விசையுந் திருமார்பத் தெய்தா—வசையிலாக்

(பி - ம்.)—1. மானும் பயிலும். 2. முத்தின் கோலமணி வல்சியுங். 3. பொற்றொடியார்; பொற்றொடியாள். 4. கலிகடந்த வுத்துங்க சோழன்றன். 5. படியுமதியும்.

கைம்மலரிற் போகா வடிமலரிற் கண்ணுரு
மெய்ம்மலர்ப் பேரொளியின் மீதூரா—வம்மகள்

கண்ணு மனமுங் கழுநீர்க் குலமுழுது
நண்ணுந் தொடையன்மே னட்செய்ய—வுண்ணெகிழா

வம்மின்க ளன்னைமீர் மாலை யதுவாங்கித்
தம்மின்க ளென்றுரைப்பத் தாயரு—மம்மே (உ௯0)

பெருமானை யஞ்சாதே பெண்ணமுதே யாமே
திருமாலை தாவென்று செல்வேந்—திருமாலை

யாங்கொள்ளும் வண்ண மெளிதோ வரிதென்னத்
தேங்கொள்ளு மின்சொற் சிறியாளு—மாங்குத்தன்

மார்பத்துக் கண்ணினீர் வாரப் பிறர்கொள்ளு
மார்வத்துக் கன்றே யடியிட்டாள்—சேர

விருத்தி மணற்சோ றிளையோரை [1]யூட்டு
மருத்தி யறவே யயர்த்தாள்—

(பெதும்பை.)

ஒருத்தி

மழலை தனது கிளிக்களித்து வாய்த்த
குழலி னிசைகவர்ந்து [2]கொண்டா—ணிழல்விரவு (உ௱0)

முன்னர் நகைதனது முல்லை கொளமுத்தின்
பின்னர் நகைகொண்ட பெற்றியாள்—கன்னி

மடநோக்கந் தான்வளர்த்த மானுக்கு விட்டு
விடநோக்க வேலிரண்டு கொண்டாள்— [3]சுடர்நோக்குந்

தானுடைய மெய்ந்நுடக்கந் தன்மா தவிக்களித்து
வானுடைய மின்னுடக்கம் வாங்கினாள்—[4]பூநறும்

பாவைதன் பைங்குர வேந்தப் பசுங்கிளியும்
பூவையு மேந்தும் பொலிவினாண்—மேவு

(பி - ம்.)—1. ஊட்டி, யருத்தி நடுவே யயர்ந்தாள். 2. கொள்வாள். 3. சுடரிழை. 4. பூநாறும்.

மடநடை யன்னப் பெடைபெறக் கன்னிப்
பிடிநடை பெற்றுப் பெயர்வாள்—சுடர்கனகக் (உ௮௦)

கொத்துக் குயின்ற கொடிப்பவளப் பந்தத்தின்
முத்துப் பொதியுச்சி முச்சியா—ளெத்திறத்தும்

வீரவேள் போல்வாரை வீட்டி விழுத்தவர்மேன்
மாரவேள் கண்சிவப்ப வாய்சிவப்பாள்—நேரொத்த

கோங்க முகையனைய கொங்கையா டன்கழுத்தாற்
பூங்கமுகை யிப்போது பொற்பழிப்பாள்—பாங்கியருந்

தாயரும் போற்றுமே தானே துயிலெழுந்து
பாயல் புடைபெயர்ந்து பையச்சென்—றியாயே

தளரு மிடையொதுங்கத் தாழுங் குழைத்தாய்
வளரு மொருகுமரி வல்லி—கிளருங் (உ௯௦)

கொழுந்து மளவிறந்த கொந்துங் கவினி
யெழுந்து [1]கிளைகலிப்ப வேறித்—தொழுந்தகைய

கொங்குடைய பொன்னட்டுஞ் சென்னிக் கொழுங்கோங்கின்
பங்குடைய மூரிப் பணையணைந்—தங்குடைய

வண்டு முரல மணநாற வைகுமது
கண்டு மகிழ்ந்தேன் கனவிலெனக்—கொண்டு

வருக வருக மடக்கிள்ளை முத்தந்
தருக தருகவெனத் [2]தாயர்—பெருக

விரும்பினர் புல்லி விரைய முலைவந்
தரும்பின வாகத் தணங்கே—பெரும்புயங்கள் (௩௦௦)

புல்லி விடாத புதுவதுவை சென்னியுடன்
வல்லி பெறுதி யெனவழுத்து—மெல்லை

யரச னபய னகளங்க னெங்கோன்
புரசை மதவரைமேற் போத—முரசந்

தழங்கு மறுகிற் றமரோடு மோடி
[3]முழங்கு முகின்மாட முன்றிற்—கொழுங்கயற்கட்

(பி - ம்.)—1. கிளைகலிப்பவேறி. 2. தாயர்—விரவி. 3. முழங்கு நெடுமாட.

பொன்னென வெல்லா வழகும் புணர்ந்ததொரு
மின்னென வந்து வெளிப்பட்டு—மன்னருயி

ருண்டாற் றியவேங்கை வைக்க வொருதிருக்கைச்
செண்டாற் கிரிதிரித்த சேவகனைத்—தண்டாத

வேகங் கெடக்கலிவாய் [1]வீழ்ந்தாற்று பார்மகளைச்
சோகங் [2]கெடுத்தெடுத்த தோளானை—யாகத்துக்

கொங்கை பிரியாத வீறோடுங் கோகனக
மங்கை பிரியாத மார்பானை—யங்கமலக்

கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயுஞ்
செய்ய கரிய திருமாலைத்—தையலுங்

கண்டகண் வாங்காள் தொழுமுகிழ்த்த கைவிடாள்
மண்டு மனமீட்கு மாறறியாள்—பண்டறியாக்

காமங் கலக்கக் கலங்கிக் குழல்சரியத்
தாமஞ் சரியத் தனிநின்று—ளுமவேற்

சேரனு மீனவனுஞ் சேவிப்பச் செம்பியரில்
வீரனு மவ்வெல்லை விட்டகன்றான்—மாரனுந்

தக்குத் தகாதாளை யெய்து தரைப்படுத்தப்
புக்குத் தொடைமடக்கிப் போயினான்—

(மங்கை.)

மைக்குழன்

மங்கைப் பருவத் தொருத்தி மலர்பொதுளுங்
கங்கைப் புளினக் களியன்ன—மெங்கோனை

மன்னனை மன்னர் பிரானை வரோதயனைத்
தென்னனை வானவனைச் செம்பியனை—முன்னொருநாட்

கண்ட பெதும்பைப் பருவத்தே தன்கருத்திற்
கொண்ட பரிவு [3]கடைகூட்டப்—புண்டரிகச்

(பி - ம்.)—1. வீழ்ந்தாற்றும்; வீழ்ந்தாற்றப். 2. கெடுத்தணைத்த; கெடுத்தணைந்த. 3. கடைக்கூட்டப்.

செய்ய வடி முதலாச் செம்பொன் முடியளவு
மைய [1]லகல மனத்திழைத்துக்—கையினாற்
றீட்டுங் கிழியிற் பகற்கண் டிரவெல்லாங்
காட்டுங் [2]கனவு தரக்கண்டு—நாட்டங்கொண்
டியாதொன்றுங் காணு திருப்பாள் பொருகளிற்றுத்
தாதொன்றுந் தொங்கற் சயதுங்கன்—வீதி
வருகின்ரு னென்று மணியணிகள் யாவுந்
தருகென்ருள் வாங்கித் தரித்தாள்—விரிகோதை
சூடினாள் பைம்பொற் றுகிலுடுத்தாள் சந்தனச்சே
றாடினு டன்பே ரணியணிந்தாள்—சேடியர் (௩௪௦)
காட்டும் படிமக் கலத்திற் கமலத்தை
யோட்டும் வதனத் தொளிமலர்ந்து—கேட்டு
விடைபோ மனங்கன்போல் வேல்விழிக டாமும்
படைபோய் வருவனபோற் பக்கங்—கடைபோய்
மறித்து [3]மதர்மதர்த்து வார்கடிப்பு வீக்கி
யெறிக்குங் குழைக்காதிற் கேற்று—நெறிக்கு
மளக முதலாக வைம்பாற் [4]படுத்த
வளர்கருங் கூந்தன் [5]மலிந்துங்—கிளர
வரியன நித்திலத்தி னம்பொற் றொடித்தோள்
பரியன காம்பிற் பணைத்துந்—தெரியற் (௩௫௦)
சுவடு படுகளபத் [6]தொய்யில்சூழ் கொங்கைக்
குவடு படவெழுச்சி கொண்டுந்—[7]திவடா
முந்துங் கலையல்குன் மூரித் தடமகன்று
நொந்து மருங்கு னுடங்கியும்—வந்து
மிடையும் புதுவனப்பு விண்ணோரும் வீழ
வடையுந் தனதுருக்கண் டஞ்சிக்—கொடையனகன்

(பி - ம்.)—1. அகலா மனத்தெழுதிக். 2. கனவுதரக் காணுங் கால். 3. மிகமதர்த்து; மதமதர்த்து. 4. படுக்க. 5. மலிந்து—மிளிர. 6. தொய்யில்வாய். 7. திவடாமம்.

பண்டறியு முன்னைப் பருவத் துருவத்துக்
கண்டறியு [1]மவ்வடிவு காண்கிலேன்—பண்டறியு
முன்னை வடிவு மிழந்தேன் முகநோக்கி
யென்னை [2]யறிகலன்யா னென்செய்கேன்—றன்னை
வணங்கி வருவ் தறிவ னெனவந்
திணங்கு மகளி ரிடைநின்—றணங்கு
மிறைவ னகளங்க னெங்கோன் குமரித்
துறைவ னிருபகுல துங்கன்—முறைமையாற்
காக்குங் கடல்கடைந்த கைமலரு முந்திமலர்
பூக்கு முலகளந்த [3]பொற்கழலு—நோக்குந்
திருக்கொள்ளு மார்பமுந் தெவ்வேந்த ரெல்லாம்
வெருக்கொள்ளு மூரித்தோள் வெற்பு—முருக்கு
மகரக் குழைக்காது மாதரார் மாமை
நுகரப் புடைபெயரு நோக்குந்—துகிரொளியை
வெளவிய கோல மணிவாயு மெப்பொழுதுஞ்
செவ்வி யழியாத் திருமுகமு—மெவ்வுருவு
மாறுபடா [4]வண்ணமவ் வண்ணல் படிவத்து
வேறு படுவனப்பு [5]மெய்விரும்பித்—தேறும்
பிறையாம் பருவத்துப் பேருவகை யாம்ப
னிறையா மதிக்கு நெகிழ்ந்தாங்—கிறைவனைக்
கண்டு மனமு முயிருங் களிப்பளவிற்
கொண்டு பெயர்ந்தது கொல்யானை—பண்டு
நனவு கிழியிற் பகற்கண்டு நல்ல
கனவு தாவிரவிற் கண்டு—மனமகிழ்வாள்
தீட்ட முடியாத செவ்வி குறிக்கொள்ளு
[6] நாட்ட முறங்கா மையைநல்க—மீட்டுப்

(பி - ம்.)—1. அவ்வறிவு 2. அறிகிலேனென்செய்கேன். 3. பூங்கழலும். 4. வண்ணமுந்தன் வண்ணப் படிமத்து. 5. மெய்விரும்பத்—தேறிப். 6. வாட்ட முறங்கா மையுநல்க—மீட்டும்.

பெயர்ந்தா டமர்தம் பெருந்தோள் களில்வீழ்ந்
தயர்ந்தா ளவணிலையீ தப்பால்—

(மடந்தை.)

சயந்தொலைய

வெந்து வடிவிழந்த காமன் விழிச்சிவப்பு
வந்து திரண்டனைய வாயினா—ளந்தமி

லோலக் கடலேழு மொன்றா யுலகொடுக்குங்
[1] காலக் கடையனைய கட்கடையாண்—ஞாலத்தை

வீட்டி வினைமுடிக்க வெங்கால தூதுவர்போற்
கோட்டி யிருக்குங் குவிமுலையா—ளொட்ட

வடிவின் மருங்குலாண் மாரனைப்போன் மேலோர்
முடிவி லுணர்வை முடிப்பாள்—கடிதோடிப்

போகா தொழியா [2]திடையென்று போய்முடிய
லாகாமை கைவளரு மல்குலாள்—பாகாய

சொல்லி யொருமடந்தை தோழியைத் தோள்வருந்தப்
புல்லி நிலாமுற்றம் போயேறி—வல்லிநாஞ்

சேடிய ரொப்ப வகுத்துத் திரள்பந்து
கோடியர் கண்டுவப்பக் கொண்டாடி—யோடினா

லென்மாலை நீகொள்வ தியாண்கொள்வ தெங்கோமான்
றன்மாலை வாங்கித் தருகென்று—[3]மின்னனையாள்

வட்டித் தளகமுங் கொங்கையும் வார்தயங்கக்
கட்டிக் கனபந்து கைப்பற்றி—யொட்டிப்

பொருதிறத்துச் சேடியர்தம் போர்தொலையத் தானே
யிருதிறத்துக் கந்துகமு மேந்திப்—பெரிது

[4]மழுந்து தரளத் தவைதன்னைச் சூழ
விழுந்து மெழுந்து மிடைய—வெழுந்துவரி

(பி - ம்.)—1. காலக்கடலனைய. 2. இடையொன்று போய்முடிய, லாகா தெனவளரும். 3. பொன்னனையாள். 4. அழுந்துறு தானத்.

சிந்த விசிறு திரையி னுரையூடு
வந்த வனச மகளேய்ப்ப—முந்திய

செங்காந்த ளங்கை சிவக்குஞ் சிவக்குமென்
றங்காந்து தோள்வளைக ளார்ப்பெடுப்பத்—தங்க

ணுடங்கு கொடிமருங்கு [1]ஞெந்தொசிந்த தென்றென்
றடங்கு கலாப மாற்றத்—தொடங்கி

யரிந்த குரலினவா யஞ்சி றடிக்குப்
பரிந்து சிலம்பு பதைப்ப—விரிந்தெழுசெங்

கைக்கோ விடைக்கோ கமல மலரடிக்கோ
மைக்கோல வோதியின்மேல் வண்டிரங்க—வக்கோதை

பந்தாடி வென்று பருதி யகளங்கன்
சந்தாடு தோண்மாலை தாவென்று—பைந்துகிற்

றூனை பிடித்தலைக்கும் போதிற் றணிக்குடைக்கீழ்
யானைமேல் வெண்சா மரையிரட்டச்—சேனை

மிடையப் பவளமு நித்திலமு மின்ன
வடையப் பணிலந்த ளார்ப்பப்—புடைபெயர

வார்ந்து [2]மகர வயமீன் குலமுழுதும்
பேர்ந்து மறுகும் படிபிறழச்—சேர்ந்து

பதலை முழங்கப் பகடேற்றி விட்ட
மதலைகண் முன்னர் மலிய—விதலையராய்த்

தாழுந் தொழிலிற் கிளைபுரக்கத் [3]தன்னடைந்து
வாழும் பரதர் மருங்கீண்ட—வீழுந்திக்

கன்னியு நன்மதையுங் கங்கையுஞ் சிந்துவும்
பொன்னியுந் [4]தோயப் புகார்விளங்க—மன்னிய

செங்கோற் றியாக சமுத்திர நண்ணுதலுந்
தங்கோ மறுகிற் றலைப்பட்டுத்—தங்களி

(பி - ம்.)—1. நொந்தசைந்தது. 2. மகளிர் வயமின் குலமுழுதும், போந்து மறுகு புடைபிறழச். 3. தண்டடைந்து. 4. தோயும் புகார்.

லொட்டிய வொட்ட முணராதே தோள்வளையுங்
கட்டிய மேகலையுங் காவாதே—கிட்டித்

தொழுதா ளயர்ந்தா ளெங்கினள் சோர்ந்தா
ளழுதா ளொருதமிய ளானாள்—பழுதிலாக்

காக்குந் துகிலு மிலங்கு பொலன்கலையும்
போக்கு நிதம்பம் புனைகென்று—வீக்கு

மணிக்கச்சுந் தம்முடைய வான்றாசுங் கொங்கை
[1]பணிக்கக் கடைக்கண்கள் பாரா—வணிக்கமைந்த (சசo)

குன்றுத நித்திலக் கோவையும் பொன்னிறத்த
பொன்றுத பட்டும் புனைகென்று—நின்று

கொடுத்தன கொங்கைகளுங் கொண்டன தானு
[2]மடுத்தனர் தோண்மே லயர்ந்தாள்—கடுத்துக்

கவரு மனங்களுடன் கைகலந்த தன்றித்
தவரு முதுகிளவித் தாய—ரவரெங்குங்

கூசினர் [3]சந்திற் பனிநீர் குழைத்திழைத்துப்
பூசினு ராலி [4]பொழிந்தொழிந்தார்—வீசினு

ரிட்டார் நிலவி லிளந்தென்ற லுங்கொணர்ந்து
சுட்டார் குளிரி தொடுத்தெடுத்தார்—விட்டாரோ (சருo)

பள்ள மதனிற் படரும் பெரும்புனல்போ
லுள்ள முயிரை யுடன்கொண்டு—வள்ளல்பின்

னேதை மறுகி லுடன்போன போக்காலிப்
பேதை நடுவே பிழைத்தொழிந்தாள்—

(அரிவை.)

மாதரில்

வாரி படு[5]மமுத மொப்பாண் மதுகரஞ்சூழ்
வேரி தமழ்கோதை வேறொருத்தி—மூரித்தேர்த்

(பி - ம்.)—1. பணிக்கப் படைக்கண்கள். 2. அடுத்தன தோண் மேல். 3. சந்து பனிநீர். 4. பொழிந்தெழுந்தார். 5. அமுதை யொப் பாள்.

தட்டுஞ் சிறுகப் பெருகு மரகதத்திற்
கட்டுங் கனபொற் கலாபாரம்—பட்டுந்

துகிலுங் கரப்பச் சுடர்பரப்பிக் கைபோ
யகல்கின்ற வல்கு லரிவை—யிகலி (௪௬௦)

யொருக்கி மருங்குகடிந் தொன் றிணைவந் தொன்றா
[1]நெருக்கி யமைய நிரம்பித்—தருக்கி

யிடங்கொண்டு மின்னுக் கொடியொன் றிரண்டு
குடங்கொண்டு நின்றதெனக் கூறத்—தடங்கொண்

டிணைத்துத் ததும்பி யிளையோர்க ணெஞ்சம்
பிணைத்துத் தடமுகட்டிற் பெய்து—பணைத்துப்

பெருமை யுவமை [2]பிறங்கொலிநீர் ஞாலத்
தருமை படைத்ததனத் தன்னங்—கருமை

யெறித்துக் கடைபோ யிருபுடையு மெல்லை
குறித்துக் குழைபளவுங் கொண்டு—மறித்து (௪௭௦)

மதர்த்து வரிபரந்து மைந்தர் மனங்கள்
பதைத்து விழநிறத்திற் பட்டுத்—[3]ததைத்த

கழுநீர் மலரின் கவினழித்து மானின்
விழிநீர்மை வாய்த்த விழியாண்—முழுது

நெறிந்து கடைகுழன்று நெய்த்திருண்டு நீண்டு
செறிந்து பெருமுருகு தேக்கி—நறுந்துணர்

வார்ந்து [4]கொழுந்தெழுந்த வல்லியாய் மாந்தளிர்
சேர்ந்து [5]மிசையசைந்த சோலையாய்ச்—சேர்ந்து

திருவிருந்த தாமரையாய்ச் சென்றடைந்த வண்டின்
பெருவிருந்து பேணுங் குழலாள்—பொருகளிற்றின் (௪௮௦)

வந்து மறுகி லொருநாண் மனுகுலத்தோன்
றந்த பெரிய தனிமைக்கட்—[6]செந்தனிக்கோற்

(பி - ம்.)—1. நெருக்கிய மாமை நிரம்பித். 2. பிறங்குநீர். 3. ததைத்துக், கழுநீ ரிதழின். 4. கொழுந்தெழுந்து. 5. மிசை யசைந்து. 6. செந்தமிழக்.

கோனே கவர்ந்தெம்மைக் [1]கொண்டனன் வந்தெமக்குத்
தானே தரிற்றருக வென்பனபோற்—பூநே
ரிணைக்கையுந் தோளு மிடுதொடிக ளேந்தா
துணைக்கண் டுயிற்றத் துயிலா—[2]மணக்கூந்தல்
போது மறந்தும் புனையா பொலங்கச்சு
மீது படத்தரியா வெம்முலைகள்—சோதி
யடுக்குங் கன [3]பொற் கலைபேணா தல்குல்
கொடுக்குந் தெருணெஞ்சு கொள்ளா—தெடுக்குங்
கருப்புச் சிலையனங்கன் கையம்பால் வீழு
நெருப்புக் குருகி நிறைபோ—யிருப்புழிப்
பாடிய பூவைக்கும் யாதும் பரிவின்றி
யாடிய தோகைக்கு மன்பின்றிக்—கூடிய
கிள்ளைக்குந் தம்மிற் [4]கிளரு மிளவன்னப்
பிள்ளைக்கு மாற்றுள் பெயர்ந்துபோய்க்—கொள்ளை
பயக்கு மலர்க்குரவப் பந்தர்ப் படப்பை
நயக்கு மிளமரக்கா நண்ணி—வயக்களிற்று
மன்னன் குலப்பொன்னி வைகலு மாடுதிரா
லன்னங்கா ணீரென் றழிவுற்றுஞ்—சென்னி
பெருகும் புகாரடையப் பெற்றீரான் மற்றைக்
குருகுகா ளென்று குழைந்துங்—கருகிய
[5]கோலக் குயிலினங்கா ணீர்போலுஞ் சோணாட்டுச்
சோலைப் பயில்வீ ரெனத்துவண்டும்—[6]பீலிய
பேரியன் மஞ்ஞை பெறுதிராற் கொல்லியு
நேரியுஞ் சேர்வீ ரெனநெகிழ்ந்து—நேரியன்
றண்டுழாய் மாலை பலகாலுந் தைவந்து
வண்டுகாள் வாழ்வீ ரெனமருண்டுந்—தொண்டிக்கோன்

(பி - ம்.)—1. கொண்டன வெங்களுக்குத். 2. மணிக்கூந்தல். 3. பொற்றுகில். 4. கிளருங் களியன்னப். 5. நீலக்குயிலினங். 6. பீலியம்.

மன்றன் மலையத்து வாளருவி தோய்ந்தன்றே
தென்றல் வருவ தெனத்திகைத்து—நின்றயர்கான்
மன்னர்க்கு மன்னன் வளவ னகளங்கன்
முன்னர்ப் பணில [1]முழங்குதலு—மின்னிற்போய்ப்
பேணுந் திருமடனு மென்றும் பிரியாத
நாணும் பெருவிருப்பா னல்கூரக்—காணுங்கா
லேய்ப்ப வெதிர்வந் திரவி யுருவவொளி
வாய்ப்ப முகபங் கயமலர்ந்தாள்—[2]போய்ப்பெருகு
மீதா ரகலல்குல் வீழ்கின்ற மேகலையும்
போதாத வண்ணம் புடைபெயர்ந்தாள்—சோதி
குழைய [3]நடுவொடுக்குங் கொங்கையுந் தோளும்
பழைய படியே பணைத்தாள்—பிழையாத
பொன்னித் துறைவன் பொலந்தார் பெறத்தகுவார்
தன்னிற் பிறரின்மை சாதித்தாள்—சென்னிக்குப்
பாராண் முலையாலும் பங்கயத்தா டோளாலும்
வாரா விருப்பு வருவித்தாள்—

(தெரிவை.)

ஓரணங்கு
கோது விரவாக் கொழும்பாகு கொய்தளிரின்
போது புலராப் பொலங்கொம்பு—மீது
முயலா லழுங்கா முழுத்திங்கள் வானிற்
புயலா லழுங்காப் புதுமி—னியல்கொண்
டெழுதாத வோவ மெழுசிறைய வண்டு
கொழுதாத கற்பகத்தின் கொந்து—முழுது
மிருளாக் கலாபத் திளந்தோகை [4]யென்றுந்
தெருளாக் களியளிக்குந் தேறல்—பொருளால்

(பி - ம்.)—1. முழங்குதலுந்—தன்னிற்போய்ப். 2. போய்ப்பெயர். 3. நடுவொதுங்கக் ; நடுவொதுக்குங். 4. யார்க்குந்.

வேங்கை = கொடி ஞேரி = மலை
கோரம் = குதிரை கோழி = ஊர்
அயிராபதம் = யானை பணை = முரசு
சோணாடு = நாடு காவிரி = நதி

வருந்தக் கிடையாத மாணிக்கம் யார்க்கு
மருந்தத் தெவிட்டா வமுதந்—[1] திருந்திய
சோலைப் பசுந்[2]தென்ற றாது வரவந்த
மாலைப் பொழுதின்கண் மண்டபத்து—வேலை
விரிந்த நிலாமுன்றில் வீழ்மகரப் பேழ்வாய்
சொரிந்த [3]மணிக்கற்றை தூங்கப்—[4]பரிந்துழையோர்
பூசிய சாந்தங் கமழப் பொறிவண்டு
மூசிய மௌவன் முருகுயிர்ப்பத்—தேசிகப் சேலை.
பேரிசை யாழ்ப்பாணன் பேதை விறலியொடுஞ்
சேர வினிதிருந்த செவ்விக்கண்—ஞேரியுங்
கோழியும் வேங்கையு முப்பணையுங் கோரமும்
பாழி யயிரா பதப்பகடு—மாழியான்
சூடிய வாரமு மாலையுஞ் சோணாடுங்
காடு [5]திரைத்தெறியுங் காவிரியும்—பாடுகெனக்
கூன வியாழெடுத்தான் பாணன் கொதித்தெழுந்து
வேனி லரசனுந்தன் வில்லெடுத்தான்—[6]றேனிமிர்
தந்திரி யாழ்ப்பாணன் றைவந்தான் றைவந்தான்
வெந்திறன் மாரனுந்தன் வில்லினாண்—முந்த
நிறைநரம்பு பண்ணி நிலைதெரிந்தான் பாணன்
றிறன்மதனு மம்பு தெரிந்தான்—விறலியொடும்
பாண னொருபாணி கோத்தான் பலகோத்தான்
றாணி தொலையச் சுளிந்துவேண்—மாண
[7]விசைத்தன பாண னியாழ்ப்பாணி யெய்து
விசைத்தன வேனிலான் பாணி—விசைத்தெழுந்த
வீணை யிசையாலோ வேனிலா னம்பாலோ
வாணுதல் வீழா மதிமயங்காச்—சேணுலாம்

(பி - ம்.)—1. பொருந்திய. 2. தென்றற்றூது. 3. பனிக்கற்றை. 4. புரிந்திளையோர். 5. திரைத்தலைக்குங்; திரைத்திரைக்குங். 6. தேனிமிரத், தந்திரி பாணன் றடவந்தான் றைவந்தான். 7. இசைத்தனன் பாணனியாழ்த்தனை யம்பு.

வாடை யனைய மலையா நிலந்தனையுங்
கோடை யிதுவென்றே கூறினு—ணீடிய
வாரை முனிந்த வனமுலைமேல் விட்டபனி
நீரை யிதுவோ நெருப்பென்று—ளூரெலாங்
காக்குந் துடியை யழிக்குங் கணைமாரன்
[1] ருக்கும் பறையென்றே சாற்றினுள்—சேக்கைதொறும்
வாழு முலகத் தெவரு மனங்களிப்ப
வீழு நிலவை வெயிலென்றுள்—கோழிக்கோ
னெங்கோ னகளங்க னேழுலகுங் காக்கின்ற
செங்கோல் கொடுங்கோல் சிலர்க்கென்றுள்—கங்குல்
புலருந் தனையும் புலம்பினு ளாங்குப்
பலரும் பணிந்து பரவக்—குலகிரிசூ (ருஎ0)
ழாழிப் புவன மடைய வுடையபிரான்
சூழிக் கடாயானை தோன்றுதலும்—யாழி
னிழைக்கு மிசைமுதலா [2]வெப்பகைக்கு மாற்று
துழைக்கு முயிர்[3]தழைப்ப வோடிப்—பிழைத்தனளாய்
முட்டுந் திகிரி கிரியின் முதுமுதுகிற்
கட்டுங் கடவுட் கடாயானை—யெட்டுந்
தரிக்கு முலகந் தனிதரித்த கோனைப்
பரிக்கு மயிரா பதமே—செருக்கிப்
பொருந்த நினையாத போர்க்கலிங்க ரோடி
யிருந்த [4]தடவரைக ளெல்லாந்—திருந்தா
விதையம் [5]பொருதழிந்த விந்தமே போலப்
புதைய நடந்த பொருப்பே—சிதையாத
திங்கட் குலத்திற்குந் தெய்வப் பொதியிற்கு
[6]மங்கட் பழங்குமரி யாற்றிற்குந்—தங்கள்
படிக்கும் பொருநி நுப பன்னகங்கள் வீழ
விடிக்குந் தனியசனி யேறே—கடிப்பமைந்த (ருஅ0)

(பி - ம்.)—1. தாக்கு முரசென்றே. 2. எப்பகையு மாற்றுது. 3. தளிர்ப்ப. 4. வடவரைகள். 5. பொருதழித்த; பொருதிழந்த. 6. அங்கப் பழங்.

+ வெடிபந்து கொல்.

யாம முரசா லிழந்த [1]நிறைநினது
தாம முரசு தரப்பெற்றே—[2]னுமை
விடைமணி யோசை விளைத்தசெவிப் புண்ணின்
புடைமணி யோசை புலர்ந்தேன்—றடமுலைமே
[3]ஊரு மலையக்கால் சுட்டசூ டுன்செவியின்
மாருப் பெருங்காற்றான் [4]மாற்றினேன்—வேருகக்
கூசும் பனித்திவலை கொண்டுபோ மென்னுயிர்நீ
வீசு மதத்திவலை யான்மீட்டேன்—மூசிய
காருலா மோதக் கடல்முழங்க வந்ததுயர்
நேரிலா நீமுழங்க நீங்கினேன்—பேரிரவி
லென்மே லனங்கன் [5]வரவந்த வின்னலெலா
நின்மே லனகன்வர நீங்கினே—னின்னங்
கடைபோக வென்னுயிரைக் காத்தியேல் வண்டு
புடைபோதப் போதும் பொருப்பே—விடைபோய்நீ
ராட்டுந் தடங்கலக்கின் மாறற் கயில்வாளி
காட்டுந் தடமே கலக்குவாய்—கேட்டருளாய்
கார்நாணு நின்கடத்து வண்டொழியக் காமனார்
போர்நாணின் வண்டே [6]புடைத்துதிர்ப்பாய்—பார்நாதன்
செங்கைக் கரும்பொழியத் தின்கைக் கனங்கனார்
வெங்கைக் கரும்பே விரும்புவா—யெங்கட்
குயிரா யுடலா [7]யுணர்வாகி யுள்ளா
யயிரா பதமேநீ யன்றே—பெயராது
நிற்கண்டா யென்றிரந்து நின்றாள்.

(பேரிளம்பெண்.)

விற்கொண்ட பேரிளம்பெண் வேறொருத்தி—கொற்கையர்கோன்

(பி - ம்.)—1. நிறையுனது. 2. ஏம; சேம. 3. ஆரு மலையக்காலட்ட. 4. மாறினேன். 5. பொரவந்த. 6. புடைத்துகுப்பாய். 7. உறவாகி.

மல்லற் [1]புயத்தனகன் மால்யானைக் கைபோலக்
கொல்லத் திரண்ட குறங்கினு—ளெல்லையில்
கோடுங் கொலைகுயின்ற சேடன் குருமணிவேய்ந்
தாடும் படமனைய வல்குலாள்—சேடியாய்த்
தம்மை யெடுக்கு மிடைகடிந்த தம்பழிக்குக்
கொம்மை முகஞ்சாய்த்த கொங்கையாள்—செம்மை
நிறையு மழகா னிகரழித்துச் செய்யா
ளுறையு மலர்பறிப்பா ளொப்பா—ணறைகமழு
மாலை பலபுனைந்து [2]மான்மதச்செஞ் சாந்தெழுதி
வேலை தருமுத்த மீதணிந்து—சோலையின்
மானு மயிலு மனைய மடந்தையருந்
தானு மழகு தாவிருப்பத்—தேனிமி
ரூற விளம்பாளை யுச்சிப் [3]படுகடுந்
தேறல் வழிந்திழிந்த செவ்விக்கண்—வேறாக
வாக்கி மடனிறைத்து வண்டு [4]மதினுரையும்
போக்கி யொருத்தி புகழ்ந்துதர—நோக்கி
வருந்திச் சிறுதுள்ளி வள்ளுகிரா லெற்றி
யருந்தித் தமர்மே லயர்ந்தாள்—பொருந்து
மயக்கத்து வந்து மனுதுங்க துங்க
னயக்கத் [5]திருக்கனவு நல்கு—முயக்கத்து
மிக்க விழைவு மிகுகளிப்பு [6]மத்துயிலு
மொக்க விகல வுடனெழுந்து—பக்கத்து
வந்து சுடரு [7]மொருபளிக்கு வார்சுவரிற்
றந்த தனதுநிழ றுனோக்கிப்—பைந்துகிற்
காசுசூ ழல்குற் [8]கலையே கலையாகத்
தூசு புடைபெயர்ந்து தோணெகிழ்ந்து—வாசஞ்சேர்

(பி - ம்.)—1. புயத்தான்றன். 2. மான்மதச் சாந்தெழுதி. 3. படுநறுங். 4. மதுநுரையும். 5. தருங்கனவினல்கு. 6. மெய்த்துயிலு, மொக்க வருந்தி யுடனெழுந்து. 7. ஒளிப்பளிக்கு. 8. கலைமேகலை.

சூடிய மாலை பரிந்து துணைமுலைமே
லாடிய சாந்தி னணிசிதைந்து—கூடிய
செவ்வாய் [1]விளர்ப்பக் கருங்கண் சிவப்பூர
வெவ்வா ணுதலும் [2]வெயரரும்ப—விவ்வாறு
கண்டு [3]மகிழ்ந்த கனவை நனவென்று
கொண்டு பலர்க்குங் குலாவுதலும்—[4]வண்டுவீழ்
வேரிக் கமழ்கோதை வேறாகத் தன்மனத்திற்
பூரித்த மெய்யுவகை பொய்யாகப்—பாரித்த
தாமக் கவிகை நிழற்றச் சயதுங்க
னாமக் கடாக்களிற்று நண்ணுதலுந்—தேமொழியுங்
கண்டது கெட்டேன் [5]கனவை நனவாகக்
கொண்டது மம்மதுச்செய் கோலமே—பண்டுலகிற்
செய்த தவஞ்சிறிது மில்லாத தீவினையேற்
கெய்த வருமே யிவனென்று—கைதொழுது
தேறி யொருகாலுந் தேறாப் [6]பெருமைய
லேறி யிரண்டா வதுமயங்கி—மாறிலாத்
தோழியர் தோண்மே லயர்ந்தாளத் தோழியரு
மேழுயர் யானை யெதிரோடி—[7]யாழியாய்
மாடப் புகாருக்கும் வஞ்சிக்குங் காஞ்சிக்குங்
கூடற்குங் கோழிக்குங் கோமானே—[8]பாடலர்
சாருந் திகிரி தனியுருட்டி [9]யோரேழு
பாரும் புரக்கும் பகலவனே—சோர்வின்றிக்
காத்துக் குடையொன்றா லெட்டுத் திசைகவித்த
வேத்துக் குலகிரியின் மேருவே—போர்த்தொழிலா
லேனைக் கலிங்கங்க ளேழினையும் போய்க்கொண்ட
தானைத் தியாக சமுத்திரமே—மானப்போ

(பி - ம்.)—1. வெளுப்பக் கருங்கண் ணிணைசிவப்ப. 2. வியரரும்ப; வெயர்வரும்ப. 3. மகிழ்ந்து கனவை நனவாகக். 4. வண்டுசூழ். 5. கனவே. 6. பெரியமயல். 7. வாழியாய். 8. பாடலர். 9. ஈரேழு.

ரிம்ப ரெழுபொழில் வட்டத் திகல்வேந்தர்
செம்பொன் மவுலிச் சிகாமணியே—நம்பநின்

பாரிற் படுவன பன்மணியு நின்கட
ணீரிற் படுவன நித்திலமு—நேரியநின்

வெற்பில் வயிரமும் வேந்தநின் சோணாட்டுப்
பொற்பின் மலிவன பூந்துகிலு—நிற்பணியக்

கொண்டா யிவடனது கொங்கைக் கொழுஞ்சுணங்குந்
[1] தண்டா நிறையுந் தளிர்நிறமும்—பண்டத்

துயிலுங் கவர்ந்ததுநின் றோல்[2] குலத்து வேந்தர்
பயிலுந் திருநூற் படியே—புயல்வளவ

மன்னிய தொண்டை வளநாடு வாளியும்
பொன்னி வளநாடு பூஞ்சிலையுங்—கன்னித்

திருநாடு தேருங் குறைபறப்பச் செய்தாற்
றருநாண் மடமகளிர் தம்மை—யொருநாளவ்

வேனற் கரசன் விடுமே யவன்சினமிப்
பானற்க ணல்லா ளுயிர்ப்பரமே—யானக்காற்

குன்றே யெனத்தகுநின் கோபுரத்திற் றூங்குமணி
யொன்றே யுலகுக் கொழியுமே—யென்றிணைய

கூறி வணங்கிடு மிவ்வளவுங் கோதைமேற்
சீறி யனங்கன் [3] சிலைவளைப்ப—மாறழியக்

குத்துங் கடாக்களிற்றுப் போந்தான் கொடைச்சென்னி
யுத்துங்க துங்க னுலா.

கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயுஞ்
செய்ய கரிய திருமாலே—வைய
மளந்தா யகளங்கா வாலிலைமேற் பள்ளி
வளர்ந்தாய் தளர்ந்தாளிம் மான்.

விக்கிரமசோழனுலா முற்றிற்று.

(பி - ம்.)—1. தண்டா மரையின். 2. குலத்து நீங்கள். 3. செருப்பெய்ய.

குலோத்துங்கசோழனுலா.

தேர்மேவு பாய்புரவிப் பாசடைச் செங்கமலம்
போர்மேவு பாற்கடற் பூத்தனையோன்—பார்மேன்
மருளும் பசுவொன்றின் மம்மர்நோய் தீர
வுருளுந் திருத்தே ருரவோ—னருளினாற்
[1] பேராப் பெரும்பகை பேரப் பிறவேந்த
ருராக் குலிச விடையூர்ந்தோன்—சோருந்
துயில்காத் தரமகளிர் சோர்குழைகாத் தும்ப
ரெயில்காத்த நேமி யிறையோன்—வெயில்காட்டு
மவ்வா னவர்கோ னொருமடங்க லாசனத்தி
லொவ்வாம லொக்க வுடனிருந்தோன்—கௌவை
யெழக்குரைக்கும் பேழ்வா யிருங்கூற்றுக் கேற
[2]வழக்குரைத்த கிள்ளி வளவன்—பழக்கத்தாற்
போந்த புலியுடனே புல்வா யொருதுறைநீர்
மாந்த வுலகாண்ட மாந்தாதா—காந்தெரியில்
வெந்தா ருயிர்பெற் றுடல்பெற்று விண்ணாள
மந்தா கினிகொணர்ந்த மன்னர்கோன்—முந்து
பொருதேர் களிறைந்தி னீரைவர் போர்பண்
டொருதேரால் வென்ற வுரவோன்—கருதி
[3]மலைபத்து மெட்டு முரமின் மறவோன்
றலைபத்தும் வெட்டுஞ் சரத்தோ—னிலைதப்பா

(பி - ம்.)—1. தேராப் பெரும்பகை தீரப். 2. வழக்குரைக்குங். 3. மலைபத்தும் வெட்டு முரமின்.

மீளி தலைகொண்ட தண்டத்தான் மீளிக்குக்
கூளி தலைபண்டு கொண்டகோ—னாளும்

பதுமக் கடவுள் [1]படைப்படையக் காத்த
முதுமக்கட் சாடி முதலோன்—பொதுமட்க

வாங்கெயி னேமி வரையாக மண்ணாண்டு
தூங்கெயில் கொண்ட சுடர்வாளோ—னோங்கிய

மால்கடற் பள்ளி வறிதாக மண்காத்து
மேல்கடல் கீழ்கடற்கு விட்டகோன்—கோல்கொண்

றலையெறியுங் காவேரி யாற்றுப் படைக்கு
மலையெறியு மன்னர்க்கு மன்ன—னிலையறியாத் (௩௦)

தொல்லார் கலிவலயத் தோள்வலய முன்றிருந்த
வில்லா னடுவுள்ள வெற்பெடுத்தோ—னெல்லைக்

கொலையே றுடம்படையக் கொய்தாலு மெய்தாத்
துலையேறி வீற்றிருந்த சோழன்—றலையேறு

மண்கொண்ட பொன்னிக் கரைகட்ட வாராதான்
கண்கொண்ட சென்னி கரிகால—னெண்கொள்

பணம்புணர்ந்த மௌலியான் கோமகளைப் பண்டு
மணம்புணர்ந்த கிள்ளி வளவ—[2]னணங்கு

படுத்துப் பொறையனைப் பொய்கைக்குப் பண்டு
கொடுத்துக் களவழிப்பாக் கொண்டோ—னடுத்தடுத்துச் (௪௦)

சீறுஞ் செருவிற் றிரு [3]மார்பு தொண்ணூறு
மாறும் படுதழும்பி னாத்தோன்—வேறு

பிரம வரக்க னகலம் பிளந்து
பரமர் திருத்தில்லை பார்த்தோ—னரபதியர்

தாழமுன் சென்று மதுரைத் தமிழ்ப்பதியு
மீழமுங் கொண்ட விகலாளி—சூழவு

(பி - ம்.)—1. படைப்படைப்ப வாங்கு. 2. இணங்கு, படுத்தும் பொறியனைய பொய்கைக் கவிக்குக். 3. மார்பிற் றொண்ணூறு.

மேறிப் பகலொன்றி லெச்சுரமும் போயுதகை
நூறித்தன் றாதையை நோக்கினோன்—[1]வேறொருக்கக்
கங்கா நதியுங் கடாரமுங் கைக்கொண்டு
சிங்கா தனத்திருந்த செம்பியர்கோ—னெங்கோன்
புவிராச ராசர் [2]மனுகுலத்தோர் போனார்
தவிராத சுங்கந் தவிர்த்தோன்—கவிராசர்
போற்றும் [3]பெரியோ னிவன்பின்பு பூதலங்க
ளாற்றுந் திருத்தோ ளகளங்கன்—வேற்றோர்
விரும்பரணில் வெங்களத்தீ வேட்டுக் கலிங்கப்
பெரும்பரணி கொண்ட [4]பெருமான்—றரும்புதல்வன்
கொற்றக் குலோத்துங்க சோழன் குவலயங்கண்
முற்றப் புரக்கு முகில்வண்ணன்—பொற்றுவரை
யிந்து மரபி லிருக்குந் திருக்குலத்து
வந்து மனுகுலத்தை வாழ்வித்த—பைந்தளிர்க்கை
மாதர்ப் பிடிபெற்ற வாரணமவ் வாரணத்தின்
காதற் பெயரன் [5]கனகள்வன்—யாதானுந்
தீட்டற் கரிய திருவே திருமாலை
சூட்டத் திருமகுடஞ் சூட்டியபின்—னாட்டு
முறைவிட்ட வேற்று முடிமன்னர் தத்தஞ்
சிறைவிட் டரசருளிச் செய்து—கறைவிட்ட
மைஞ்ஞாக மெட்டு மதநாகமோரெட்டும்
பைஞ்ஞாக மெட்டும் பரங்கெடுத்—திஞ்ஞாலந்
தாதைக்குந் தங்கள் தபனற்குந் தோலாத
போதத் திமிரப் [6]பொறைதீர்த்து—மாதரி
லொக்க வபிடேகஞ் செய்யு முரிமைக்கட்
டக்க [7]தலைமைத் தனித்தேவி—மிக்க

(பி - ம்.)—1. வேறுகக். 2. மனுமுதலோர். 3. பெரியோ ரிவர் பின்பு. 4. பெருமாள். 5. கனகனவன். 6. பொறைநீக்கி. 7. நிலைமைத் தலைத்தேவி.

புவன முழுதுடைய பொற்றொடியுந் தானு
மவனி சுரர்சுருதி யார்ப்ப—நவநிதிதூ
யேத்தற் கருங்கடவு ளெல்லையி லானந்தக்
[1]கூத்தைக் களிகூரக் கும்பிட்டுப்—[2]போத்தின்மேற்
றில்லைத் திருமன்றின் முன்றிற் [3]சிறுதெய்வத்
தொல்லைக் குறும்பு தொகுத்தெடுத்து—மல்லற்
றசும்பு [4]வளர்த்ததளித் தன்பெரு நாவ
லசும்பு பசும்பொ னடுக்கி—[5]விசும்போ (அ0)
ரலகை யிகந்த வசலகுல வச்ரப்
பலகை ததும்பப் பதித்து—மலர்கவிகை
காக்குங் கடலேழின் முத்தும் வரகங்கை
தூக்கு மருவியிற் சூழ்போக்கி—நோக்கந்
தொடுக்குஞ் சிரச்சேடன் [6]சூடா மணிகொண்
டெடுக்குந் திருத்தீப மேற்றி—யடுக்கிய
தூய வயிரத்தால் வாவியாய்ச் சூழ்கிடந்த
பாய மரகதத்தாற் பாசடையாய்—போய
பருமுத்தா லாலியாய்ப் பற்பரா கத்தாற்
றிருமிக்க செந்தா மரையாய்ப்—பெருவற்க (௬0)
நீலத்தால் வண்டி னிரையா யுரையிகந்த
கோலத்தாற் கோயிற் பணிகுயிற்றிச்—சூலத்தா
ளுடுந் திருப்பெரும்பே ரம்பலமுங் கோபுரமு
மாடம் பரந்தோங்கு மாளிகையுங்—கூடிப்
பொலங்கோட்டு மாமேருப் பூதரமும் [7]போய
வலங்கோட் டிகிரியு மானத்—தலங்கொ
ணிலையேழு கோபுரங்க ணேரே நெருங்கு
மலையேழு மென்ன வகுத்துத்—தலையின்

(பி - ம்)—1. கூத்துக். 2. போற்றினமேல். 3. சிறைகிடந்த. 4. வளாகனிற் றண்பணி நாவல். 5. விசும்பே, ரலகை யிகந்த வகல. 6. சூளாமணி. 7. போல.

மகரங்கொள் கோபுரமும் [1]வான விமானச்
சிகரங்க ளாகித் திகழ—நிகரி

லெரிபொற் படர்பாறை யென்னவா யெங்கும்
விரிபொற் றிருமுற்ற மின்னச்—சொரிபொற்

கடாரம் பனிநீர் கவினிக் கனபொற்
றடாகங்க ளாகித் ததும்ப—விடாதுநின்

றற்பக லாக வனந்த சதகோடி
கற்பக [2]சாதி கதிர்கதுவப்—பொற்பூண்

[3] வரமகளிர் தத்தம் பணிமுறைக்கு வந்து
சுரமகளி [4]ராகத் துவள—வொருதான்

பிறக்கு மிமையப் பெருங் [5]கடவுள் வெற்பை
மறக்கும் படிசெல்வ மல்கச்—சிறக்கு

மிருக்காதி யெம்மறையு மெவ்வுலகு மீன்று
டிருக்காமக் கோட்டந் [6]திகழ்வித்—தருக்கன்

புனையா மணியாலும் பொன்னாலு மின்ன
[7] மனையா லொருதேர் வகுத்து—முனைவன்

திருவீதி யீரிரண்டுந் தேவர்கோன் மூதூர்ப்
பெருவீதி நாணப் பெருக்கி—வருநாளிற்

பொங்கார் கலிசூழ் புவனம் பதினாலுங்
கங்கா புரிபுகுந்து கண்டுவப்பத்—தங்கள்

புவனி பெறவந்த பூபாலர்க் கெல்லாம்
பவனி யெழுச்சி பணித்துக்—கவினு

மடமயி லொக்க மகுடங் கவித்தா
ளுடனுறை பள்ளி யுணர்ந்து—தடமுகி

லஞ்சன (சை)ல மபிடேகஞ் செய்ததென
மஞ்சன மாடி வழிமுதற்—செஞ்சடை

(பி - ம்.)—1. மானவிகாரச். 2. சோதி கதிர்த்துவரப். 3. பரமகளிர். 4. ஆகித்தறும. 5. கடவுட்குன்ற, மறைக்கும். 6. திகழ்த்தி—வருக்கப். 7. மணியா லொருதேர்; மணியாலோ ரோர்தேர்.

வானவர் பொற்றுள் வணங்கி மறையவர்க்குத்
தான மனைத்துந் தகைபெறுத்தி—வானிற்
கிளைக்குஞ் சுடரிந்த்ர நீலக் கிரியை
வளைக்கு மிளநிலா மானத்—திளைக்கு
முருவுடை யாடை தரித்தொரு வெள்ளைத்
திருவுடை யாடை திகழ—வொருபுடை
பச்சை யுடைவாள் விசித்த தொருபசும்பொற்
கச்சை நவரத்னக் கட்டெறிப்ப—வச்ச
வெருவுதர வெல்லா விரவிகளும் போய்வீழ்
திருவுதர பந்தனமுஞ் சேர்த்தித்—திருமார்பிற்
கார்க்கடன் மீதே கதிர்முத்தத் தாமங்கள்
பாற்கடல் சேர்த்த தெனப்பரப்பக்—கார்க்கடலில்
வந்த வனச மதிபோல மற்றது
தந்த கடவுண் மணிதயங்கப்—பந்தச்
சுரர்கனகத் தோள்வலயச் ஸூட்டுக் கவித்த
வுரக பணாமணியு மொப்ப—விரவி
மகரக் குழைதிருத்தோண் மேல்வந் தசையச்
சிகரச் சுடர்போற் றிகழ—நிகரின்
முடியின் மணிவெயிலு முத்தக் குடையின்
வடிவு நிலவை மலைப்பப்—படியின்
வயங்கு கடக மகுடாதி மின்னத்
தயங்கு பெரும்போது சாத்தி—முயங்கிய
செவ்வி நுதலிற் றிருநீற்றுப் புண்டரம்
வவ்வி மகளிர் மனங்கவற்ற—நொவ்விய
நாவியு மான்மதமுஞ் சாந்து நறையகி
லாவியு மாகண் டமும்வளைப்பத்—தீவிய
தோண்மாலை வாசக் கழுநீர் குழல்சேர்த்திக்
கோண்மாலை கூசக் குளிர்கொடுப்ப—நாண்மாலை
வேந்தர் முடிவணங்க வேதிய ரேத்தெடுப்பப்
போந்து புறநின்ற போர்க்களிற்றை—வேந்தரின்

மாக்காத லாளுவரு மாறழிந்த மீனவனும்
வீக்காம லெங்குள்ள மெய்ம்முகிற்குங்—கோக்கடவு

ளெட்டாத வச்சிரமு மெல்லா வுருமேறும்
வெட்டாம லெங்குள்ள வெற்பினுக்கு—முட்டா

முதுவாய் வடவையு முந்நான்கு கோளுங்
கதுவாய வெல்லாக் கடற்கும்—பொதுவா (௧௬௦)

யபயங் கொடுக்கு மயிரா பதத்தை
யுபய வயக்கோட் டுரிமைப்—பிரபையின்

பொருத்தந் தருமொரு மேருப் பொருப்பை
யெருத்தந் திருக்கவின வேறித்—திருத்தகு

பள்ளிப் பலதொங்கற் சோலை பகல்விலக்க
வெள்ளிக் கவிகை மிசையோங்க—வொள்ளிய

வொற்றை வலம்புரி யூத வதன்பின்பு
மற்றை யுலகில் வளைகலிப்பக்—கற்றைக்

கவரி யிரட்டக் கடவுண் முரசார்த்
துவரி யுவாவாடி யொப்ப—வயிர்வாளுஞ் (௧௭௦)

சங்குந் திகிரியுஞ் சானகமுந் தண்டகமு
மெங்குஞ் சுடர்விட் டிடர்களையக்—கொங்கத்து

விற்கொடியு மீனக் கொடியுங் கொடுவரிப்
பொற்கொடி யொன்றின் புடைபோதத்—தெற்கின்

மலையா நிலம்வரவே வார்பூங் கருப்புச்
சிலையான் வரவு தெரியத்—தொலையாது

வீசுந் திவலை விசும்புகூர் மங்குலால்
வாசவன் வந்த வரவறியக்—கூசாதே

யாவ ரொழிவா ரிணம்வரவே மற்றுள்ள
தேவர் வருவ ரெனத்தெளிய—யாவர்க்கும் (௧௮௦)

பின்னர் வழங்கு முழங்கு பெருங்களிற்றுத்
தென்னர் முதலானோர் சேவிப்ப—முன்னர்ப்

பரவி யுலகிற் பலமண்ட லீகர்
புரவி மிசைகொண்டு போக—வருவிபோய்

விட்டு மதம்பொழிய வேழத் திசைவேழ
மெட்டு மொழியப் புகுந்தீண்டிக்—கட்டி
யிரவிக் குணிப்பன வேழு மொழியப்
புரவிக் குலமுழுதும் போத—விரவி
யுடைய நிதிக்கடவு ளூர்தி யொழிய
வுடைய நரவெள்ள மார்ப்ப—விடையே (கசூ௦)
யெழுந்த துகளுருவ மேறியுஞ் சுண்ணம்
விழுந்த் துகளுருவம் வீழ்ந்துந்—தொழுந்தகைய
விண்ணுலகு மண்ணுல காக விளங்கிய
மண்ணுலகு பொன்னுலகாய் மாறாட—வெண்ணிலா
மாகதரு மங்கலரும் பாடகரும் விஞ்சையரும்
பூகத ராயினர் போற்பரவ—நாகர்
கொழுந்தெழு கற்பக சாதி குவித்துந்
தொழுந்தொழு மன்னர் சொரிந்து—மெழுந்துதன்
கைம்மழை பெய்துங் கனகப் பெயற்றார்ந்த
மைம்மழை மாட மறுகணைந்தான்—றம்முடைய (௨௦௦)
சாலை தொறுந்திரள்வார் சாளரங்கள் கைக்கொள்வார்
மேலை நிலாமுன்றின் மேற்றெருகுவார்—..........
தெற்றி யடைய மிடைவார் சிலமாதர்
நெற்றி சுருங்க நெருங்குவார்—.........
மாளிகை யேறுவார் மண்டபத்தின் மண்டுவார்
சூளிகை மாடந் தொறுந்துறுவார்—.........
இரண்டு மருங்கிலு மிப்படி யொப்பத்
திரண்டு பலரெதிரே சென்று—..........
கரும்புருவ......வில்லுங் கண்மல ரம்பும்
பெரும்புவன வெல்லை பிடிப்பச்—(சுரும்பு) (௨௧௦)
நிரைக்கு நிரைமுரல நீலக் குழாங்க
ளிரைக்கு மிரைமொகுமொ கென்ன—..........
மாகாள கங்கண் ஞிமிறுவாய் வைத்தூதுங்
காகாள மென்னும் படிகலிப்ப—...........

......................ழ்குழைமீதா டொய்ய
மகரம் பிறழ்கொடியின் வாய்ப்ப —..........

சேனு முகமுந் தெறிப்ப வதனெதிரே
சேனு பராக மெனத்திகழப்—பூநாறுஞ்

சுண்ண மெதிர்தூஉ யுடனே தொடியுந்தூஉய்
வண்ண மிழப்ப மனமிழப்பார்—மண்ணுலகி (௨௨௦)

லின்னற் பகைவ னிவன்கா ணகளங்கன்
மன்னற்கு மன்னன் மகனென்பார்—முன்னர்

முதுகுல மன்னர் முடிவணங்க வந்த
விதுகுல நாயகிசே யென்பார்—குதுகுலங்

கண்வருஞ் செவ்விக் கடவுட் டிசாதேவ
ரெண்வருங் காணு மிவனென்பார்—விண்வருந்

தேவர்க்கு நாயகற்குந் தெய்வ முனிவர்க்கும்
யாவர்க்குங் காவ லிவனென்பார்—தீவிய

மாதவியுஞ் செங்கழு நீரும் வலம்புரியுந்
தாதகியுங் கொ............லோர்—மாதை (௨௩௦)

யொறுக்கு மிதிலை யொருவில்லைத் தொல்லை
யிறுக்கு மவனிவ னென்பார்—மறக்காமற்

சென்று கணேகட வார்த்துத் திருக்குலத்து
நின்ற பழிதுடைப்பாய் நீயென்பா—ரின்றளவுந்

துஞ்சு துயிலிழந்து கண்டார் குழற்றளேந்து
நஞ்சு குமிழிபெழு நாடென்பார்—பஞ்சவனே

வாடையினுந் தண்ணென்னு மந்தா நிலமெமக்குக்
கோடையினுந் தீது கொடிதென்பார்—கூடி

முருகுவார் கூந்தலார் மொய்த்தலர்ந்த கண்ணுற்
பருகுவார் போல்விழுந்து பார்ப்பார்—பொருமதனன் (௨௪௦)

பார்த்தானே புங்கானு புங்கம் படப்பகழி
தூர்த்தானே யாதென்று சொல்லுகே—ணர்த்தா

ணுளைத்தான் சிலைக ளொருகோடி கோடி
வளைத்தான் கரும்புலகின் மாய்த்தா—னிளைத்தா

(பேதை.)

னிணையர் பலர்புகழ வீங்கொருத்தி முத்திற்
புனையுஞ் சிறுதொடிக்கைப் பூவை—கனமுகினே
ராடாத தோகை யலராத புண்டரிகம்
பாடாத பிள்ளைப் பசுங்கிள்ளை—சூடாத்
தளிராத சூதந் தழையாத வஞ்சி
குளிராத திங்கட் குழவி—யளிக (உருo)
ளியங்காத தண்கா விறக்காத தேறல்
வயங்காத் கற்பக வல்லி—தயங்கிணர்க்
கூழைச் சுருண்முடிக்குக் கூடுவதுங் கூடாதா
மேழைப் பருவத் திளம்பேதை—சூழு
நிலத்தாய வெள்ள நெருங்க மருங்கின்
முலைத்தாயர் கைத்தாயர் மொய்ப்பத்—தலைத்தந்த
தொக்க கவிகைக் குலோத்துங்க சோழனை
மிக்க பரந்தபனை மீனவனைப்—புக்கார்
வணங்க வணங்கி வழுத்த வழுத்தி
யணங்க வணங்கா ளகலாள்—குணங்காவன் (உசுo)
மன்னன் புனைந்த திருமுத்தின் மாலையை
யன்னம் படிந்தாட வாறென்னும்—பின்னருங்
கோவைத் திருப்பள்ளித் தொங்கற் குழாங்கிளிக்கும்
பூவைக்கு நல்ல பொழிலென்னும்—பாவை
யயிற்கு மிருகோட் டயிரா பதத்தை
மயிற்கு மலையென்று மாறும்—குயிற்கிளவி
தேன்வாழுந் தாமஞ்சூழ் தெய்வக் கவிகையை
மான்வாழு மாசின் மதியென்னுங்—கோனுடைய
பாங்கு வளையாழிப் பார்மடந்தை தன்னுடைய
பூங்குவளை மாலை புனைகென்னுந்—தேங்கமலத் (உஎo)
தற்புத வல்லி யவளை யிரந்துடைய
கற்பக மாலையைக் காதலிக்கும்—பொற்பார்

பொலம்புரிக் காஞ்சிப் புகழ்...........
வலம்புரி மாலைக்கு மாழ்கும்—பொலந்தொடிப்
போரார வாரப் பொலங்கொடி பெற்றுடைய
பேரார மாலைக்குப் பேகணிக்கு—நேரிய
ணேந்திழை மாத ரெவர்க்கும் பொதுவாய
பூந்துழாய் மாலை புனைகென்னும்—வேந்தன்மு
னிவ்வகை யல்ல திலங்கிழையார் மால்கூறு
மவ்வகை கூறுள்

(பெதும்பை.)

அயலொருத்தி—யெவ்வுலகு
முற்ற முடிக்கு முடித்தாம வேள்சூட்டுங்
கொற்ற முடியனைய கொண்டையா—ளற்றைநாட்
சாத்து மபிடேகத் தாரைபோற் றாழ்கின்ற
கோத்த பருமுத்தக் கோவையா—டேத்து
விடம்போன் மணிகட்கு வேழங்கட் கெல்லாங்
கடம்போற் கலையூறுங் கண்ணா—ளடங்க
வயிர்ப்பான் மறலி மகளுருக்கொ ளீதென்
றயிர்ப்பா ரயிற்கு மழகா—ருயிர்ப்பாவை
கொல்லிக்கு முண்டுயி ருண்மைத்ரி கூடத்துஞ்
சொல்லிக் கிடக்குந் துணைமணிக்கும்—வல்லி
யிதற்கு நடைவாய்த் துயிர்வாய்த்த தென்ன
மதர்க்கு மொருதிரு மாது—முதற்றண்
பணிவாயி லாயம் பரந்தகலக் கிள்ளைக்
கணிவாயின் முத்த மருளி—மணிவாயிற்
சொல்லா யெனக்கன்னை சொல்லாயே நீயறிய
வல்லாய் பிறவறிய வல்லையோ—கல்லரணக்
கோழித் திருந்தாத கொற்றவற்கு வெற்றிப்போ
ராழித் திருக்கை யபயற்கு—வாழியாய்க்
காக்குங் கடலேழு மாடுங் கடாரமோ
வாக்கு நதியேழு மாரமோ—தேக்கிய

பண்ணேழுங் கன்னுவ தங்கிசமோ பண்டளந்த
மண்ணேழும் வாகு வலையமோ—தண்ணறுந்
தூவ னறவப் பொழிலேழுந் தொங்கலோ
காவன் மலையேழுங் கந்துகமோ—மேவலாய்ச்
செய்யு நலத்துடைய கோளேழுந் தீபமோ
பெய்யு முகிலேழும் பேரியமோ—வையகங்
கூறு மவையிவை யென்று குறுந்தொடி
வேறு தனிவினவு மெல்லைக்கட்—சீறு
மொருத னடியின் மடிய வுபய
பருது பொருத [1]வயவன்—விருதன்
விலையி னமுத மதன விமலை
முலையின் முழுகு முதல்வன்—வலைய
கனக சயில வெஃபிலி கணவ
னனக னமல னதுலன்—றினகரன்
வாசவன் றென்னன் வருண னளகேசன்
கேசவன் பூசக்ர கேயூரன்—வாசிகை
யாழிப் பெருமா ளபய னனபாயன்
சூழிக் கடாயானை தோன்றுதலுங்—தாழாது
சென்றா டிருமுன்பு செந்தளிர்க் கைகுவித்து
நின்றா ளினிவறிதே நிற்குமே—யென்றாளுங்
கோடு கமழ்கண்டல் கொண்டற்கு மாலதியோ
னேடு நகாதே யுடையாதே—பீடுற
வந்த கொடுங்குன்ற வாடைக் கிளங்கொன்றைக்
கொந்து கொடாதே குழையாதே—செந்தமிழ்த்
தென்ற லெதிர்கொண்ட தேமாங் கொழுங்கன்று
மன்றல் கமழாதே மாளாதே—யென்றுபோய்ச்
சூதள வல்ல துணைமுலை தூயகண்
காதள வல்ல கடந்தபோய்—மாத
ருருவத் [2]தளவென் றொளியுக்க மாக்கம்
பருவத் தளவல்ல பாவங்—தெருவத்

(பி - ம்.)—1. வயனை. 2. அளவென் றொளி.

துடைவ துடையாதா முள்ள முறவோர்த்
தடைவ தடையாதா மச்சங்—கடல்கடைந்த
சேயினு நல்ல பெருமா டிருத்தடந்தோ
ேடாயினுந் தோய மனந்துணியு—மாயினு
மேந்து தடந்தோ ளிணைப்பணைப்புக் கண்டிலன்
காந்து மதிவதனங் கண்டிலன்—பூந்தடந்
தேரி னகலுந் திருந்தல்குல் கண்டிலன்
காரி னிருளளகங் கண்டிலன்—மாரவே
ளெய்யு மொருகருப்பு வல்வில் லெடுத்தானே
கொய்யு மலரம்பு கோத்தானே—தையலிமான் (௩௪௦)
மந்தா கினிக்கோன் றிருப்புருவ வார்சிலையுஞ்
செந்தா மரைக் கண் ணுஞ்செய்ததே—நொந்தார்
வளைத்தளி செங்கை மடுத்தெடுத்து வாசக்
கிளைத்தளி பாயற் கிடத்தித்—துளைத்தொகை
[1]பாய்க்குழ லன்று பரவு மனலூதும்
வேய்க்குழ லென்று விளம்பியுந்—தீக்கொ
ணிகழ்நிலா வன்று நிருபகுல துங்கன்
புகழ்நிலா வென்று புகன்று—மிகலிய
பல்லிய மன்று பராசு கேசரி
வல்லிய மென்று மருட்டியு—மெல்லிய (௩௫௦)
கல்லார மன்று கதிரோன் றிருமருமான்
மெல்லார மென்று விளம்பியு—நல்லா
ரருத்தி யறியா ரவையிவை யென்று
திருத்தி விடவிடாய் தீர்ந்தாள்—

(மங்கை.)

ஒருத்தி
யுருவ வரிக்க ணொழுக வொழுகப்
புருவ முடன்போதப் போத—வெருவி

(பி - ம்.)—1. யாய்க்குழல்.

வனமுலை விம்மி வளர வளரப்
புனைதோள் புடைபோதப் போத—வினையா

ரருங்கலை யல்கு லகல வகல
மருங்குபோ யுள்வாங்க வாங்க—நெருங்கு (௩௯௦)

[1]பரவர ராச பயங்கரன்மேல் வேட்கை
வரவர வற்றாத மங்கை—பொருவரு

தேமி......ங்குங்காலையி.......செவ்வி
தாமரைக்கே சாலுந் தரத்ததோ—காம

ரமுத மதியத் தலர்நிலா முற்றுங்
குமுத நறுமுகைக்கே கூறோ—நமதுகார்

கானின் மடமயிற்கே காணியோ [2]தண்ணிள
வேனில் குயிற்கே விதித்ததோ—தேனிமிருந்

தண்டா மரையா டலைவனை யானும்போய்க்
கண்டாலென் னென்னுங் கடைப்பிடியாள்—பண்டை (௩௭௦)

யொள்ளியா ரணங்காது...மமைத்தா மென்றுந்
தெளியாத வாறே தெளிந்துங்—களியன்னம்

வாவிக் கரையில் வரநீ ரரமகளிர்
சேவிக்க நின்றாடுஞ் செவ்வியாள்—காவிற்

புகுதி லவன்றெய்வப் பூங்குழையா ராயத்
தொகுதி புடைபெயர்ந்து சூழ்வாண்—மிகுதே

னிரையா வந்தரு செய்குன்றி னீங்கா
வரையர மாதரில் வாய்ப்பாள்—பெருவிலை

முத்தின் விளங்கி முளரித் தவளப்பூங்
கொத்தி லணங்கனைய கோலத்தாள்—பத்திய (௩௮௦)

பச்சை மரகதப் பூணிற் பணைமுலைசூழ்
கச்சை நிலமகள்போற் காட்சியா—ணிச்ச

முரக பணமணிகொண் டொப்பிக்கி லொப்பில்
வரகமலை யன்ன வனப்பா—ணரபதி

(பி-ம்.)—1. பரவவா ராச. 2. தன்னிள.

மைமுகில் வண்ணத்து வானவன் மீனவன்
கைமலை மேல்வரக் கண்டதற்பின்—மொய்மலர்
நீலமே வேய்ந்தடுக்க நீலமே பூண்டுடுக்க
நீலமே யன்றி நினையாதா—ணீலமே
முன்னுடைய செங்கே ழெறிக்கு முறிக்கோலங்
தன்னுடைய மானந் தழீஇக்கொள்ளப்—பின்னர்
நெருங்கு கழுநீரு நீலோற் பலமு
மொருங்கு மலர்தட மொத்து—மருங்கே
யிறங்கிய கற்பக வல்லியு மேறி
யுறங்கிய தும்பியு மொத்தும்—பிறங்கு
வயங்கு தளிரின் மலங்கொம்பர் பூக்கொண்
டியங்கு கருவிளை யொத்துந்—தயங்குவாள்
கோலத்தான் மௌலிக் குலோத்துங்க சோழற்கு
ஞாலத்தா ரெல்லார்க்கு நாயகற்குச்—சீலத்தாற்
காசுங் கலாபமு மேகலையுங் காஞ்சியுந்
தூசுந் துகிலுந் தொடியுநான்—கூசேன்
வெளியே தருவேன் விரையாருந் தொங்கல்
கிளியே தருவே(ன்)கிளியே—யளியைநீ
தாது கடிகமழ் தாதகித் தாமத்தின்
போது கொழுதப் புறப்பட்டா—யோதிமமே
யெங்கள் பெருமானை யிங்கே தரவாநீ
யுங்கள் பெருமா னுழைச்செல்லாய்—பைங்கழற்காற்
சேயை நினைந்தே கிடமுடைய சேக்கையான்
சாயன் மயிலே தலைப்பட்டாய்—பாயுங்
கடமானே போலவற்கு நீநின்னைக் காட்டின்
மடமானே தானே வருங்காண்—கடிதென்று
கொள்ளைகொள் காமன் கொடும்பகைக்குக் கூசித்தன்
பிள்ளைக ளோடிருந்து பேசுவா—ளுள்ள
(வ)லகில் குலநீல ரத்ன பரணம்
விலகி வெயிலை விலக்க—வுலகிற்

பெரிய பெருமாள் பெரும்பவனி வீதி
விரிய வெதிரே ெ...ழுந்தாள்—வரிவளை

யாயத்தா ரென்னி லளியத்தா ரெல்லோரு
நேயத்தா ரல்லரே நிற்பரே—தேயத்தார்

மன்னனை யஞ்சாதே வாரணத்தை யஞ்சாதே
மின்னனை யாளை (யு)மீதாரா—முன்னர்

[1]கடமாகுந் தெய்வக் களிறு விரும்பு
மிடமாகு மியாமென்பார் போலப்—படமா

யிரைப்பச் சுருளோ டிருளளக பார
நிரைப்ப வனமாகி நிற்பார்—விரைப்பூண்

முலையாய் வளரு முரட்குவடு கொண்டு
மலையா நெருங்க வருவார்—தொலையாத

பாய வருமுத்த மாலை பலதூக்கித்
தூய வருவியாத் தோன்றுவார்—சாயற்

கொடியா யடிசுற்றிக் கொள்வார் புரக்கும்
பிடியாய் நறுந்துகள் பெய்வார்—விடுதுமோ

யாழான் மிடற்றால் விளக்குதும் யாமென்பார்
[2] தோளால் வளைத்தெங்குஞ் சூழ்போவா—ராழிக்கைத்

தியாகனை மானதனைத் திக்கானை யெட்டுக்கும்
பாகனை........சென்று பற்றுவார்—தோகைபை

நற்றுகில் கொண்ட நறுந்துழாய் மார்பாநின்
பொற்றுகி றந்தருளிப் போகென்பார்—மற்றிவ

டன்சங்கங் கொண்ட தடந்தா மரைக்கண்ணா
நின்சங்கந் தந்தருள நேரென்பார்—முன்கொள்ளு

மின்றுயிற் கெல்லா மெறிபாற் கடற்கொள்ளு
நின்றுயி றருந்தருளாய் நீயென்பா—ரென்றென்று

மானு மயிலு மனையார் வளைத்திளைப்பத்
தானுங் களிறுந் தடையுண்ட—கோனுந்

(பி - ம்.)—1. தடமாகுந். 2. தோளாய்.

தடுத்த கொடிக்குத் தசமடங்கும் வேட்கை
யடுத்த திருநோக்கருளிக்—கொடுத்த
திருநகை மூர றிகழ்ந்தா னணங்கு
மொருநகை கூர்ந்தொருகா லுய்ந்தாள்—பெருநகை
யெய்தி யனங்க னெழப்போனான் மாதரு
முய்தி சிறந்தா ளுழைச்சென்றார்—நொய்திற்
றொடுக்கும் புறஞ்சொற் றொடாமே முலைமீ
தடுக்கும் பசலை யடாமே—யுடுக்குந் (சரு0)
துகிலுஞ் சரியாமே சுற்றத்தா ரெல்லாம்
புகலும் புகாமே....................—யகினறும்
பள்ளியிற் செல்லாள் பருவ முருகன்றோய்
வள்ளியிற் சாயல் வழங்கினாள்—

(மடந்தை.)

ஒள்ளிய
பின்ன ரொருத்தி பெருமைக் கரமகளிர்
முன்ன ருரைக்கு முதன்மையாள்—சென்னியில்
வண்ட லிடுநாவி வார்குழற்கு மாறுடைந்து
கொண்டல் சொரிமுத்தின் கொண்டையும்—பண்டுவந்
தேற்றும் பணைபணைக்கு மென்றோ ளிரண்டுக்குந்
தோற்றுச் சொரிமுத்தின் சூழ்கொடியு—மாற்றுக் (சசு0)
கலம்புரி செல்வக் கழுத்திற்குத் தோற்ற
வலம்புரி முத்து வடமும்—பொலம்பூ
ணெதிர்க்கு முலைக்கிரிந்த யானைக்[1]கோ டிட்ட
கதிர்க்கு நகைமுத்தின் கச்சு—மதிர்க்கு
மடல்விடு மல்குற் பரவைக் கழிந்து
கடல்விடு முத்தின் கலையு—முடலின்மே
லேந்து மிளைய விளநிலா விட்டெறிப்பப்
போந்து மறுகு புகுந்தொழிந்தாள்—வேந்தனுஞ்

(பி - ம்.)—1. கோடீட்டங்.

சட்கொடி மாணிக்க மொன்றுஞ் சமந்தகமு
முட்கொடு கேயூரத் தூடெறிப்பக்—கொட்குங்
கடல்சேர்ப்ப வந்த கவுத்துவ மொன்று
மடல்சேர்க்கு மார்பிற் கமைய—வுடலி
லனந்தன் பணமௌலி யாயிரமு மொற்றை
நனந்தலை மௌலிக்கு நாண—வினங்கொண்
முறுகு கதிரு முகந்திரிய வேற்று
மறுகு திருமலர வந்தான்—குறுகு
நடையாய வெள்ளமு நாணிரம்பு திங்கட்
குடையாய வெள்ளமுங் கூடி—யடைய
மதியுதய மென்று வணங்க வனச
பதியுதய மென்று பணியத்—துதியி
லொருவரு மொவ்வா வுதயமீக் கூறு
மிருவரு மெய்திய வெல்லைத்—தெருவி
னெருங்கு மகளிர் நிறந்திறக்க வெய்து
மருங்கு வருகின்ற மாரன்—றிருந்திழை
பாய பகட்டல்குல் பாரத் தனபரப்பிற்
போய மருங்கு புறநோக்காச்—சாயா
முலையின் கதிப்பு முருகெழுதோ ணிற்கு
நிலையின் பணைப்பு நினையாக்—கொலையி
னுடைக்கு முலகடைய வூடாடு கண்ணின்
கடைக்கு முடிவின்மை காணக்—கிடைக்கும்
பருவக் கொடிவதன பங்கே ருகத்திற்
புருவக் கொடிமுடியப் போதா—வுருவக்
களிக்கும் புடவி சதகோடி கற்ப
மளிக்கும் பெருமானை யனுசான்—களிக்குங்
கடுங்காற் கொடித்தேரை முட்டக் கடாவி
நெடுங்காற் சிலையைக் குனித்தா—னடுங்க
முகுந்த னிவனென்று முன்பெய்த வேள்பிற்
புகுந்த திதுவென்று போனான்—றிகந்த

முழுதா ளபயனவன் மூரா னகையுந்
தொழுதா ளொருதானே தோற்று—ளழுதா
டிரிந்தாள் கலைநிலையுஞ் செம்பொற் றுகிலுஞ்
சரிந்தா டுணைவியர்மேற் சாய்ந்தாள்—பரிந்தார்
1 முடைக்கை யெதிர்க்குரவை கோத்தார் முதலயாழ்
நடைக்கை கொடுக்கை நகையோ—விடைப்பே
ரினந்தழுவிப் பின்னையைக் கொள்வா யிவளைத்
தனந்தழுவிக் கொள்கை தவமோ—வனந்தங்
கருந்துகில் கோவியரைக் கொள்வாய் கமலை
தருந்துகி னோக்கத் தகாதோ—பொருந்து
துளவ முகிற்கிது வந்தது தூய
வளவர் திருக்குலத்து வாதோ—வளவிறந்த
வன்க ணிவளளவுங் கண்டே மடவரல்
புன்க ணடியேம் பொறோமென்று—முன்கண்
டிவையிவை சொல்லிப்போ யின்னமளி யேற்றக்
கவிரிதழ் பின்னுங் கலங்கித்—துவரில்
வியக்குந் துகிரினை மேம்பட் டுலகை
மயக்குந் திருவாய் மலர்க்கு—நயக்கும்
பொருப்பமர்மெய்த் தோளிற் புதுமைக்கும் போந்து
திருப்புருவஞ் செய்த செயற்கும்—பரப்படையச்
செங்கே ழெறித்து மயக்குந் திருநயன
பங்கே ருகஞ்சூழ் படுகொலைக்கு—மங்கே
தரிக்குமே தென்றலுஞ் சந்த்ரோ தயமும்
பரிக்குமே கண்கள் படுமே—புரிக்குழலார்
பாலிருத்தி மம்மர் படப்படப் பையப்போய்
மாலிருத்தி யுள்ள மயங்கினாள்—

(அரிவை.)

மேலொருத்தி

தாளை யரவிந்தச் சாதி தலைவணங்கத்
தோளை யுரகர் தொழவிருப்பா—ளாளை

(பி - ம்.) —1. முடக்கை.

வளவர் பெருமாள் வரும்பவனி யென்னுங்
கிளவி விறலியர்வாய்க் கேட்டா—ளளவுடைய

தோரிரா வன்றம்ம விவ்விரா வோதிமத்தோன்
பேரிரா வென்று பிணங்கினாள்—பேரிரா (ருங௦)

வென்று விடியுங்கொ லென்றாள் விடியளவு
நின்று சுடுங்கொ னிலவென்றா—ணன்று

யடுத்தடுத் தேந்திய திவ்விய பரண
மெடுத்தெடுத் தொப்பித் தெழுந்து—சுடர்க்கதிரோன்

மாலைப் பகைவியைப் போக்கி வருகின்ற
காலைத் துணைவியைக் கண்டெழுந்தாள்—காலையோன்

சேமித்த பூங்கோயி லெல்லாந் திருவென்று
காமத் திதழின் கடைதிறப்ப—நேமி

மணக்கத் துணையன்றில் வாயலகு வாங்கித்
தணக்கக் கடிகாவுட் சார்ந்தாள்—கணக்கதிர் (ருச௦)

வந்து பொருததொரு மாணிக்கச் செய்குன்றி
லிந்து சிலாதலத்தி லேறினாள்—குந்தங்

கடப்பன கன்னிமா னோக்கியு மன்ன
நடப்பன பார்த்து நயந்துங்—துடக்கிக்

களிக்கு மயிற்குலங் கூத்தாடக் கண்டுங்
கிளிக்குலம் பாட்டெடுப்பக் கேட்டும்—பளிக்குருவப்

பாவை மணக்கோலம் பார்த்தும் பலநிறப்
பூவை நகரப் புறஞ்சாய்த்துங்—கோவை

யளிக்கள வாட்ட வயர்ந்துங் கபோத
விளிக்களி கூர்ந்து வியந்துங்—களித்தும் (ருரு௦)

பழிச்சி யணங்கிப் பெருமாள் பவனி
யெழுச்சி முரசோர்ந் திருந்தாள்—கழற்செழியர்

தென்சங்கங் கொண்டான் றிருச்சங்கஞ் செய்குன்றிற்
றன்சங்க மாகி யெதிர்தழங்க—மின்சங்கம்

போல வெழுந்து விழுந்து புடையாயங்
கோல மறுகு குறுகுவாண்—ஞால

மெடுக்கும் பணிமன் னின்மென் றிறைஞ்சிக்
கொடுக்குஞ் சுடிகைக் குதம்பை—கடுக்கு
மயில்வேண்டு சாயல் வதனும் புயத்து
வெயில்வேண்ட வேண்ட விளைப்பப்—பயில்கதிரா
வெல்லாத் தொடிச்சுடிகை மேகா ளகவிருண்மே
லெல்லாப் பருதியும் போலெறிப்பக்—கொல்குயத்து
வீழ்சோதி சூழ்கச்சை மேரு கிரிச்சிகரஞ்
சூழ்சோதிச் சக்ரந் தொலைவிப்பக்—கேழொளிய
பைம்பொற் கடிதடஞ்சூழ் மேகபா ரஞ்சூழ்ந்த
செம்பொற் றிகிரி யெனத்திகழ—வம்பொற்
புறவுஞ் சகோரமும் பூவையு மானும்
பிறவு மினமென்று பெட்ப—வுறவா
யடர்ந்த பொலங்கே ழடிச்சிலம்புக் கன்னந்
தொடர்ந்து மறுமாற்றஞ் சொல்ல—நடந்துபோய்
வானவற்குப் புக்கதுறை வல்லவற்கு வில்லவற்கு
மீனவற்குச் சென்று வெளிப்பட்டா—டானே
யலரு முகமுங் கவிகையு மாகி
மலரு முகுளமு மானப்—பலர்காணத்
தேனு மமுதுங் கலந்தனைய தீங்கிளவி
மானு மடைய மனங்கொடுத்தாள்—கோனுந்
தடாதே தடுத்தாளைத் தண்கடைக்கண் சாத்தி
விடாதே களிறகல விட்டான்—படாமுலை
சோர்கின்ற சூழ்தொடிகைப் பைம்பொற் சுடர்வலைய
நேர்கின்ற பதும நிதிநிகர்த்தா—டேரி
னரிவை துகினெகி ழல்கு லரவி
[1] னுரிவை விடப்பட மொத்தாள்—சொரிதளிர்
மாங்கொம்ப ரென்ன வருவாள் சுரமரப்
பூங்கொம்ப ரென்னப் புறங்கொடுத்தாள்—பாங்கியு

(பி - ம்.)—1. உரிகை.

மொற்றை யுடைவா ளொருபுடையாள் கொற்றவையேன்
மற்றை யருகிவளை வைத்திலன்—பெற்றுடைய

வாரத் தரணியாள் வாழ்தோ ளெதிர்மற்றை
யாரத் திருத்தோ ளளித்திலனே—நேரொத்த

பூந்தா மரையா ளெதிரேயிப் பொற்கொடிக்கு
மேந்தார மார்ப மிசைத்திலனே—வேந்தர்கோ (நுகூ0)

னன்னங்கா ளீர்சென் றரற்றீர் கபோதங்கா
ளின்ன மபயம்புக் கெய்திடீர்—நன்னுதற்

பாவைகாள் கொல்யானைப் பாவடிக் கீழ்ப்பணியீர்
பூவைகாள் செங்கோன்மை போற்றிசெயீர்—வாவிப்போய்ப்

பேதை மடமான் பிணைகாள் வளைத்துளையீர்
கோதை மதுகரங்காள் கூப்பிடீர்—யாதெல்லை

யென்னு மிதற்கென் றியம்பி யிலங்கிழை
தன்னே வவற்றெதிர் சாற்றினாள்—

(தெரிவை.)

பின்னர்ப்

பொருவி லொருத்தி புறங்காக்கு மாத
ரிருவி லிடைநின் றிறைஞ்சித்—திருவுலாப் (கூ00)

போதும் பெருமாள் புகுது மளவுமிங்
கியாதும் பயிலா திருத்துமோ—சூதாடேம்

பந்தா டுதுநாம் பசும்பொற் குழைச்சென்று
வந்தாடுங் கண்ணாய் வருகென்று—சந்தாடுங்

கொம்மை வரிமுலையுந் தோளுங் குறியாதே
யம்மென் மருங்குபார்த் தஞ்சாதே—தம்முடனே

கொண்டா ரருகிருந்த பாணருங் கோடியருங்
கண்டா ரெவருங் கடுகினார்—மண்டி

யெடுத்தா ரெடுத்தன யாவு மெவருங்
கொடுத்தா ரொருதானே கொண்டா—ளடுத்தடுத்து (கூக0)

முன்ன மெறிபந்தின் மும்மடங்கு நான்மடங்
கின்ன மெறிய வருகென்று—என்ன

மடியு மிருகையு [1]மம்புய மென்று
படியு மொழுக்கிற் பயில—முடியுந்

தொடையுடை போய சுழல்கூந்தற் பந்தற்
கிடையிடை நின்றதா லேய்ப்ப—வடைய

விழுந்தன பார்கடவா வாறுபோன் மேற்போ
யெழுந்தன கைகடவா வென்னச்—செழுந்தளிரா

லேற்றுதி விண்கொள்ளா வம்மனை யெம்மனை
யாற்றுகை [2]யீதின் றரிதென்னப்—போற்றிய

கையோ பதயுகமோ கண்ணோ கடுகியவை
யையோ வறித லரிதென்னப்—பொய்யோ

திலக நுதலி திருவேயென் றன்னை
யுலகு வியப்பதென் றேத—வலகிறந்த

பந்தாட் டயர்ந்து பணைமுலையார் பாராட்ட
வந்தாட்டு நீராட்டு மண்டபத்து—விந்தை

பெருமா னனபாயன் பேரிய மூன்றுந்
தருமார வாரந் தழங்க—வொருமாத

ரேந்துந் துகிலொன் றுடுத்தாளோ வில்லையோ
போந்து மறுகு புகுந்தொழிந்தாண்—மாந்துளிருந்

தாதுந் தமனிய மாலையுந் தண்கழுநீர்ப்
போதும் பிறவும் புறம்புதையா—வோதிக்குச்

சென்னி யமுனைத் தரங்கமுந் தீம்புனற்
பொன்னி யறலும் புறங்கொடுப்பப்—பின்ன

ரொழுங்காய சேயரிக்கண் [3]ணூடோட்டு மையா
னழுங்காது கைபோய் மதர்ப்பச்—செழுங்கழுத்தே

யொன்று புனைந்தொரு சங்கொரு மாணிக்க
மின்று பயந்த தெனவிளங்க—நின்றிலங்கு

(பி-ம்.)—1. அம்புயமு மென்று. 2. ஈதென் றரிது. 3. ஊடோட்டு.

முச்சங் கலனணியாத் தோளிணைக் கோரிரண்டு
பச்சைப் புதுக்காம்பு பாடழிய—நிச்ச

மசும்பு பொலன்கச்சி னற்றத்தே கொங்கை
விசும்பு குடிவாங்க வீங்கப்—பசுஞ்சுடர்க்

கோல வயிறுதர பந்தனக் கோணீங்கி
யாலம் வளர்தளிரி ணைதாக—[1]மேலே

ரிழியு மொருசரம ரேகையு முந்திச்
சுழியு மெளிவந்து தோன்றக்—கெழீஇ

யிசையுங் கலாபாரம் யாப்புறு வல்கு
லிசையின் புடைய(டைய)ச் செல்ல—மிசையே

பொறைபுரி கிம்புரி பூட்டாத் தொடைதூ
சுறையின் மாகத மொப்ப—வறையுஞ்

சிலம்பு சுமவாத செந்தா மரைபோ
யலம்பு குரலஞ்சா தோடக்—கலம்பல

தாங்கி யுலகந் தரிக்கத் தரியென்று
பாங்கிய ரெம்மருங்கும் பாராட்டப்—பூங்கே

ழுருவி லொளிபோ யுலகடையக் கோப்பத்
தெருவி லெதிர்கொண்டு சென்றாள்—பெருமானுங்

கொற்றக் குடைக்கீழ் வடமேருக் குன்றனைய
வெற்றிக் களியானை மேல்வந்தான்—பற்றி

யிருவருந் தம்மி லெதிரெதிர் நோக்கி
யொருவ ரெனவேட்கை யொத்தார்—குருசின்

மறந்த கடல்கடைய வந்தாண் மே லன்பு
சிறந்த திருவுள்ளஞ் செய்து—சிறந்தவ

ளாக நகத்திருந்தா ளாகத் திருவுள்ளக்
கோகன கத்துக் கொடு [2]சென்றான்—ஞகிள

நவ்வி மடநோக்கான் ஞாலத்தை யோரடியால்
வவ்வி யொருதோளில் வைத்தமால்—செவ்வி

(பி-ம்.)—1. மேலோர். 2. சென்றான்—ஞகிள.

முருகு கமழ்ந்து முகந்து முகந்து
பருகு மடமகளைப் பாரா—வருகு
மடுத்து முயங்கி மயங்கிய தாய
ரெடுத்து மலரணைமே லிட்டா—ரடுத்தொருவர்
கொய்யாத கற்பகப் பூமாலை கொண்டைக்கு
நெய்யாத பொற்றுகி னீவிக்குஞ்—செய்யாத
[1]கொங்கத் துணைக்கோவை யல்குற்குஞ் சூழ்கனகத்
துங்கப் (பணி)வலையந் தோளுக்கும்—கொங்கைக்குப்
பொன்னிப் புகாரிற் பொலன்குழம்பும் வல்லத்திற்
கன்னிற் புனைதோடு காதிற்குஞ்—சென்னி
யளிப்பக் கொணர்ந்தனம்யா மன்னமே யென்று
தெளிப்பச் சிறிதே தெளிந்தாள்—

(பேரிளம்பெண்.)

கலிக்கிளவி

மற்றொருத்தி செந்தா மரைமலர்மே லென்னுடனே
செற்றொருத்தி வாழு மெனச்செறுவாள்—சுற்றவுந்
தெட்டுத் தசும்பசும்பு தெங்கி னிளம்பாளை
மட்டுத் தமனிய வள்ளத்து—விட்டு
மறித்து வயிர மடலொன்றில் வாங்கித்
தெறித்து ஞிமிறோச்சிச் செவ்வி—குறித்துக்கொண்
டேந்தி முகம னியம்பி யிருந்தொரு
காந்து மதிவதனி கைக்கொடுப்ப—மாந்திக்
குதலை குழறிக் குயிற்குங் கிளிக்கும்
விதலை யுலகில் விளைத்து—நுதலை
வியரா லலங்கரியா வேந்தன் கொடுமை
யயரா வெளியிடா வஞ்சாப்—பெயரா
வருகிருந்த பாணனை நோக்க வவனுங்
குருசில் வருதமரங் கூறப்—பரிபுரக்

(பி - ம்.)—1. கொங்கைத்.

காலு நிதம்பமுங் கையுந் திருக்கழுத்துங்
[1]கோலுந் தரணிக் குலமெல்லா—மேலோன்

குரகத மேழு முழுகிக் குளிப்ப
மரகத சோதி வயங்கப்—புருவ

விடைபோய்க் குமிழின் மலர்வந் திறைஞ்சப்
புடைபோய்க் கருவிளை பூப்ப—விடையாக

வேக முருக்கு மலர விளம்பாளைப்
பூக மிடறு [2]வரப்பொதிய—மோகப் (எ00)

பெரும்பெருந் தெங்கிளநீர் தாழ்ந்து பிறங்கப்
பரும்பெருங் காம்பு பணைப்ப—விரும்பி

நறுந்துணர் மாந்தளிர் வார்ந்து நளியக்
குறுந்தொடி காந்தள் குலைப்பச்—செறிந்து

கலித்துத் தணியிள வஞ்சி தளரக்
கலித்துக் கதலி கவின—வொலித்தே

யளிக்குஞ் சகோரமு மன்னமு மன்னுங்
களிக்கு மயூர கணமும்—விளிக்கும்

புறவுந் துடர்ந்துடன் போத வவையே
பிறவு மினமென்று பெட்பச்—சுறவுயர்த்தோன் (எக0)

காலை புகுந்து கரப்ப தொருபசும்பொற்
சோலை யெனவந்து தோன்றினாண்—ஞாலத்தோர்

தெய்வப் பெருமாளுஞ் சேவடி முன்குவித்துக்
கைவைத்து நின்றவளைக் கண்ணுற்றான்—றையல்

வெருவமுன் சூர்தடிந்த வேளை விபக்கும்
பருவமு மார்பிற் பணைப்பும்—புருவமுஞ்

செந்தா மரைக்கண்ணு மாமேரு வைச்சிறிய
பந்தாகக் கொள்ளும் பணைத்தோளு—முந்தியு

முய்ய விடுகாது மூக்கு முடிபதியை
நைய வெறிக்கு நகைநிலவுஞ்—செய்ய (எஉ0)

(பி-ம்.)—1. கோலங். 2. வரப் போதிய.

பவளத் துவர்வாயும் பாதாம் புயமுங்
கவளக் களிற்றெளிதிற் கண்டு—குவளைக்

கருநெடுங் கண்களிப்ப வுள்ளங் களிப்பப்
பருநெடுந் தோளும் பணைப்ப—வொருநின்

சிலம்புக ளோரேழுஞ் சென்றடைந்து நோலே
னலம்பு கடலேழு மாடேன்—வலய புவன

மேழுஞ் செலவயரே னெங்கோவே நின்குடைக்கீழ்
வாழுந் [1]திரு (வென)க்கு வாய்க்குமோ—தாழு

முடைதவழுந் தோளு முலையுந் தழுவ
விடைதழுவு தாமரைக்கண் வீரா—கடகரியைக்

கைதழுவிக் கோரத்தைக் காறழுவி நின்புலியை
மெய்தழுவிக் கொள்ள விடுவையோ—மொய்திரைசூழ்

ஞால மடக்கவு நாயகி நின்புகல்விற்
கால வுததி கலக்கவுஞ்—சால

வருந்தா வகைவருந்த வாழி பெயரும்
பெருந்தேவி யார்க்குப் பெறலாந்—திருந்திய

குந்த மொசித்ததுவுங் கொற்றத் திருத்தோளால்
வந்த விடையேழு மாய்த்ததுவு—முந்துறக்

கோவிய மாதர்க்கே சென்று குறைகிடந்த
வாவியெ மாதர்க்கு வஞ்சமே—யோவிய

சோரன் சிலையினுந் திண்ணிதே சென்றேசிய
மாரன் சிலையை வணக்காயாற்—சேரன்றன்

முன்றிற் பனைதடிந்தாய் முட்டா திராவொருக்கு
மன்றிற் பனைகடிய லாகாதோ—கன்றி

மலைக்குஞ் செழியர் பலகைக்கடலை மாய்த்தா
யலைக்குங் கடன்மாய்த் தருளாய்—மலைத்தலைவர்

தங்கள் புகழ்நிலவு தீர்த்தா யரிமார்பிற்
றிங்களின் றண்ணிலவு தீராயாற்—பொங்குதிரைத்

(பி - ம்.)—1. திருவி...க்கு.

தெம்முனை யாழ்கடிந்தா யெங்கள் செவிகவரு
மெம்முனை யாழ்கடிந்தா லென்செய்யுஞ்—செம்மணிச் (எருO)
செஞ்சோதிச் சிங்களத்தை மாற்றினாய் செக்கரிளம்
வெஞ்சோதி கண்டால் விலக்காயால்—வெஞ்சமத்துச்
சாதி விடைமுன்பு காடவன் முன்கடிந்தாய்
வீதி விடைகடிய வேண்டாவோ—யாதுகொல்
வன்பல் லவன்பகைத்த வாட்டானை யின்றிந்த
மென்பல் லவந்துகையு மேம்பாடென்—றன்பூங்
கருப்புச் சிலைகொண்டு மோதுங் கழுத்திற்
சுருப்புநாண் புக்கழுந்தித் தூர்க்கு—நெருப்புமி
ழுப்புக் கழுவேற்று மாறுப் படுங்கோப
வெப்புப் படுத்தெங்கண் மெய்யுருக்குந்—துப்பா (எசுO)
துடல்பிள வேற வொருதேரிட் டூரு
மடலமகா போச னமர்க்கும்—[1](கடற்) கோல
வண்ணு வளர்ந்த மகரா லயமறந்த
கண்ணு வனங்கன்போர் காவாயேன்—மண்ணுலகி
லெப்படி யாவா ரிளம்பிடியா ரென்றென்று
மைப்படியுங் கண்ணுள் வருந்தின—ளிப்படியே
தையலார் பொற்றேருகைச் சாயலார் கையகலா
மையலார் பேரலாராய் மன்றேற—வையம்
பெருகுடையா னீரேழும் பாரேழும் பேணு
மொருகுடையான் போந்தா னுலா. (எஎO)

[2]என்றினி மீள்வ தரிதி னிரணியனை
யன்றிரு கூறு யடர்த்தருளிக்—கன்றுடனே
யாவின்பின் போன வனக னனபாயன்
மாவின்பின் போன மனம்.

குலோத்துங்கசோழனுலா முற்றிற்று.

(பி - ம்.)—1. மைக்கோல. 2. இன்றின மீள்வ தரிதின்.

இராசராசசோழனுலா.

புயல்வண்ணன் பொற்பதுமப் போதிற் புவனச்
செயல்வண்ணங் காட்டிய சேயோ—னுயிரனைத்துங்
காட்டும் பதின்மரினுங் காசிப னேழ்புரவி
பூட்டுந் தனியாழிப் பொற்றேரோ—னோட்டி
யறவாழி மைந்தன்மே லூர்ந்தோ னவனி
புறவாழி முட்டப் புரந்தோன்—மறையோர்க்குப்
பூவிற் கிழத்தியையும் பூமிக் கிழத்தியையு
நாவிற் பழுதஞ்சி நல்கினோன்—வாவியிற்
[1]புக்க துறையிற் பகைப்புலியும் புல்வாயு
மொக்க வொருகாலத் தூட்டினோன்—புக்கான்
மருணிறை யென்று சரணடைந்த வஞ்சப்
புறவிறை புக்க புகழோ—னறுநீர்த்
தரங்கக் கடலேழுந் தன்பெயரே யாகத்
துரங்கப் பசுநாடித் தொட்டோன்—வரங்கொள்
சுரநதி தன்[2]பெய ராகச் சுருதி
[3]வரநதி சாபத்தை மாய்த்தோன்—றரணிபர்
மல்லன் மரபை ரகுவின் மரபென்று
சொல்ல வுலகளித்த தொல்லையோன்—செல்லலால்
வந்திரந்த வானவர்க்குத் தானவர் போர்மாய
விந்திரனை யேறாக்கி யேறினோன்—முந்து
மொருதேரா லிரண்டு தேரோட்டி யும்பர்
வருதேரால் வான்பகையை மாய்த்தோன்—[4]பொருது

(பி - ம்.)—1. புக்குத்துறை. 2. பெயரேயாகச். 3. வரநதி தன் பெயரை மாய்த். 4. பொருந்தச்.

சிலையால் வழிபடு தெண்டிரையைப் பண்டு
மலையால் வழிபட வைத்தோ—னிலையாமே

வாங்கு திருக்கொற்ற வாளொன்றின் வாய்வாய்ப்பத்
தூங்கு புரிசை துணித்தகோன்—வீங்கு

குட[1]கடற்குச் சார்பு குணகடலே யாக்கும்
வடகடற்குந் தென்கடற்கு மன்னன்—முடுகிக்

கரையெறிந்த [2]பொன்னி கடலேழுங் கோப்ப
வரையெறிந்த மன்னர்க்கு மன்னன்—[3]றரையின்

பெருமகளைத் தீவேட்ட பின்னருஞ் சேடன்
றிருமகளைக் கல்யாணஞ் செய்தோன்—[4]பொருநிருபர்

கன்மலை மார்புங் கடவுள் வடமேருப்
[5]பொன்மலை மார்பும் புலிபொறித்தோன்—சொன்மலை

நல்லவன் பொய்கை களவழி நாற்பதுக்கு
வில்லவன் காற்றளையை விட்டகோன்—புல்லார்

[6]தொழும்புடைய வாகத்துத் தொண்ணூறு மாறுந்
தழும்புடைய சண்டப்ர சண்ட—[7]னெழும்பக

லீழ மெழுநூற்றுக் காதமுஞ் சென்றெறிந்து
வேழந் திறைகொண்டு மீண்டகோன்—சூழி

மதகயத்தா லீரொன் பதுசுரமு மட்டித்
[8]துதகையைத்தீ யுய்த்த வுரவோன்—முதுவரவிற்

கங்கையு நன்மதையுங் கௌதமியுங் காவிரியு
மங்கையுட னாடு மரபினோன்—பொங்கி

யலைவீசு வேலை யனைத்தினுந் தெம்மீன்
வலைவீசி வாரிய மன்னன்—கொலையானை

பப்பத் தொருபசிப்பேய் பற்ற வொருபரணி
கொப்பத் தொருகளிற்றாற் கொண்டகோ—[9]னெப்பொருவர்

(பி - ம்.)—1. கடற்குஞ்சார்பு. 2. பொன்னிக்கடல். 3. திரையின். 4. பாநிருபர், கன்மாலை. 5. பொன்மாலை......சொன்மாலை. 6. தொழும்புடை யாகத். 7. எழுபகலில். 8. உதகையைத் தீர்த்த. 9. வெப்பொருவர்.

பாட வரிய [1]பரணி பகட்டணிவீழ்
கூடலார் சங்கமத்துக் கொண்டகோ—னும் (ருO)

கலகமுஞ் சுங்கமுங் காய்கலியு மாற்றி
யுலகைமுன் காத்த வுரவோன்—பலவுந்

தரணி யொருகவிகை தங்கக் கலிங்கப்
பரணி புனைந்த பரிதி—முரணி

புரந்தர னேமி பொருவ வகில
துரந்தரன் விக்கிரம சோழன்—பரந்தபனென்

றூய பெயர்கொண் டகிலாண்ட மும்புரந்து
சேய பெரிய திருக்குலத்து—நாயகன்

சிற்றம் பலமுந் திருப்பெரும்பே ரம்பலமு
மற்றும் பலபல மண்டபமுஞ்—சுற்றிய (சுO)

மாளிகையும் பீடிகையு மாடமுங் கோபுரமுஞ்
சூளிகையு [2]மத்தெருவுந் தோரணமு—மாளுடையான்

கோயிற் றிருக்காமக் கோட்டமு மக்கோயில்
வாயிற் றிருச்சுற்று மாளிகையுந்—தூயசெம்

பொன்னிற் குயிற்றிப் புறம்பிற் குறம்பணைத்து
[3]முன்னர்க் கடலகழின் மூழ்குவித்த—சென்னி

திருமகன் சீராச ராசன் கதிரோன்
மருமக னாகி மறித்துந்—திருநெடுமா

லாதிப் பிறவி யனைத்தினு மும்பர்க்குப்
பாதிப் பகைதடிந்து பாதிக்கு—மேதினியிற் (எO)

செந்தா மரையா டிருமார்பில் வீற்றிருக்க
வந்தான் மனுவங்கிச மாமேரு—முந்தி

யுடுத்த திகிரி பதினு லுலகு
மடுத்த வரராச ராச—[4]னடற்றிகிரிக்

(பி - ம்.)—1. பரணிப் பகட்டினில்வீழ், கூடலர். 2. எத்தெருவுந். 3. முன்னிற் கடல்களின். 4. தடத்திகிரிக்.

கண்ணன் கனகள்வன் கண்டன் [1] கதிரோனுந்
தண்ணென் கவிகைச் சனநாத—னெண்ணுந்

தவன குலதிலகன் றன்பெருந் தேவி
புவன முழுதுடைய பூவை—யவனியி

லெண்பெரு மாதிரத்து மேறு முடனெண்ணப்
பெண்பெருமா ளந்தப் புரப்பெருமாண்—மண்பரவ

வோகை விளக்கு முபய குலரத்னத்
தோகை யுடனே துயிலெழுந்—தாகிய

மூர்த்தத் தனந்த முரசார்ப்பக் [2]காவேரித்
தீர்த்தத் தபிடேகஞ் செய்தருளிப்—போர்த்திகிரி

மேலைக் [3]குரவர்க்கும் விண்ணவர்க்கும் வேதியர்க்குங்
காலைக் கடவ கடன்கழித்து—மூலப்

பெரும்பே ரணி[4]தம் பிதாமகன் காலை
வரும்பே ரணியென்ன வாய்ப்ப—நிரம்பப்

பவளச் சடையோன் பணித்த படியே
தவளத்ரி புண்டரஞ் சாத்திக்—குவளைப்பூங்

கார்க்கோல மாடியிற் காண்பான் மகன்காமன்
போர்க்கோலங் காண்பானே போற்கண்டு—பார்த்திபர்தந்

தொல்லைத் திருமரபுக் கெல்லாந் தொழுகுலமாந்
தில்லைத் [5]திருநடனஞ் சிந்தித்து—வல்லவர்

சூழச் சுருதி யனைத்துந் தொடுத்தெடுப்ப
வேழப் [6]பெருமானை மேல்கொண்டு—வாழி

யரச [7]வலம்புரி யார்ப்ப வதன்பின்
முரசொரு மூன்று முழங்கத்—திரையிற்

சுடர்பொற் கவரி யெழுப்பொங்கத் தொங்கற்
கடவுட் கவிகை கவிப்பப்—புடவியின்

(பி - ம்.)—1. கதிரோன்மன். 2. காவிரியிற், றீர்த்த மபிடேகஞ். 3. குரிசிற்கும். 4. தன் பிதாமகன். 5. திருநடமுஞ். 6. பெருமாளை. 7. வலம்புரி யூத.

மீட்டுங் குறையவுணர் போர்கருதி விண்ணவர்கோன்
நீட்டுங் கொடிப்புலியாய்ச் சேவிப்ப—வாட்டானைத்
தென்னருஞ் சேரருஞ் சிங்களருங் கொங்கணத்து
[1]மன்னரு மாளுவரு மாகதரும்—பின்னருங்
காந்தாரர் காலிங்கர் [2]கௌசல ருள்ளிட்ட
பூந்தார் நரபாலர் முன்போத—வேந்தர்
[3]பொருவாத பூபால கோபால னென்னுந்
திருநாம நின்று சிறக்க—வருநாளிற்
றென்மாடக் கூடற் [4]சிறைமீட்ட கார்புகார்ப்
பொன்மாட வீதிப் [5]பொடியடக்கத்—தன்மீது
கன்மாரி பெய்யு மழையாற் [6]கடவுளர்கோன்
பொன்மாரி பெய்யும் [7]புயலேவப்—பின்வருங்
காமாரி சேயென்றே காக்கு மெழுவரினும்
பூமாரி கௌமாரி முன்பொழிய—யாமந்தீர்
காலை வெயிலொதுங்கக் கார்களாற் கார்களு
மாலை வெயிலான் மறித்தொதுங்கக்—கோலப்
பெருங்குற் றுடைவாளிற் பேரொளி மேரு
மருங்கிற் பெரும்புலி மான—நெருங்கிய
கோளி னொழுங்கு [8]மழுங்கக் குலரத்ன
மோளி மகர வொளியெறிப்பத்—தோளி
[9]லிரும்பொறை தீரு மிருபாப் பரசு
மருந்தொடி யாயகொ லென்ன—வரரத்னந்
தாமே குயின்று தடங்கோளு நாளுஞ்சூழ்
மாமேரு வென்ன முடிவயங்கப்—பூமிப்
புடைநிலவுந் தங்கள் புகழ்நிலவின் [10]மேலே
குடைநிலவுஞ் சக்ரகிரி கோல—வுடையதன்

(பி - ம்.)—1. மன்னரு மாகதரு மாளுவரும். 2. கோசலரு முள்ளிட்ட. 3. பொருதாத பூபாலர். 4. சிறைவிட்ட. 5. பொடியடங்கத். 6. கடவுட்கோன். 7. புயலேய்ப்பப்-பின்னருங். 8. மலர்ந்த குலரத்னத், தோளி. 9. இருபொறை தீரு மிருபாற் பரசு, மிருதொடி யாயங்கொல் லென்ன—வாவரத். 10. மீதே, கொடைநிலவுஞ்.

கைவைத் தருளாமே தாமே கடன்கழிக்குந்
தெய்வப் படையைந்துஞ் [1]சேவிப்பப்—பெய்கணைத்

தூணிப் புறத்தோடுந் தொட்ட சிலையோடும்
பூணித் தனங்கவேண் முன்போத—மாணிக்கக் (௧௩௦)

கோவையான் முக்குவட்டுக் குன்று யொருதிருப்
பாவையாற் கொல்லிப் பனிவரையா—யோவாது

செய்ய தமிழ்முழங்கத் தெய்வப் பொதியிலாய்
வெய்ய புலிமுழங்க மேருவாய்—வையகஞ்சூழ்

கோர முடன்போத நேமிப் [2]பெருங்குன்றாய்
வார்கவரி யாலிமைய மால்வரையாய்—வேரி

விடுங்குழையார் சென்னி மிலைச்சிய சென்னி
கொடுங்குழையார் வீதி குறுக—[3]நடுங்கிய

விண்ணாடு காத்து முசுகுந்தன் [4]மீண்டநாண்
மண்ணாடு கண்ட மடந்தையரு—நண்ணார்மேற் (௧௪௦)

[5]சோளன் பரிசாந்தேர் சூழ வருஞ்சக்ர
வாள [6]கிரியிலர மங்கையருந்—தோளிணையாற்

கோழியிற் சோழ குலத்தொருவன் முன்கடைந்த
வாழியிற் கொண்ட வரம்பையரு—மூழியிற்

[7]சீத்த வரையிற் றிருக்கொற்ற வில்லொன்றால்
வாய்த்த வரையர மாதரும்—போய்த்தனியே

கோதண்டங் கொண்டிரு சேடி யுடன்கொண்ட
வேதண்ட லோக விலையருங்—காதலாற்

றந்த பணிபதி தன்மகளைச் சேவித்து
வந்த கடவுண் மடந்தையரும்—பந்தாடு (௧௫௦)

மேரு வரையிற் புலிபொறித்து மீண்டநாள்
வாரும் வரையர மாதரும்—வீரவேள்

(பி - ம்.)—1. சேவிப்ப—வெய்யகணைத். 2. பொலன்குன்றாய். 3. நடுங்காமல் 4. மீண்டவந்நாண். 5. சோளன......சான சூழவருஞ். 6. கிரியா. 7. சீய்த்த.

வாங்கயிலிற் கூரிய கண்ணு ரொருவளவன்
றாங்கெயிலிற் கைக்கொண்ட தோகையரும்—பாங்கி
னிதியொடுங் கூட நிதியோ னளகைப்
பதியொடுங் கொண்டார் பலரு—முதலாய
சாய லரமகளிர் தத்தந் திருமரபிற்
கோயி லுரிமைக் [1]குழாநெருங்கி—வாயி லு
மாளிகையுஞ் சாலையு மாலயமு மண்டபமுஞ்
சூளிகையு மெம்மருங்குந் தோரணமுஞ்—சாளரமுந் (கசு0)
தெற்றியு மாடமு மாடரங்குஞ் செய்குன்றுஞ்
சுற்றிய பா(ங்)கருந் தோன்றுமற்—பற்றி
மயங்கி [2]மறுகில் வணங்கிப் பிணங்கி
யுயங்கி யொருவர்க் கொருவர்—தயங்கிழையீர்
[3]தற்கோடி யோரிரண்டு கொண்டு சதகோடி
[4]கற்கோடி செற்ற கலைகாணீர்—முற்கோலி
வட்ட மகோததி வேவ வொருவாளி
விட்ட திருக்கொற்ற விற்காணீர்—வெட்டிச்
சுழியிட்ட காவிரிக்குச் சோணாடு வாழ
வழிவிட்ட வாள்காண வாரீ—ரொழிய (கஎ0)
மதி[5]யெறிந்து வல்லேற்று வானெறிந்து தூங்கும்
பதியெறிந்த கொற்றவாள் பாரீ—ருதிய
[6]ரிடிப்புண்ட பேரிஞ்சி வஞ்சியி லிட்ட
[7]கடிப்பு முதுமுரசங் காணீர்—கொடுப்பத்
தரைகொண்ட வேற்றரசர் தஞ்சென்னிப் பொன்னிக்
கரைகண்ட போர்முரசங் காணீர்—[8]சரதப்
பவித்ர விசயப் படைப்பரசு ராமன்
கவித்த வபிடேகங் காணீர்—தவித்துலகின்

(பி - ம்.)—1. குழாமீண்டி. 2. மறுகிற்பிணங்கி வணங்கி. 3. தற்கொடியொன்றிரண்டு. 4. கற்கொடி செற்ற கிலைகாணீர்—முற்கொடி. 5. எறிந்த. 6. இடப்புண்ட. 7. கடப்ப மதுமுரசங். 8. அரசர்.

மூவெழுகா லெக்கோக் களையு முடித்தவனி
மூவெழுகாற் கொண்ட முடிபாரீர்—தாவி

வரப்பு மலைசூழ் வரவா யிரங்கண்
பரப்பு மொருவேங்கை பாரீர்—புரக்கநின்

றாடம் பரமடங்க வோங்கி யுயர்ண்ட
[1] கூடம் பொருவுங் குடைபாரீர்—கூடற்

பெரும்பெருமா ளெவ்வேந்து முன்போதப் பின்பு
வரும்பெருமாள் வந்தனர் வாரீ—ரிருங்கடற்

றொன்றருக்க மண்டலமுந் தோற்க வுலகங்கண்
மூன்றுக்குஞ் சூடு முடிபாரீர்—தோன்ற

வணைத்தரு காயிர மாயிர மாகப்
பணைத்த பணிவலயம் பாரீ—ரணைக்கட்

சிரித்த சுரேசனை வென்றொரு தென்னன்
பரித்த மணியாரம் பாரீர்—தரித்தருள

வேண்டிய நாளின் முனிவுண்டு வெட்டுண்ட
பாண்டியன் கட்டு வடம்பாரீர்—மீண்டுந்

திருந்து மதனன் றிருத்தாதை செவ்வி
யிருந்த படிபாரீ ரென்பார்—பெருந்தேவர்

முக்கொடி முப்பத்து மூவர்க்கு முன்னுயர்த்த
வெக்கொடியு முன்ன ரெடுத்துளவா—லக்கொடியாற்

றெல்லா ரணமனைத்துஞ் சொல்லுஞ் சுரவசுர
ரெல்லாருங் காணு மிவனென்பார்—புல்லிய

நீர்ப்பூ முதற்பூ முடியன்றி நேராதார்
போர்ப்பூ முடிதடிந்து போக்கியபின்— [2]போர்ப்பூவின்

மேதகு கொற்றவைக்கு வேந்தர் பிரானுவந்த
தாதகி யொன்றுமே சார்பென்பார்—மீது

பரந்த வவுணர் சிறைப்படு [3]மென்ன
விரந்தன கொண்டன வேன்று—புரந்த

(பி - ம்.)—1. கூடம் பரவுங் கொடை. 2. மேற்புவியின். 3. என்னை, யிரந்தன சோறுடை வென்று—புரந்து.

தனிச்சே வகம்பூமி தன்னதே யாக
வினிச்சே வகம்[1] விடா ளென்பார்—பனிச்சாரன்
மண்டு மலையால் வருந்தா வகை[2] வருந்திப்
பண்டு கலக்கிய பாற்கடலுட் — கொண்டதோர் (௨௧0)
செங்கோ கனகை திருமார் பினிலன்றி
யெங்கோ விருப்பா ளினியென்பார்—நங்காய்
திருப்பது மாபதி யிற்றிரு மார்பி
லிருப்பது காட்டு [3]மிவனென்பார்—சிரித்தெதிரே
யங்கட் கமலை யமலன் பெருந்தேவி
நங்கட் புலனாகி னன்றென்பார்—[4]மங்கைமீர்
கண்ணாருந் தாமரையுங் கைதொழுதே மெம்மருங்கும்
பண்ணாருஞ் செந்தா மரைபணிந்தேம்—வண்ணத்
தொடித்தா மரையுந் தொழுதன [5]நாபிக்
கடித்தா மரைதொழுவேங் காட்டீர்—[6]பிடித்தென்ன (௨௨0)
வைத்தா மரைத்தன் னடித்தா மரைக்கன்றி
மைத்தா மரைக்கெளிதோ வந்தென்பா—ருய்த்தா
ரொருபெருந் தாதகி தோய்சுரும்பை யோட்டற்
கிருபெருஞ் [7]சாமரமு மென்பா—ரருவி
யருகெய்த வொட்டா வயிரா பதத்தி
னிருகன்ன சாமரையு மென்பார்—[8]தெருவகத்துத்
தங்களின் மாறுடி யுள்ளந் தடுமாறித்
திங்க ணுதலார் [9]தெருமரலும்—

(பேதை.)

அங்கவரிற்

பேதைக் குழாத்[10]தொரு பேதை சிலபழங்
காதற் குழாத்தோர்தங் கையடையாண்—மீதா (௨௩0)

(பி-ம்.)—1. விடானென்பார். 2. வருந்தப். 3. இவளென்பார். 4 மங்கையர், கண்ணாகுந்.. தொழுதே வெம்மூறையும், பண்ணாகுஞ். 5. நாவிக் 6. பிடித்தன, வத்தா மரைத்த ணடித். 7. சாமரையும். 8. தெருமந்து. 9. தெருவுயா. 10. ஒருத்தி பேதைச் சில பழங், காதைக் குழாத்.

பிறந்தணிய கிள்ளை பெருத்தாயர் கொங்கை
மறந்தணிய செவ்வி மடமான்—புறந்[1]தணியத்

தோகை தொடாமஞ்ஞை தோற்றத்தாற் சுற்றத்தார்க்
கோகை [2]விளைக்கு மொருகருப்பு—பாகத்

தொடைபோய முல்லைத் தொடையலே போல
விடைபோய தூய வெயிற்று—ளுடையோன்

செறிந்து விடாத திருத்தோற்ற முற்று
மறிந்து பிறந்த வறிவோள்—[3]செறிந்தகுழ

லெம்பாவை யெங்கொல்லிப் பாவை யெனப்பாடு
மம்பாவை பாடும் படியறிவா—ளும்பர்

வெருவக் கரையை மிகுபொன்னி யன்றிப்
பருவத்து வேறு படியா—ளுருவக்

குறைவனை [4]வென்றெழுதுங் கோலத்து ஞாலத்
திறைவனை யல்ல தெழுதா—ளிறைவன்

முழங்கேழ் கடல்கொடுத்த முத்தேழு மல்லாற்
கழங்கேழுங் [5]கொள்ளக் கருதாள்—வழங்கிய

முற்றி லெடுத்துக் கொழித்து முழுமுத்தாற்
சிற்றி லிழைக்கின்ற செவ்விக்கட்—சுற்றும்

பனிநீங்கத் தோன்றும் பகலவன்போல் வையந்
துனிநீங்கத் தோன்றிய தோன்றன்—முனியும்

பொறைவிட் டெயில்விட்டுப் பொய்கை கவிக்குச்
சிறைவிட்ட சோளேந்த்ர சிங்க—நறைவிட்ட

வந்தாமஞ் செங்கழுநீர் மார்ப னழகிய
செந்தா மரைக்கட் டிருநெடுமால்—வந்தானை

யோகைய ராகி யுலப்பில் பலகோடித்
தோகைய [6]ரோடத் தொடர்ந்தோடித்—தாகந்

(பி - ம்.)—1. தணியந், தோகை. 2. விளைப்ப தொருதிருப். 3. நெறிந்த குழல். 4. வேறெழுதுங். 5. ஆடக். 6. ஒட்டத்.

தணியத் தணியத் தமரும் பிறரும்
பணியப் பணியப் பணிந்தாண்—மணிமார்பி
லாரந்தான் கண்டா ளயிரா பதந்தொழுதாள்
கோரந் தெரியவுங் கும்பிட்டாள்—வீரன் (உசுo)
படாகைப் பெரும்புலியும் பார்த்தொழிந்தா ளண்ட
கடாகத் ததிர்முரசுங் கண்டா—ளடாதனவுஞ்
சொல்லி யறியா தொழிந்தாள் சுருப்புநாண்
வில்லி யறியாது விட்டதே—

(பெதும்பை.)

நல்லார்சூழ்
மற்று மொருத்தி வலம்புரி யாயிரஞ்
சுற்றுஞ் சலஞ்சலம்போற் றோன்றுவாள்—கற்றுட
னன்ன [1]நடக்க நடந்தா ளருங்கிள்ளை
பின்ன ருடன்பேசப் பேசினா—ளின்னிசையாழ்
பாட வதனுடனே பாடினாள் பைந்தோகை
யாட வதனுடனே யாடினாள்—கூடிய (உஎo)
நல்லிள மானோக்க நோக்கினா [2]ணணிரம்பு
முல்லை முகிழ்க்க நகைமுகிழ்த்தாள்—கொல்லு
மழகளிற்றின் கோடெழுச்சி யென்று மரவக்
குழவி யெயிறெழுச்சி யென்றும்—பழகி
யெறியு மழையெழுச்சி யென்று முலக
மறியு முலையெழுச்சி யன்னஞ்—செறியும்
வரையேழி னுள்ள வயிரமும் வாங்குந்
திரையேழின் முத்தின் றிரளுந்—தரையேழிற்
பொன்னும் பிலனேழிற் போகா விருள்போக
மின்னுஞ் சுடிகை வெயின்மணியும்—பின்னும் (உஅo)
பொழிலேழிற் போதும் புனையும் புனனாட்
டெழிலேறு நானையே யென்னக்—கழிய

(பி-ம்.)—1. நடப்ப. 2. நாணிரம்பி.

வுழப்போ மினியென் றுடனுள்ள போழ்தே
யெழப்போக வென்னு மிடையாண்—மழைத்துப்

புடை [1]போ யளகம் புதுக்குவதன் முன்னே
கடைபோ யுலகளக்குங் கண்ணு—ளுடையதன்

சேரிச் சிறுசோறுஞ் சிற்றிலும்போய்ச் சில்லணிபோய்ப்
பேரிற் பெருஞ்சோற்றுப் பேரணியா— [2]ளோர்வயிற்

றன்னைய நிற்பத் தனிநா யகன்[3]கொடுத்த
மின்னையஞ் சேவிப்ப [4]வீற்றிருப்பாண்—மென்மலர் (உகூ0)

மேய [5]சிறுமுல்லைப் பந்தர் வடமெடுத்த
பாய பருமுத்தின் பந்தரா— [6]ணுயக

னுச்சியிற் சூட்டு முடியி னுலகுடையோன்
முச்சியிற் சூட்டு முடிக்குரியா—ணிச்சமு

நல்லுயிர்ப் பாவை துணைபெற நாயகன்
கொல்லியிற் பாவை கொளவிருப்பாண்—மெல்லியற்

பாங்கி......நங்கோமான் விந்தைப் பசுங் [7]கிளியை
வாங்கித் தரப்போய் வணங்கென்பா—ளாங்கொருத்தி

மாயமான் வேண்ட மறுதானை [8]மாமதியின்
மேயமான் வேண்டி விடப்பெறுவாள்—சேயவன் (கூ00)

றென்பா லிலங்கை[9]வாழ் தெய்வ மணிப்பணியா
னென்பாவை பூண வினிதென்பா—ளன்பா

லுயிர்த்துணைப் பாங்கி யொருநோன் புனத்த
வெயிற்புறத் தெல்லாருஞ் சூழ—வயிற்படை

வீரனை யெய்த [10]வியன்காவு சென்றெய்தி
மாரனை நோற்று வழிபட—மாசன்

(பி - ம்.)—1. போமளகம். 2. ஓரையிற். 3. அளிக்கும். 4. வீற்றிருந்தாள். 5. திருமுல்லைப் பந்தா விடை......க்கும், பாய பருமுத்தினபந்தாள். 6. நாயக, வுச்சியிற் கொண்டை முடிப்பில். 7. கிளிக்கு. 8. வண்மதியின். 9. வரத் தேயமணிபரிப்பாள். 10. வியன்றாவு.

படியிற் கடவுட் பணைமுழங்க வென்றிக்
கொடியின் மகரங் குமிற—நெடிய

வலகி லசோக நிழற்ற வடைய
வுலகின் மதுகர மூதக்—கலகித்

தலங்க [1]லடவிக் குயிற்குல மார்ப்ப
[2] விலங்கன் மலையக்கால் வீசக்—கலந்தெழு

மாவி யகிலொடு நீரோ டரமகளிர்
தூவிய தண்ணறுஞ் சுண்ணமுங்—காவில்

விடவிட வந்துயிர் [3]மீதடுத் தப்பொன்
வடிவு பழம்படியே வாய்ப்பக்—கொடியிடை

யெண்ணிய வெண்ண முடிப்ப [4]வவளெய்தும்
புண்ணியம் போலப் பொழில்புகுந்தா—ளண்ணல்

சரம்போலுங் கண்ணி தனக்கனங்கன் றந்த
[5]வரம்போல வண்மறுகில் வந்தான்—வரும்போதி

லேன்று மதன னியமியம்ப வேயனகன்
மூன்று முரசு முழங்கியது—தோன்றுத

வாரிக் களிறு முழங்கவே மானதன்
மூரிக் களிறு முழங்கியது—வேரித்தார்

கற்கு மசோக நிழற்றவே பார்கவித்து
நிற்குங் கவிகை நிழற்றியது— [6]முற்கொண்டு

மற்றை யலகின் மதுகர மூதவே
யொற்றை வலம்புரி யூதியது—முற்றுத

சொற்குதலைக் கோகிலங்க [7]ளார்க்கவே சோளேச
னற்கமணிக் காகளங்க ளார்த்தன—தெற்கெழுந்த

மல்லன் மலையக்கால் வீசவே மானதன்
மெல்லென் கவரிக்கால் வீசியது—மெல்லியலும்

(பி - ம்.)—1. அடைவிற். 2. விலங்கு மலையக். 3. மீதடுத்துப் போன. 4. இவரெய்தும். 5. வரம்போ லவுமறுகில் வந்தாள். 6. முற்கொண்ட. 7. ஆர்ப்பவே சோழேசன்.

காமன் பெருநோன்பு கைவந்த தென்றெதிரே
கோமைந்தன் வேழங் குறுகினாள்—கோமகனு

மல்கு மூவகைக் கலுழி வரவரப்
பில்கு மதர்வைப் பெரும்பரப்—பல்குலுங்

கொங்கைப் புதுவரவுந் தோளுங் குறைநிரம்ப
மங்கைப் பருவத்தே வாங்கினாண்—மங்கை

திருக்கொள்ளு மார்பற்குக் காமவேள் செவ்வேள்
வெருக்கொள்ளுஞ் செவ்வி விளைத்தாள்—பெருக்க

வொருவ ரொருவர்க் குருகி யுருகி
யிருவரு மீடழிய நோக்க—வருகாமன்

செஞ்சாயல் வல்லியையுஞ் செந்தா மரைத்தடங்கண்
மஞ்சாய கோல மணாளனையு—மஞ்சாதே

கொய்யும் பகழி கரும்பிற் சுரும்பிற்கோத்
தெய்யுந் தரமே [1]யெழப்போனான்—

(மங்கை.)

தைய
லொருத்தி தரள மிருநிரைகொண் [2]டொப்பித்
திருத்தி யனைய வெயிற்றாள்— [3]கருத்தி

னிலையிற் சிறந்த நிகரிலா மேரு
மலையிற் பிறந்த வயிர—மலையிற்

பழக்கச் சலஞ்சலம் [4]பாற்கட றார
முழக்கத் திருவுயிர்த்த முத்தந்—தொழத்தகு

முன்னை யுலக முழுதுந் தருமுரக
மன்ன னபிடேக மாணிக்க— [5]முன்னவன்

பாற்கட னீங்குநா ணீங்கிப் பழம்படியே
நாற்கட னையகனை நண்ணுவாண்—மேற் [6]கவினைப்

(பி - ம்.)—1. எனப்போனான். 2. ஒக்க, விருத்தி. 3. கருத்து, நிலையிற். 4. பாற்கடலேதார. 5. மன்னவன், பாற்கட னீங்கினாள். 6. கவினாற்.

பண்டு கடல்கடைந்தும் பாரெடுத்தும் வில்லிறுத்துங்
கொண்ட துணைவியருங் கூசுவாள்—புண்டரிகத்

தாடும் பொழுதினு மன்னப் பெடையயிர்ப்பப்
[1]பாடு மழலைப் பரிபுரத்தா—ணீடிய

தூசுகள் வெள்ளென்று தூயன [2]செய்பன
கோசிக மார்க்குங் குறங்கினாள்—[3]கூசிப்

பணியு மரசு பணிச்சுடிகை யேகோத்
தணியு மரைப்பட் டிகையா—டணியுங்கா

லற்றாண் டிலதென்னு மம்[4]மருங்கி லின்றெமக்குப்
பற்றாண் டெனுமுதர பந்தனத்தாள்—கொற்றவன்

சங்க நிதிமுத்தத் தாமத்தாள் [5]பத்மநிதித்
துங்க நவரத்னத் தோள்வளையாள்—புங்கந்

தொடுக்கு மலரோன் சுறவுக் குறவு
கொடுக்கு மகரக் குழையா—[6]ளடுத்துப்

பணிதந் தலகில் பராவெடுத்துச் சிந்தா
மணிதந்த சூளா மணியா—ளணியே

பரவி விறலியரும் பாணருந் தற்சூழ்ந்
திரவி புகார்பாடு மெல்லை—வரவாக்

கொங்கைக்குந் தோளிணைக்கு மாற்றாக் கொடிமருங்கு
னங்கைக்கு வந்தொருத்தி நாயகியே—கங்கைத்

துறைவன் பொறையன் றமிழ்நாடன் சோணாட்
டிறைவன் றிருப்பவனி யென்றாள்—பிறைநுதலும்

வேனிற் கணிய குயில்போன் றும் வீழ்தாரை
வானிற் கணிய மயில்போன் றுந்—தானும்

வரவே நினையு மனக்களியா [7]லிற்றை
யிரவே நமக்கிடையூ றென்றா—ளிரவிற்

(பி - ம்.)—1. பாடுமமலைப். 2. சேயன. 3. மூசிப், பணியு மாசும். 4. மருங்குல். 5. பற்பநிதித். 6. அடுக்கப், பணிதந் தலகிலம் பார்மடுத்துச். 7. இற்றைக், கிரவே யெனக்கிடையூறு.

செயிர்க்கரங்கள் வேண்டா டிருக்குலத்து வெய்யோன்
வெயிற்கரங்க ளூடாட வேண்டு—முயிர்க்கொலைசூழ்

தென்மலயத் தென்றலை யோட்டிப் புலியிருந்த
பொன்மலைய வாடாய் புகுதென்னு—முன்மலையுங்

கார்க்கடல் வாயடங்க நாயகன் கண்வளர்ந்த
பாற்கடல் வாராய் பரந்தென்னு—மேற்பாந்து

கார்பாடும் புள்வாய்க் கடும்பெய்த மூதிறைவன்
பேர்பாடும் புள்வாயிற் பெய்கென்னு—மீர்குர

லன்றிற் கொழிய மகன்றிற்கே யாகவிம்
முன்றிற் பணியு மெனமொழியு—மின்றிர

வூழிக் குயில்காய்ந் தொருபுலரி கூவிய
கோழிக்கே சோலை கொடீரென்னும்— [1]வாழியே

பள்ளி யெழுச்சி பவனி யெழுச்சிதரும்
வெள்ளி யெழுச்சி யெனவிளம்பு—நள்ளிருட்

கங்குற் கடற்கெல்லை யிவ்வாறு [2]கண்டுவந்த
மங்கைப் பருவத்து வாணுதலும்—பொங்கொலிநீர்

வையகங் காவலற்குப் பெய்யு மலர்மழைக்குக்
கொய்பொழில் சென்று குறுகினள்—செய்ய

கொடுங்குழை மின்னக் குயில்[3]கோதக் கோத
விடுங்குழை தேமாவின் மின்ன—நெடுங்குழை

வல்லிக் கொடியு முறுவலிப்ப வந்தெதிர்
முல்லைக் கொடியு முறுவலிப்ப—மெல்லியற்

பாந்தளுந் தோற்கும் பகட்டல்குல் கைம்மலரக்
காந்தளு நின்றெதிர் கைம்மலரப்—போந்தார்

பரவு மலர்ப்பாவை கொள்ளப் பயந்த
குரவு மலர்ப்பாவை கொள்ளப்—புரிகுழற்

சோலையின் மான்மதஞ் சூழ்வர வேழிலைம்
பாலையின் பான்மதம் பாரிப்பச்—சோலையில்

(பி - ம்.)—1. வாழியெம். 2. கண்டுவக்கும். 3. கோதப்போத.

வாங்கு புதுமது வாணுதல் கொப்பளிப்பக்
கோங்கு மதுவெதிர் கொப்பளிப்ப—வாங்குத்

திருவஞ்சு கோலத்தாள் செல்லவே யெல்லாம்
பருவஞ்செய் சோலை பயப்பப்—பெருவஞ்சி

கொய்தன கொய்தன யாவும் பலகூறு
செய்தனர் செய்தனர் பின்செல்லக்—கொய்யாத

பொன்மல ராயம் பொழியப் பொழிற்கொண்ட
மென்மலர் கொண்டு வெளிப்பட்டாண்—மன்னனு

மெப்போதிற் போது மொருபோதி லேந்திழை
கைப்போதிற் [1]பெய்தன கண்டருளா—வப்போதே

செங்கை தடவந்துஞ் சீறடி தீண்டியுங்
கொங்கை சுணங்கெறிந்து [2]கொப்பளித்து—மங்கை

பரிசி லுருவம் பயந்தன வென்று
[3]குரிசி லெதிர்கவர்ந்து கொண்டான்—பொருவரிய

தூசுந் துகிலுந் தொடியுங் கடிதடஞ்சூழ்
காசும் பலகாற் கவர்ந்ததற்குக்—கூசி

யிலகுஞ் சுடர்முடியும் யானையு மீரே
ழுலகுங் கொடுப்பானே யொத்துப்—பலகாற்

கொடாத [4]திருநோக்க முற்றுங் கொடுத்து
விடாது களிறகல விட்டான்—

(மடந்தை.)

அடாதன்பா

வீரடியான் மூவுலகுங் கொண்டானை யெப்பிறப்பு
மோரடியு நீங்காதா ளோரணங்கு—சீருடைய

மானுங் கலையும் வளர வுடன்வளர்ந்து
தானு மதிய மெனத்தகுவாள்—பானின்

(பி-ம்.)—1. பெய்வன. 2. கொப்புளித்தும். 3. குருசில் கவர்ந்தணிந்து கொண்டான்—தெரிவரிய. 4. திருநோக்கு முற்றக்.

றனலுஞ் [1]சினமகர மஞ்சப் புடைபோய்க்
கனலுங் கயலனைய கண்ணாண்—மினலா

லிருளுடைய மேனின் றெரிசுடிகைப் பாப்புச்
சுருளுடைய வீங்கிய தோளா—ளருளொடுந்

தம்புறஞ் [2]சூழ்போதத் தாயரே வீக்கிய
வம்பற வீங்கும் வனமுலையாள்— [3]செம்பொனின்

பண்ணிறக் காஞ்சியுங் கட்டிய பட்டிகையுங்
கண்ணிறப் போய கடிதடத்தா—டண்ண றுந்தார்

மின்மணி மௌலியான் [4]வீதி வரவேற்றுத்
தன்மணி மாளிகைத் தாழ்வரையிற்— [5]பொன்னு நுவைத்

தைத்துத் துகிரு மரகதமுந் தாருக
வைத்துக் கமுக வனஞ்செய்து—முத்தின்

பொலந்தோ ரணநிரைத்துப் பொன்னடுத்த மேக
தலந்தோய் விசால தலத்து—மலர்ந்தபூங்

கற்ப [6]தருநிரைக் காற்பல கைபடர்ந்து
பொற்ப மிசையடுத்த பூம்பந்தர்—நிற்பப்

புகரத்ன முத்த விதானமேற் போக்கி
நகைவச் சிரமாலை நாற்றிப்—பகல்விளங்கா

மைவிளக்கு வையாதே மாணிக்க வர்க்கமே
யெவ்விளக்கு மாக வெதிரெடுத்து—நொவ்விய

பூநறுஞ் சுண்ணப் பொடியடங்க வீசிய
நான நறுநீர்த் தளிநளிய—மேனிலையிற்

கங்கையி னீர்கொணர்ந்தோ காவிரியி னீர்கொணர்ந்தோ
கொங்கை யிளநீர்க் குடநிரைத்—தெங்கு

மசும்பு பொலன்கொடியா லவ்வேலை யுள்ள
விசும்பு தவிர விலக்கிப்—பசும்பொன்யாழ்

(பி-ம்.)—1. சிலமகர மஞ்சப் படைபோய்க். 2. சூழ்போகத். 3. பைம்பொன்னின். 4. வீதிவர வேயிறுத். 5. பொன்னுருவத், தைத்த துகிரும். 6. தருநிரைத்தாற் கப்பல கைமடந்த.

முட்ட முயன்ற விறலியர் முன்னிருப்ப
விட்ட தவிசின் மிசையிருந்து—பட்டணஞ்சூழ்

பொன்னிக்குங் கோதா விரிக்கும் பொருனைக்குங்
கன்னிக்குங் கங்கைக்குங் காவலனைச்—சென்னிதங்

தானைப் பெருமானை நல்ல சகோடங்கொண்
டியானைப் பெருமானை யேத்தெடுப்பாண்—மேனா

ளுகந்த பிடியுடனே யோரேன் பிடியுந்
திகந்த களிறெனவுஞ் சென்று—முகந்து

துறக்குங் கடன்முத லேழுஞ் சொரியச்
சிறக்கு மபிடேகஞ் செய்து—விறக்கு

முயிர்காவன் மேற்கொண் டுலகைவலஞ் செய்யு
மயிரா பதமத வானை—யுயருங்

கடனாக மெட்டுங் கடனாக மெட்டும்
படநாக மெட்டும் படர்ந்திந்—துடனாகத்

தென்னர் வலம்புரியுஞ் சேரலர் சாமரையுங்
கன்னவ தங்கிசமாக் கைக்கொண்டு—பின்னவர்

வாளகை மௌலி யிரண்டு மிருகோட்டுக்
கோளகை யாக்கொண்ட கோக்களிறு—மாளிகை

தாக்குண்ட வாயில்க டோறுந் தணிதூங்கத்
தூக்குண்ட தண்டைத் துடருடனே—வீக்குண்ட

வாராத நாளைக்கும் போதக் கிடந்தார்ப்பத்
தாராகக் கொண்ட மதசலநீர்—வாரா

நதிக்கு மலைக்கு மடவிக்கு நாளுங்
குதிக்கு மதச்சுவடு கோத்து—மதிக்கும்

பிடிவிடாக் காதற் பெருங்களிறுங் கன்று
மடிவிடா தவ்வா றடையப்—படிவிடா

தாட்டுங் கரிவாரி யேழென்பா ரெட்டென்னக்
கூட்டும் பெருங்கடவுட் கொல்யானை—[1]நாட்டிற்

(பி - ம்.)—1. நீட்டிற்.

பணிகொண்ட பூதப் படைநான்கும் பற்றப்
பணிகொண்ட பௌவம் பரக்கப்—பணிகொண்ட

கார்முற்றும் பேரணி வீழ்ப்பக் கவுரிய
ரூர்முற்றஞ் செற்ற தொருகூற்றஞ்—[1]சேரர்

கனக்கு மனீக களந்தொறுங் கைக்கொண்
டினக்கு மரசுவா வெல்லாந்—தனக்குத்

துணிக்குங் கழைக்கரும்பு நெல்லுஞ் சுமக்கப்
பணிக்குங் கடவுட் பகடு—தணிப்பரிய

பூகங்கைத் தாடோயச் செங்கை புயல்வானின்
மாகங்கை தோயப்போய் [2]மாமேணி—நாகங்கைக்

கொண்டு தனிதங்கள் கோள்வேங்கை வீற்றிருப்பக்
கண்டு களிக்குங் களியானை—வண்டலம்ப

நின்று குதிக்கு மதத்தி னிலநெகிழ்த்தே
குன்று மொளிப்பக் குளிப்பமுன்—சென்றெழுதிப்

பண்டு வெளியின் மகதத்தைப் பாவடியாற்
செண்டு வெளிகண்ட செங்கண்மாக்—கண்ட

மதிலே யகழாக வாங்கி யகழே
மதிலே யெழாநிற்க வைத்துப்—புதுமைசெய்

வாவிகள் செய்குன்ற மாகவச் செய்குன்றம்
வாவிக ளாக வெனவகுத்துத்—தாவுமான்

வெள்ளிடை கோநக ராகவக் கோநகர்
வெள்ளிடை யாக வெனவகுத்துத்—தெள்ளிப்

புரப்பா ரிரப்பாராய்ப் போக விரப்பார்
புரப்பாரே யாக்கும் புகழ்மாத்—திருக்குலத்துக்

கண்ட னயிரா பதமதங்கால் காலத்துக்
கொண்ட தொருசுவடு மேல்கொண்டு—வண்டு

கடியுங் களிறுங் களிறாமே காதற்
பிடியும் பிடியாமே பின்னர்க்—கடிமதின்

(பி - ம்.)—1. சோரார். 2. மாமேரு.

மாற்று வருவன வங்காள பாகத்து
வேற்று......மா மிருகமதத்தைப்—போற்றூர்

வயிரா கரமெறிந்த மானதன் கண்ட
னயிரா பதமதமே யாகச்—செயிர்தீர்ந்த (ருஉ0)

காதற் [1]பிடித்தேறுத் தேருக் கடாக்களிறென்
றோதப் பெயரு மொருபொருப்புப்—பாதையிற்

கச்சியிற் காற்றளையிற் கல்லிற் கலிங்கத்திற்
கொச்சியில் [2]வாதாவி யிற்குளத்தில்—விச்சியில்

வல்லூரிற் கொல்லா புரத்து மணலூரி
னெல்லூரிற் புத்தூரி னெட்டூரிற்—செல்லூரிற்

கோட்டாற்றிற் [3]கொங்குலவு கூகூரிற் கொப்பத்தில்
வாட்டாற்றிற் கம்பலையின் மண்ணையில்—வேட்டுத்

தரணி கவர்ந்து தமிழ்வேந்தர் பாடும்
பரணி புனைந்த பகடு—சரணென்று (ருரு0)

வாடா மதுரயாழ் வாங்கி மடவரல்
பாடா விருந்த பருவத்து —நீடாப்

பரிசி லுடனே பணிப்பதுபோல் யானை
குரிசி லுடன்வந்து கூடத்—தெருவில்

வரவந்தான் மன்னர் பிரானென்று மாரன்
பொரவந்தான் கைவாங்கிப் போனான்—விரல்கவர்

வீணைக் ககப்ப[ட்]ட வேழ மிடற்றுக்கு
மாணைப் பெருமா ளகப்ப[ட்]ட—வானுத

லைந்து தருவு மமைந்த திருமாலை
தந்து தொழவெழுந்து [4]சாத்தினாண்—மைந்தனும் (ருச0)

பண்ணுக்கே தோற்பான் பணைமுலைக்கு மல்குலுக்குங்
கண்ணுக்குந் தோலானே கைக்கொண்டான்—வண்ணமும்

(பி - ம்.)—1. பிடித்தேனுத் தேருக் கடாக்களிற்றென். 2. வாதாவி யற்குனத்தில். 3. கொங்குலவக்கூரிற். 4. சாத்தினான்.

வெண்டுகிலுங் காஞ்சியு மேகலையுந் தோள்வளையுங்
கொண்டவற்றின் மாறு கொடுப்பான்போற்—பண்டை

முடியுஞ்சிங் காதனமு முத்தக் குடையும்
படியு.........பணிப்பான்—பிடியுஞ்

சிவிகையு நிற்பவச் சேயிழை வீதி
கவிகையுந் தானுங் கடந்தான்—

(அரிவை.)

குவிமுலை

யேனை யரிவை யொருத்தி யிகன்மாரன்
சேனை திரண்டனைய செவ்வியாள்—வானில் (௫௫0)

விடுசுடர்ச் செக்கர் வியாழமுந் தோற்கும்
படிசுடர்ப் பைம்பொற் படியாள்—வடிவு

[1]நெடிதோர்க்கி லொக்கு நிறைமதிய நேரே
[2]படிகோக்கு முத்தின் படியாண்—முடிவில்

குலபதும ராக மதிகுதி கொள்ளும்
பலபதும ராகப் படியா—ளலைகடலின்

[3]முற்று மரையாண் முகத்தா மரையாளப்
பொற்று மரையாளப் போதுவா—ளற்றைநா

டண்ணென் கழுநீர்த் தடம்பொய்கை நாமெலா
மண்ணல் வருமளவு மாடுதுமென்—றெண்ணிப் (௫௬0)

புணைக்கு மொருவன் புறங்காவ லாயத்
துணைக்குந் தடஞ்சுருங்கத் தோயப்—பணைக்கும்

புடைக்கும் விசும்பிடம் போதா முலைக்கு
நடைக்கு முதற்பகை நாமென்—றுடைப்புண்டு

பின்னப் படுஞ்சக்ர வாகப் பெருங்குலமு
மன்னக் குலமு மலம்வரப்—பின்னருங்

(பி - ம்.)—1. நெடிதோற்கில். 2. படிகோற்கு. 3. முற்று மகையாள்.

காற்குங் கருங்கட்கு முட்காதே கைவகுத்
தேற்குந் தரமேநா மென்றுபோய்த்—[1]தோற்கின்ற

வாவியி னுள்ள வரால்களுஞ் சேல்களுந்
தாவி விழுந்து தடுமாறத்—தீவியம்

பொம்மென் சிலம்பு புலம்பு புறவடிக்கு
மம்மென் கழுத்துக்கு மாற்றாது—மம்மர்பட்

டெங்குந் திரியா திரியல்போ யாமையுஞ்
சங்குந் தடத்தை விடத்தவழ—நங்கைதன்

செவ்வாயுங் காதுஞ் செயிர்த்தபின் சென்றொதுங்க
வெவ்வாயுங் காணா தெதிரேகின்—றவ்வாய

கொள்ளைக் குமுத மலருங் குழையிள
வள்ளைக் கொடியு முடன்மயங்க—வெள்ளம்போற்

பெய்யு மதயானைக் கோடும் பெருநெடுங்
கையும் புடைப்பக் கலுழ்வதுபோற்—றெய்யல்சூழ்

தாம முலையாலுந் தோளாலுந் தாக்குண்டு
காமர் தடமுங் கரைகடப்பக்—கோமக

னுள்ளம் பருகப் பெருக வுலாக்கொண்டு
கள்ளம் பெருகுங் கருநெடுங்கண்—வெள்ளம்

படிய வருசிவப்பு வள்ளம் பசுந்தேன்
வடிய வருசிவப்பின் வாய்ப்ப—நெடிது

திளைக்குந் திருமகளை வாவியிற் சேவித்
திளைக்குங் கொடியிடையா ரேத்தத்—திளைத்துழித்

தம்மைக் கமல மலர்க்கருளித் தாமவற்றின்
செம்மை கவர்ந்த திருக்கண்ணு—[2]மெய்ம்மையே

பொய்போய வைய மருங்குலு மேகலைபோய்க்
கைபோ யகன்ற கடிதடமும்—பைபோய்

வெறிக்கும் பணிவலையம் வீங்கிய வேய்த்தோ
ளெறிக்கும் பெரும்பே ரெழிலு—நெறிப்படக்

(பி - ம்.)—1. தேர்கின்ற. 2. மெய்ம்மெய்யே.

கொண்டுபோந் தேறியக் கோமகன் பேரழகு
பண்டுபோய் நோக்கப் பயப்படுவார்—கண்டு

கலன்கலன் கண்ணெச்சிற் கென்று கடிதிற்
பொலன்கலன் [1]கொண்டு பொதிந்தா—ரிலங்கிழை

யானைப் பெருமா னயிரா பதத்திருந்த
தானைப் பெருமானைச் சந்தித்தாண்—மேனி

பொருவிற்கே யெல்லா வரம்பையரும் போதாத்
திருவிற்கே குற்றேவல் செய்வாள்—பொருவிற்கை

வாணிற்கோ [2]னஞ்ச வருவானை யஞ்சாதே
வேனிற்கோ னேபாவ மேற்செல்வாள்—வானத்

தெடுக்குங் கொடிமாத ராசிற் றுடையிற்
றொடுக்கு மகரம்போற் றோன்று—தடுத்தெய்யு

மன்றன் மலரம்பு விற்கரும்பு வண்டுநாண்
டென்றறேர் தானனங்கன் செற்றதென—மென்றோளி

பாங்கி யெடுத்த படாகைப் பசும்பொற்பூ
வாங்கி யெதிர்தூய் வணங்கினா—டாங்கி

யெடுப்ப வெழுவா ளிருதிருத்தோண் மாலை
கொடுப்ப விறைவனுங் கொண்டான்—கொடுத்தவற்றுட்

பொன்மாலை போதகத்தைச் சூட்டிப் பொலன்குவளை
நன்மாலை [3]சாத்தினா னாயகனுந்—தன்மார்பி

லார்மாலை கோமா னருளினா னம்மாலை
கார்மாலை யுட்கொண்டு கைக்கொண்டாள்—பார்மாலை

மூதண்டங் காக்கு முதுதண்ட மாரவேள்
கோதண்டத் தின்.........கொள்ளாதோ—மாதண்ட

முற்றக் கடல்கிடந்து வேவ முனிந்தின்னங்
கொற்றத் தனிவிற் குனியாதோ—நற்றடத்தி

லேறு முதலை யெறிதிகிரி வேண்மகர
வேறு முறிய வெறியாதோ—வாருது

(பி-ம்.)—1. கண்டு. 2. அஞ்சிவதிவானை. 3. சாத்தினா னாயகனுந்.

காந்து முழுமதியை யோரோர் கலையாக
வேந்து சுடர்வடிவா ளீராதோ—பாந்தண்மேல்

வைய முடையான் வலம்புரியில் வைகறைவா
யுய்ய வொருகுரல்வந் தூதாதோ—வையந்

தணியுந் தகைத்தோ தமியன்மா லென்று
பணியுங் கொடியிடையைப் பாரா—வணிய

வுருத்தந்த தோற்றங்க ளொன்றினுந் தப்பா
வருத்தந் திருமனத்து வைத்தோ—திருத்தடந்

தோளுந் திருமார்பு நீங்காத் துணைவியரி
னாளும் பிரியாம னல்கினான்—

(தெரிவை.)

மீள

வொருமகள் கண்டா னொருபெரும்பே ராகந்
திருமகள் போலத் திளைப்பா—ளிருநிலந்

தாளா லளந்து தருபெரியோன் றாங்கிய
தோளால் வளர்ந்த துணைமுலையா—ணாளுந்

திரையர மாதருஞ் சேவிப்பாண் மேரு
வரையர மாதரில் வாய்ப்பாள்—கரையில்

விருப்பவனி கூர வருகின்ற மீளி
திருப்பவனி முன்விரைந்து செல்வா—ளுருப்ப

வணந்த பணிவலையத் தண்ணான் முதனாண்
மணந்த மணச்செவ்வி வாய்ப்பக்—கொணர்ந்தணிந்த

சூடா மணியும் பணிவளையுஞ் சூடகமுங்
கோடாழ் மணிமகர குண்டலமு—மாடிய

சச்சையு மாலையு மாரமுந் தாமமுங்
கச்சையு மேகலையுங் காஞ்சியும்—பச்சென்ற

பட்டுங் குறங்கணியும் பட்டிகையு நூபுரமுங்
கட்டுங் கனவயிரக் காறையு—மிட்ட

திலகமு மான்மதமுஞ் செஞ்சாந்து மெல்லா
வுலகமுந் தோற்கு முருவுங்—கலகமு (கூ௫0)
மாரனுந் தானும் வருவானை மன்னரில்
வீரனுங் காணு வெருவராப்—பாரனைத்துந்
தேறுந் திருவைத் திருவவ தாரங்க
டோறும் பிரியாத் தொடர்பாலும்—வேறுகண்
வாளாலும் வார்புருவ வில்லாலு மாங்கமைந்த
தோளாலு மீளத் துவக்குண்டு—நீளிய
மைவிடா நோக்கி திருக்கை மலரணை
கைவிடா வார்வங் கடைப்பிடித்துத்—தெய்வப்
புயவ னயவிலையன் போற்றுகின்ற தெல்லா
மியவன முழுது மியந்தான்—கவினிய (கூகூ0)
வற்புத மாலை யணியப் பணிசெய்யுங்
கற்பக மென்று கடைக்கணித்தான்—பொற்பதி
பாதங்க ளாதி முடியளவும் பாரிப்ப
மாதங்க ராசிதிரு வாய்மலர்ந்தா—ளேதி
1 முடிக்குந் தலைக்கோலம் போல்வன முத்தின்
படிக்குஞ் சலாபம் பணித்தான்—வடிப்பலகை
யச்[சி]ரா பரண மனைத்தினுக்குந் தன்வட
வச்[சி]ரா கர்மே வழங்கினுன்—பச்சை
மணிக்குத் தலையாய மாணிக்க ரத்னப்
பணிக்குத்ரி கூடம் பணித்தான்—றணிப்பில் (கூஎ0)
பெரும்பே ருவகைய ளாகிப் பெருமாள்
விரும்பேர் புதுக்கண்ணி மீண்டாள்—பொரும்போர்
2 வெருவரும் பார்வேந்தர் வேந்தனைப் போற்றும்
பொருநரும் பாணரும் புக்கார்—தெரிவைக்குப்
பாடிக் குழலூதிப் பாம்பிற் படக்கூத்து
மாடிக் குடக்கூத்து மாடினுள்—பாடியி
லானிரையு மாமா னிரையும்போ லானுலகிற்
கோனிரையு மாலக் குழாங்கொண்டு—மீனிரை

(மூ - ம்.)—1. முடிக்குத்தலைக். 2. வெருவளரும்; வெருனரும்.

மீதும் புடையு மிடைய வளவே (யை)
யூதுந் திருப்பவள மூட்கொண்டுஞ்—சீதத்
தடந்தூர வந்துங் ககன தலமு
மிடந்தூர வந்து மினிய—குடங்க
ளெழவெழ மேன்மே லெழுந்துங் குடங்கள்
விழவிழ மேன்மேல் விழுந்தும்—பழகிய
கோளீண்டுஞ் சோழேந்த்ர சிங்கந் திருத்தடந்
தோளீண்டு மென்றென்று சொல்லியும்—கோளொழிய
நின்வேய் தவிரென்று நேரியன் மேருவிற்
பொன்வேய் குழலோன்பின் போக்கினாள்—[1]பின்னர்த்
தசும்பிற்கு மாறாகத் தங்கோமா னுவற்
பசும்பொற் றசும்பு பணித்தா—ளொசிந்துபோய்
நாடகப் பாம்பிற்கு நங்கற் பகங்கோத்த
வாடகப் பாம்பொன் றருளினாள்—பாடுநர்மேல்
வற்றாத மான்மத வாவியில் வாடாத
பொற்றா மரையைப் புனைகென்றாள்—கொற்றவன்
கொந்தார மாலை கொளவிளைத்த மாலைக்கு
மந்தார மாலை வருகென்றா—ணந்தாத
பேறுந் திருவருளு மெய்தி யவர்பெயர
வேறுந் தவிசு தரவேற்று—............
துகிலசைந்து நாணுந் தொலைய வளக
முகிலசைந்து நோவிடைக்கு முற்ற—வகிலமுஞ்
சேனையு மன்னருந் தெய்வப் பெருமாளும்
யானையு நிற்க வெதிர்நின்று—கோனே
சதயுக மென்னுந் தரணிபர் மக்கள்
பதயுக மல்லது பாரா—ருதயாதி
காந்தின கைத்தலத்தைப் பார்மடந்தை கற்பாகத்
தேந்து மவாவா சென்றிகழ்வர்—பூந்தொடி
நற்போர் மடந்தை திருத்தோளை நாமுடைய
வெற்போ ரிரண்டென்று வீற்றிருக்குங்—கற்பிற்

(பி - ம்.)—1. பின்னர், கரும்பிற்கு; பின்னர், சுரும்பிற்கு.

கலந்தாளுஞ் சொற்கிளத்தி கன்னது[வ]ய மேனப்
பொலந்தா மணியென்று போகா—ணிலந்தா (எகO)

வந்தா [1]மரையுள் கடைக்கண்ணை யென்னிரண்டு
செந்தா மரையென்று செம்மாக்கு—முந்துற

மல்லா புரேச சிலகால மற்றிவை
யெல்லாந் தணித்துடையோம் [2]யாமன்றே—யல்லாது

மேகோ தகமிரந்த சாதகம் வெற்பையே
யேகோ தகம்பொழிந்தா லென்செய்யு—[3]மாகத்தின்

காலை வெயில்வேண்டு தாமரைக்குக் கற்பாந்த
வேலை வெயிலெறிக்க வேண்டுமே—மாலைச்

சிலாவட்டஞ் சிற்சில சென்றுருக வென்று
நிலாவட்ட நின்றெறிக்க நேரே—குலாவிளைஞர் (எஉO)

* சேற்றுக்கான் மீளுந் திருநாடா நீதருமா
னாற்றுக்கான் மேன்மே லளிப்பரே—கோற்றொடியார்

நீங்கரிய மேகமே யெம்போல்வள் நீயளித்தாற்
றூங்கரிய..............................

....

வேறு மதவிததா னேறினாள்—

(பேரிளம் பெண்.)

வேறொருத்தி

கச்சை முலையுங் கடிதடமுங் குங்குமச்
சச்சை கமழுந் தடந்தோளு—நிச்சயமு

மேந்த வுளதென் றிருந்த மலர்நின்றும்
போந்த திருமகள் போலிருப்பாள்—வேந்தர் (எநO)

பணியுந் தடமகுடம் பன்னூறு கோடி
யணியுந் திருத்தா ளபயன்—பணிவலய

வீக்கிலே வீங்கியதோண் மேரு கிரிசிகரத்
தாக்கிலே சாய்ந்த தனதடத்தாள்—பூக்கம

(பி - ம்.)—1. மரையுங். 2. யாமென்றே. 3. மீகத்தின்.

மூரேற்ற பொற்று ளருளொளியை யாயிரம்
பேரேற்ற தெய்வப் பெருமானைக்—காரேற்
றடல்போ லடுதிகிரி யண்ணலைத் தன்பாற்
கடல்போ லகப்படுத்துங் கண்ணுண்—மடல்விரி
தெங்கினு மேற்குந் தசும்பினுந் தேர்த்தெழுப்
பொங்கு நுரையினும்போய்ப் போகாது—தங்கு (எசுo)
நறவு குவளை நறுமலர்தொத் துண்ணு
மிறவு கடைக்கணியத் தேய்ப்பச்—சுறவுக்
கொடியோனை [1]நோக்குவாள் கண்டாள்போற் கொங்கை
நெடியோனை நேமிப் பிரானைப்—படியோனைக்
கண்டனை மேதினியாள் காந்தனை வந்துய்யக்
கொண்டனை யென்று குறுகுவாள்—கண்ட
மலர்கண் ணிமைப்பச் சிவப்பூர மாற்றித்
திலகங் குறுவியராற் றேம்பப்—பலகுதலை
மாற்றந் தடுமாற்ற மெய்த மனத்துள்ள
[2]தேற்றமித் தோற்றஞ் சிதைவிப்ப—வேற்கைமிகு (எஅo)
[3]தன்மை யறிய நிலவினேன் சந்தனத்தே
முன்னை யறிய [4]வுணர்வினேன்—வெவ்வயிற்
செல்லாத கங்குலெனத் தீராத வாதரவேம்
பொல்லாத வெம்பசலைப் போர்வையே—நில்லாத
வாமே கலையே முலைவிக்கா விம்மினேம்
யாமேயோ விப்போ தெளிவந்தேம்—யாமுடைய
நன்மை யொருகாலத் துள்ள தொருகாலத்
தின்மை யுணராயோ வெங்கோவே—மன்னு (நீ)
முன்பு கருடன் முழுக்கழுத்தி லேறுவது
பின்பு களிற்றின் பிடர்க்கழுத்தே—மின்போ (எகுo)
லிமைக்குங் கடவு ளுடையினைபண் டிப்போ
தமைக்குந் துகிலினை யன்றே—சமைத்ததோர்

(பி - ம்.)—1. நோக்குவான். 2. தேற்றும்பித் தோற்றஞ். 3. தன்மையறியா. 4. உணர்பினேன்—வெவ்வையிற்.

பாற்கடலிற் சேபாஞ்ச சன்னியம்பண் டிப்போது
காற்கடி சென்று கவர்சங்கே—சேர்க்கின்ற

தண்ணந் துழாய்பண்டு சாத்து திருத்தாமக்
கண்ணியின் றுரின் கவட்டிலையே—துண்ணெனத்

தெள்ளி யறைபாற் கடலே திருத்துயிற்
பள்ளி யறையின்று பாசறையே—வெள்ளிய

முத்தக் குடைகவித்து முன்கவித்த மாணிக்கக்
கொத்துத் தொடையொக்கக் கூட்டுமே—யித்திறத்தா (எஎ0)

லெண்ணற் கரிய பெரியோனீ யெங்களையு
மண்ணற் கிகழ, வடுக்குமே—விண்ணப்பங்

கொண்டருளு கென்ன முகிழ்த்த குறுமுறுவற்
றண்டரளக் கொற்றத் தனிக்குடையோன்—பண்டறியா

வாரமு மாலையு நூலு மருங்குலாற்
பாரமு மேகலையும் பல்வளையு—மூரும்

பிடியுஞ் சிவிகையுஞ் சேரும் பிறவும்
படியுங் கடாரம் பலவு—நெடியோன்

கொடுத்தன கொள்ளாள் கொடாதன கொண்டா
ளடுத்தன தோண்மே லயர்ந்தா—ளெடுத்துரைத்த (எஅ0)

பேதை முதலாகப் பேரிளம்பெண் ணீறாக
மாத ரினங்கொள்ளா மால்கொள்ளச்—சோதி

யிலகுடையான் கொற்றக் குடைநிழற்ற வீரே
ழுலகுடையான் போந்தா னுலா. (எஅச)

அன்று தொழுத வரிவை துளவணிவ
தென்று துயில்பெறுவ தெக்காலந்—தென்றிசையி
னீரதிரா வண்ண நெடுஞ்சிலையை நாணெறிந்த
வீரதரா வீரோ தயா.

இராசராசசோழனுலா முற்றிற்று.

கலிங்கத்துப்பரணியின்படி.

1. திருமால். 2. பிரமன்.
3. மரீசி. 4. காசிபன்.
5. விவஸ்வான்.
6. மனு.
7. இக்ஷ்வாகு.
8. ககுத்ஸ்தன்.
9. மாந்தாதா.
10. முசுகுந்தன்.
11. பிருதுலாக்ஷன்.
12. சிபி.
13. சுராதிராசன்.
14. இராசகேசரி.
15. பரகேசரி.
16. கிள்ளிவளவன்.
17. காந்தன்.
18. சுரகுரு.
19. சித்திரன்.
20. சமுத்திரசித்து.
21. பஞ்சபன்.
22. வாதராசனைப் பணிகொண்டவன்.
23. தூங்கெயிலெறிந்தவன்.
24. உபரிசரன்.
25. பாண்டவர்படைக்குதவிசெய்தவன்.
26. சாலீசுகன்.
27. செங்கணன்.
28. கரிகாலன்.
29. விண்ணில் வேழமுகைத்தவன்.
30. பராந்தகன்.
31. இராசராசன் I.
32. கங்கைகொண்ட சோழன்.
33. இராசாதித்தன்.
34. இராசேந்திரதேவன்.
35. இராசமகேந்திரன்.
36. வீரராசேந்திரன்.
37. விசயதரன் (குலோத்துங்கன் I.)

விக்கிரமனுலாவின்படி.

1. பிரமன்.
2. காசிபன்.
3. மரீசி.
4. சூரியன்.
5. மனு.
6. மாந்தாதா.
7. மாகவிமானமூர்ந்தவன்.
8. முசுகுந்தன்.
9. கூற்றுக்கு வழக்குரைத்தவன் (கிள்ளிவளவன்.)
10. முதுமக்கட்சாடி வகுத்தவன்.
11. தூங்கெயி லெறிந்தவன்.
12. சமுத்திரசித்து.
13. சாலீசுகன்.
14. சிபி.
15. காந்தன்.
16. கரிகாலன்.
17. செங்கணன்.
18. மார்பில் ௯௬ புண்கொண்டவன்.
19. பராந்தகன்.
20. இராசராசன் I.
21. கங்கைகொண்ட சோழன்.
22. இராசாதித்தன்.
23. இராசேந்திரதேவன்.
24. இராசமகேந்திரன்.
25. வீரராசேந்திரன்.
26. அதிராசேந்திரன்.
27. குலோத்துங்கன் I.
28. விக்கிரமன்.

குலோத்துங்கனுலாவின்படி.

1. சூரியன்.
2. மனு.
3. ககுத்ஸ்தன்.
4. முசுகுந்தன்.
5. இந்திரனுடன் ஓராசனத்திருந்தவன்.
6. கூற்றுக்கு வழக்குரைத்த கிள்ளிவளவன்.
7. மாந்தாதா.
8. பகீரதன்.
9. தசரதன்.
10. இராமன்.
11. சுராகுரு.
12. முதுமக்கட்சாடி முதலோன்.
13. தூங்கெயி லெறிந்தவன்
14. சமுத்திரசித்து.
15. காந்தன்.
16. வில்லால் நடுவுள்ள வெற்பெடுத்தவன்.
17. சிபி.
18. கரிகாலன்.
19. நாககன்னிகையை மணந்த கிள்ளிவளவன்.
20. செங்கணான்.
21. மார்பில் கூசு புண்கொண்டவன்.
22. பிரமவரக்கன் மார்பு பிளந்து தில்லை பார்த்தவன்.
23. பராந்தகன்.
24. இராசராசன்.
25. கங்கைகொண்டசோழன்.
26. குலோத்துங்கன் I.
27. விக்கிரமன்.
28. குலோத்துங்கன் II.

இராசராசனுலாவின்படி.

1. பிரமன்.
2. காசிபன்.
3. சூரியன்.
4. மனு.
5. அவனி புறவாழி முட்டப்புரந்தவன்.
6. அரிச்சந்திரன்.
7. மாந்தாதா.
8. சிபி.
9. சகரன்.
10. பகீரதன்.
11. இரகு.
12. ககுத்ஸ்தன்.
13. தசரதன்.
14. இராமன்.
15. தூங்கெயிலெறிந்தவன்.
16. சமுத்திரசித்து.
17. காந்தன்.
18. நாககன்னிகையைமணந்தவன்.
19. கரிகாலன்.
20. செங்கணான்.
21. மண்ணார்பில் கூசு புகொண்டவன்.
22. பராந்தகன்.
23. இராசராசன் I.
24. கங்கைகொண்ட சோழன்.
25. இராசாதித்தன்.
26. இராசேந்திரதேவன்.
27. வீரராசேந்திரன்.
28. குலோத்துங்கன் I.
29. விக்கிரமன்.
30. குலோத்துங்கன் II.
31. இராசராசன் II.

பிரகடனம்.

பெருந்தேவனுர்—பாரத வெண்பா: இனிய பாட்டும் இடையிடையே அழகிய வசனமுமாக வுள்ளது; யாவரும் படித்து இன்புறத்தக்கது. இப்புத்தகம் முழுதுங் கிடைக்காமையால், கிடைத்த அளவும் பரிசோதித்து விஷயசூசிகை, பாட்டுமுதற்குறிப்பகராதி முதலியன சேர்த்து, அழுத்தமும் பளபளப்பும் வாய்ந்த கடிதத்தில் அச்சிடப்பெற்றிருக்கிறது. 830 பாட்டும் வசனமுங் கொண்ட உத்தியோக, வீடும, ரூ. அ.
துரோண பருவங்கள்: உயர்ந்த கலிகோ பைண்டு ... 3—2

ஷை உத்தியோகபருவ மாத்திரம் (ராப்பர்) 1—6

ஷை வீடும, துரோண பருவங்கள் (ஷை) 1—6

* கலிங்கத்துப்பரணி: அரும்பொருள் விளக்கவுரை, அரும்பதவகராதி, சோழவமிசாவளி முதலியவற்றுடன். அழகான கிலிட் பைண்டு 1–12

* கலிங்கத்துப்பரணிச் சுருக்கம்: குறிப்புரை, அபிதானவிளக்க முதலியவற்றுடன் ... ... 0—6

மூவருலா: உறுதியான ராப்பர் பைண்டு ... 0–10

ஷை டக்ஸின் பைண்டு 0–12

தூதகடோற்கசம்: (அல்லது கடோற்கசன் தூது) பாரதகதை சம்பந்தமான ஒரு சிறு நாடகம். வடமொழியிலிருந்து எளிய வசன நடையில் மொழி பெயர்க்கப் பெற்றது. ... ... 0—5

"செந்தமிழ்மந்திரம்" புத்தகசாலை,
பிராடீஸ்ரோடு, மயிலாப்பூர், சென்னை.

---

* **Approved by the Text-Book Committee.**